# காந்தியடிகளும் சோஷலிசமும்

SENTAMIL COLLEGE
4659
MADURAI.

ம.பொ.சிவஞானம்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு : 26 ஜூன், 1971.
உரிமை ஆசிரியருக்கே.

**26-6-71ல் மயிலை ஏ. வி. எம். இராசேசுவரித் திருமணமண்டபத்தில் நடைபெற்ற ம. பொ. சி.யின் 66ஆவது பிறந்த நாள் விழாவிலே அவர் எழுதிய 66ஆவது நூலாக இந் நூல் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் வெளியிடப் பெற்றது.**

**விலை ரூ. 1-50**

அச்சிட்டோர் : ஜீவன் அச்சகம், சென்னை-5.

SENTAMIL COLLEGE
4659
MADURAI.

# முன்னுரை

காந்தியடிகள் நூற்றாண்டு விழாவின் போது வெளியிட வேண்டுமென்ற கருத்துடன், யான் நடத்திவரும் 'செங்கோல்' வார இதழிலே, "காந்தியடிகளும் சோஷலிசமும்" என்ற தலைப்புடன் தொடர் கட்டுரை எழுதினேன். ஆனால், எதிர்பாராத விதமாக அப்போது இந்நூலை வெளியிட இயலவில்லை. எனது 66 ஆவது பிறந்த நாளிலேனும் இந்நூலை வெளியிட முடிந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

யான் எழுதிய நூல்கள் இதுவரை 65 வெளிவந்துள்ளன. இது, 66வது நூலாகும்.

சிலர், காந்தியடிகளை வாழ்த்திக் கொண்டே—அவருடைய பக்தராக இருந்து கொண்டே சோசலிசத்தை எதிர்க்கின்றனர். தாய்மொழியிலே கல்வி போதிப்பதை எதிர்த்துக் கலகம் செய்கின்றனர். மாநில சுயாட்சிக் கோரிக்கையை மறுக்கின்றனர். சோசலிசம் பேசுவோரை—தாய்மொழியில் கல்வி தர வேண்டுமென்போரை — மாநிலங்களுக்குச்

சுயாட்சி கோருவோரைக் காந்தியத்தின் எதிரி களாகவும் வருணிக்கின்றனர். பத்திரிகை போன்ற பிரசார சாதனங்கள் அவர்களிட மிருத்தலால், அவர்களுடைய பொய்ப் பிர சாரத்திலே மக்கள் மயங்குகின்றனர். அந்த மயக்கத்திலிருந்து மக்களை விடுவிப்பதற்கான ஒரு சிறு முயற்சிதான் இந்நூல்.

இதனை வெளியிட்ட இன்ப நிலையத் தாருக்கு எனது நன்றி.

சோசலிசத்தில் அழுத்தமான பற்றுடைய தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இந்நூலை வெளியிடுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

*சென்னை*
*19-6-71*

ம. பொ. சிவஞானம்.

# காந்தியடிகள் சோஷலிசத்தின் பகைவரா ?

காங்கிரஸ் கட்சியானது இரண்டாகப் பிளவுபட்டதன் காரணமாக "சோசலிசம்" என்ற கொள்கை பாரத நாட்டின் முன்னணிப் பிரச்னையாகி விட்டது. காங்கிரஸ் கட்சி பிளவுபட்டதற்கே சோசலிசம்பற்றிக் கட்சிப்பெருந் தலைவர்களிடையே தோன்றிய கருத்து வேற்றுமைதான் காரணம் என்றும் சொல்லப்படுகின்றது. திருமதி. இந்திரா காந்தியின் தலைமையில் உள்ள இந்திய அரசானது, நாட்டை சோசலிசப் பாதையில் நடத்திச் செல்வதிலே தீவிரங் காட்டிவரக் காண்கின்றோம்.

இப்படி ஒரு நல்ல சூழ்நிலை—முற்போக்கான மாறுதல் ஏற்படுவது பழம்பெரும் தேசபக்தர்களிலே சிலருக்குப் பிடிக்கவில்லை. அதனால், சோசலிசத்தை எதிர்ப்பதையே தங்கள் கொள்கையாகக் கொண்டு, அதற்கெனவே கூட்டணி அமைக்க முற்பட்டிருக்கின்றனர். நாட்டின் விடுதலைப் போராட்ட சரித்திரத்திலே இவர்களுக்குள்ள இடம் மிகவும் மதிப்பிற்குரியதாகும். விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு இவர்கள் செய்துள்ள தியாகம் நம்மால் மறக்க முடியாததாகும். இவர்களிலே சிலர் மூதறிஞர்களாகவும், மிகவும் முதியோராகவும் விளங்குகின்ற காரணத்தால், இவர்களுடைய சொல்லுக்கு நாட்டு மக்களிடையே இன்னமும் ஓரளவு செல்வாக்கு இருந்து வருவதைக் காண்கின்றோம்.

## கருத்துப் போர் !

சோசலிசத்தை ஆதரித்தும் எதிர்த்தும் கருத்துப் போர் நடந்து வருவதனை நான் வெறுக்கவில்லை.

*1694—1*

விரும்பி, வரவேற்கிறேன். ஜனநாயக நாட்டில் இத் தகைய கருத்துப் போர் தவிர்க்க முடியாததாகும். பாரதப் பெருநாடு மகத்தான ஒரு திருப்பத்தை அடையும் கட்டத்திலே இருந்து வருகின்றது. ஆகவே, சோசலிசத்தின் நுணுக்கங்களேயும் பலன்களேயும் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு சோசலிசத்தை எதிர்ப் போர் தொடங்கியுள்ள கருத்துப்போர் பெரிதும் பயன் படுகின்றது. துரதிருஷ்டம் என்னவென்ருல், சோசலிசத்தை எதிர்ப்போர், தங்கள் எதிர்ப்புக்கு ஆதரவாகக் காந்தியடிகள் பெயரையும் பயன்படுத்திக்கொள்வதாகும். ஆம்; புது உலகம் படைக்க அயராது பாடுபட்ட அடிகளாரைக்கூட சோசலிசத்தை விரும்பாதவராக நமக்கு அறிமுகப்படுத்துகின்றனர் சோசலிசத்தின் எதிரிகள்.

ஒரு கொள்கையை ஒப்புக்கொள்வோர்கூட, அதனேச் செயல்படுத்தும் வழிமுறைகளிலே தங்களுக்குள்ளேயே கருத்துப்போர் நடத்துவது உண்டு. அந்த வகையில், சோசலிசத்தை விரும்புவோரும் கோஷ்டி பிரிந்து வாதிட நேரிடுகின்றது. இந்தக் கோஷ்டி வேறுபாடு நாளடைவில் கட்சி வேறுபாடாகவும் மாறி விடக் காண்கின்ருேம். சோசலிசத்தை உண்மையாக விரும்புவோரும் பல்வேறு கட்சிகளாகப் பிரிந்து பூசலிடுகின்றனர்.

## ‘சிண்டிகேட்’ தலேவர்கள்

சிலர், உள்ளத்தால் முதலாளித்துவத்தை விரும்பி, உதட்டளவில் சோசலிசம் பேசுகிருர்கள். இவர்கள், பழம்பெரும் தேசபக்தர்களாகவும், காந்தியவாதிகளாகவும், ஆற்றல் மிக்க தலேவர்களாகவும் மக்களிலே ஒரு சாராரால் கருதப்படுகின்றனர். இவர்களுடைய அணிதான் ‘‘சிண்டிகேட்’’ எனப் பெயர் பெற்றிருக்கிறது. சிண்டிகேட் தலேவர்களில் ஒருவரான திரு. கு. காமராசர், தமது சோசலிச விரோதப் பிரச்சாரத்திற்கு காந்தியடிகளின் பெயரையும் பயன்படுத்திக் கொள்

கின்றூர். சட்டத்தின் மூலமாக சோசலிசம் நடைமுறைக்கு வருவதனை காந்தியடிகள் வெறுத்ததாகத் திரு. கு. காமராசர் கூறிவருகின்றூர். ஏறக்குறைய இதே கருத்தைத்தான் சமீப சில ஆண்டுகளாக சுதந்திராக் கட்சித் தலைவர் ராஜாஜி அவர்களும் நாட்டில் பரப்பி வருகிறூர்.

காந்தியடிகளை சோசலிசத்தின் எதிரியாக நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துவது அவருடைய ஆன்மாவுக்குச் செய்யும் துரோகமாகும். அந்தப் புனிதரின் புகழுக்கு ஏற்படுத்தும் களங்கமுமாகும். இந்தப் பிரச்சாரம் வலுப் பெறுமானுல், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாதாரணப் பொதுமக்கள் காந்தியடிகளை தவருகப் புரிந்துகொள்ள நோந்துவிடும் என்று நான் அஞ்சுகின்றேன்.

கார்ல் மார்க்ஸ் அவர்கள் தமது ‘காபிடல்’ என்னும் நூலில் வலியுறுத்தியுள்ள விஞ்ஞான சோசலிசத்தை காந்தியடிகள் விரும்பினுரா என்பது வேறு விஷயம். அவர் எதிலுமே தமக்கென ஒரு தனிப் பாதையை வகுத்துக் கொண்டவர். எந்த ஒன்றிலும் தத்துவ அளவில் பிற அறிஞர்களோடு ஒன்றுபடும் இடத்தும் அதனைச் சாதிப்பதற்கான வேலைத் திட்டங்களிலே அடிகள் வேறுபடக்கூடியவர். இது உலகறிந்த உண்மை. சோசலிசத்திலும் இதே போக்கைக் காந்தியடிகள் கடைப்பிடித்தார். விஞ்ஞான ரீதியான சோசலிசத்தை விரும்புவோரிடம் அவர் கொள்கையளவில் ஒன்றுபட்டார். ஏழை—பணக்காரர் என்னும் வர்க்க வேற்றுமை அற்ற உலகத்தைப் படைக்கவேண்டும் என்பதிலே அவர் ஆர்வம் கொண்டிருந்தார். செல்வம் ஒருபுறமாகக் குவிந்து வருவதனை அவர் அடியோடு வெறுத்தார். தன்னலத்திற்காகக் கோடிக் கணக்கான மக்களின் உழைப்பைக் கவர்ந்து ஒரு சிலர் சுகபோக வாழ்க்கை நடத்துவதனை அடிகள் பழித்துப் பேசினுர். “நான் ஒரு சோசலிஸ்ட்” என்றும் அடிகள் தம்மை வருணித்துக் கொண்டார். அப்படிப்பட்டவரை சோசலிசத்தின்

எதிரியாக இந்நாளில் சிலர் வருணிப்பது மிகவும் பாவ மான செயலாகும்.

## கிராம ராஜ்யம்!

காந்தியடிகள், சுதந்திர இந்தியாவைக் காண்ப தொன்றை மட்டுமே முதலும் முடிவுமான கொள்கை யாகக் கொண்டிருக்கவில்லை. சுரண்டலற்ற இந்தியா வைப் படைப்பதிலும் அவர் அக்கரை கொண்டிருந்தார். அவர் காண விரும்பிய "ராம ராஜ்யம்" என்பது சுரண்டலற்ற சமுதாயமாகும். தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கிராமக் கைத்தொழில் வளர்ச்சி, சாதி ஒழிப்பு, சமயங்களிடையே ஒற்றுமை ஆகிய அடிகளார் வலியுறுத்திய ஆக்க வழிப் பணிகள் எல்லாம் சோசலிச சமுதாயத்தைப் படைப்பதற்கான வேலைத் திட்டங் களே யாகும்.

அடிகளார், விஞ்ஞான ரீதியான சோசலிசத்தை வலியுறுத்தி வரும் சோசலிஸ்டுகளோடு நடைமுறைத் திட்டங்களில் கருத்து வேற்றுமை காட்டி வந்தார். இதனை மிகைப்படுத்திக் கூறி, சோசலிசத்தின் விரோதி யாகவே அவரை அறிமுகப்படுத்த முயல்கின்றனர் இந் நாளிலே சிலர்.

சோசலிசத்தை விரும்பாதவர்கள் அதனைத் தங்கள் கொள்கையாகவே சொல்ல அவர்களுக்கு உரிமை யுண்டு. காந்தியடிகள் விரும்பியதைத்தான் நாடு விரும்ப வேண்டும்; அவர் விரும்பாததை எல்லாம் நாடு வெறுக்கவேண்டும் என்ற நியதி எதுவும் இல்லை. அத் தகைய ஒரு நியதி நீதியுமாகாது. காந்தியடிகள்கூட தம் கருத்துக்களை மற்றவர்கள் அப்படியே ஏற்றுக் கொண்டு, கருத்து வேற்றுமை காட்டாமல் கடைப் பிடிக்க வேண்டுமென்று கூறவில்லை. தம்மோடு கருத்து வேற்றுமை கொண்டவர்களை அடிகள் பெரிதும் மதித் தார். அவர்களோடு விவாதிப்பதைத் தமது கடமை யாகக் கருதினார். கொள்கை வேறுபாடுடையவர்களை யும் நண்பர்களாகக் கொண்டிருந்தார். ஆகவே, சோச

லிசத்தை விரும்பாத பெரியவர்கள், காந்தியடிகளிடம் அடைக்கலம் புகவேண்டிய அவசியமில்லை. அவர் பெயரைக் கேடயமாகக் கொண்டு சோசலிஸ்டுகளிடம் போர் நடத்த முயல்வது பலவீனத்தின் அறிகுறியாகும்.

## காங்கிரசைக் கலைக்க விரும்பியதேன்?

காந்தியடிகள் நாடு சுதந்திரத்தை அடைந்த ஆண்டிலேயே காங்கிரசைக் கலைத்துவிட வேண்டுமென்று வற்புறுத்தினர். அதாவது, காங்கிரசை "லோக் சேவா சங்கமா"க மாற்றிவிட விரும்பினர். இந்த விருப்பத்திற்கான விளக்கங்களைத் தருவதற்குள் அவருடைய ஆயுள் முடிந்துவிட்டது. காங்கிரசைக் கலைத்துவிட காந்தியடிகள் விரும்பியது அந்த அமைப்பு சோசலிச விரோதிகள் கையில் சிக்கிவிடக் கூடுமென்ற ஐயத்தினுலேயாகும். அவருடைய ஐயத்தை மெய்யாக்கிவிட சிண்டிகேட் தலைவர்கள் முயல்வதனை இன்று கண்கூடாகக் காண்கின்றோம்.

பிரிட்டிஷார் வெளியேறியதோடு மக்களுடைய உரிமைப் போர் முடிந்துவிட்டதாக காமராசர்களும் மொரார்ஜிகளும் கருதலாம். ஆனல், காந்தியடிகள் அப்படிக் கருதவில்லை. அன்னியர் வெளியேறியதால் கிடைத்த அரசியல் விடுதலையைப் பொருளாதார விடுதலையாக மலர்விப்பதற்கும் ஒரு போராட்டம் தேவைப்படுகிறதென்பதனை அடிகள் ஐயமற உணர்ந்திருந்தார். ஆம்; 1947 ஆகஸ்டு 15, போர் முடிந்த நாளல்ல; போர் முறையும் போர் முனையும் மாறும் நாள் என்று அடிகள் கருதினர்.

சாதிவழிச் சிறுபான்மையினர் மீது பெரும்பான்மைச் சாதியினர் ஆதிக்கம் செலுத்துவது; மத வழிச் சிறுபான்மையினர்க்கு பெரும்பான்மை மதத்தினர் கொடுமை இழைப்பது; பின்தங்கியுள்ள மாநிலத்தின் மீது முன்னேறிவிட்ட மாநிலம் செல்வாக்குச் செலுத்துவது; கிராமங்களின் வளத்தைக் கொண்டு நகரங்கள் கொழுத்து வளர்வது; உயர்தரக் கல்வி கற்ற சாதி

யினர் கல்வி அறிவற்ற எளிய மக்களை இழிவாக நடத்துவது ஆகிய இத்தனை ஆதிக்கங்களையும், அறவே அழித்தொழிக்க அடிகள் ஆர்வங்கொண்டிருந்தார். அதற்கான பெரும் போர் ஒன்றைத் தொடங்குவதற்கும் காங்கிரசையே பயன்படுத்த அவர் விரும்பினார்.

தேர்தல் களத்திலே மக்களின் வருங்கால நல்வாழ்வை நிர்ணயம் செய்வதற்கான நல்ல சூழ்நிலை நாட்டில் இல்லை என்பதனை அடிகள் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார். அதனால், பார்லிமெண்டரி அரசியலிலே நம்பிக்கை உடைய காங்கிரஸ்காரர்களைத் தனியே ஒதுக்கிவிட அவர் விரும்பினார். பார்லிமெண்டரித் துறைக்குப் போகாமல் நாட்டில் சமூக—பொருளாதார மாறுதல்களை உருவாக்குவதற்கு ஆக்கவழியில் பாடுபடுவதற்கான ஒரு புதிய இயக்கத்தை—சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் எழுச்சியை ஏற்படுத்த அடிகள் விரும்பினார். இந்த மாறுதல்களை விரும்பாதவர்களின் ஏகப் பிரதிநிதியாகக் கோட்சே தோன்றி அடிகளாரின் உயிரைக் குடித்துவிட்டான்.

காங்கிரசைக் கலைக்கவேண்டும் என்பதற்காக காரியக் கமிட்டியின் முன்பு வைப்பதற்கு அடிகள் தயாரித்திருந்த தீர்மானத்தைப் படித்தால், சோசலிச சமுதாயத்தைப் படைப்பதிலே அவருக்கிருந்த நம்பிக்கை நன்கு புலனாகும். இதோ, அந்தத் தீர்மானம் :

''இந்தியா இரண்டாகப் பிளவுபட்டபோதிலும், காங்கிரஸ் வகுத்த வழிகளின் மூலம் அது அரசியல் சுதந்திரத்தை அடைந்துவிட்டது. இதன் பிறகு, பிரசார சாதனமாகவும் சட்டசபையின் நிர்வாகக் கருவியாகவும் உள்ள காங்கிரஸ், அதன் இன்றைய உருவிலும் முறையிலும் தனது உபயோகத்தை இழந்துவிட்டது. இந்தியாவிலுள்ள ஏழு லட்சம் கிராமங்களுக்கும் இன்னும் சமுதாய—தார்மிக—பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்கவில்லை. ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் முன்னேற்றத்தில் இராணுவ அதிகாரத்தின் மீது எளிய மக்களின் அதிகாரம் மேலோங்கி நிற்பதற்கான

போராட்டமும் நடைபெறுவது உறுதி. அரசியல் கட்சிகளுடனும் வகுப்புவாத நிறுவனங்களுடனும் போட்டியிடுவதிலிருந்து அதை விலக்க வேண்டும். இவற்றிற்காகவும், இவைபோன்ற பிற காரணங்களுக்காகவும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தற்போதுள்ள காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கலைத்து, கீழ்க்கண்ட விதிகளின் கீழ், அவ்வப்போது நேரத்திற்கு ஏற்றவாறு அவற்றை மாற்றிக்கொள்ளும் அதிகாரத்துடன், லோக் சேவா சங்கமாக மலர்வதென்று தீர்மானிக்கிறது''

இத்தீர்மானம், காங்கிரஸ் மகாசபையைக் கலைத்து விட்டு, அதன் இடத்தில் ''லோக் சேவா சங்கம'' நிறுவுவதற்காகக் காந்தியடிகள் எழுதியதாகும். இந்தத் தீர்மானத்தை எழுதிய மை உலர்வதற்கு முன்பே கோட்சே தோன்றிவிட்டான்! அடிகள் மறைந்த பின்னர் இந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்தும் துணிவு அவருடைய சீடர்களிலே எவருக்குமே இல்லை. ஆம்; பண்டித நேருவுக்குங்கூடத்தான்! ஒருகால், அவரும் இதனை விரும்பவில்லையோ என்னவோ! அடிகள் கூறியாங்கு அன்றே காங்கிரசைக் கலைத்திருந்தால், அதனுடைய புனித வரலாறு அனைத்துக் கட்சிகளாலும் போற்றப்பட்டிருக்கும். சுதந்திரப் போராட்ட வரலாறும் பாரதத்தின் வேதப் புத்தகமாக மதிக்கப்பட்டிருக்கும் நாடு விடுதலை பெற்ற ஆகஸ்டுப் பதினைந்தாம் நாள் அனைத்துக் கட்சியினராலும் கொண்டாடப்படும் ''தேசியப் பெருநாள்'' ஆகியிருக்கும்.

காங்கிரஸ் கலைக்கப்பட்டதன் பின்னரும் காந்தியடிகள் வாழ்ந்திருந்தால், சோசலிசத்திற்கான சாத்வீகப் போராட்டம் அவருடைய தலைமையிலேயே தோன்றியிருக்கும். அப்படித் தோன்றியிருந்தால், நாடு இன்றுள்ளதை விடவும் நல்ல நிலையில் முன்னேற்றமடைந்திருக்கும்.

காங்கிரசைக் கலைப்பதற்காக அடிகளார் தயாரித்த தீர்மானத்திலே,

"இந்தியாவிலுள்ள ஏழு லட்சம் கிராமங்களுக்கும் இன்னும் சமுதாய—தார்மீக—பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்கவில்லை.

"ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் முன்னேற்றத்தில் இராணுவ அதிகாரத்தின் மீது சாமான்ய மக்களின் அதிகாரம் மேலோங்கி நிற்பதற்கான போராட்டம் நடைபெறுவது உறுதி."

என்னும் கருத்துக் காணப்படுவதனை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும். ஆம்; ஆகஸ்டுப் பதினைந்தில் நாடு பெற்றது வெறும் அரசியல் சுதந்திரம்தான்; பொருளாதாரச் சுதந்திர மன்று. அதனை அடிகள் ஐயந்திரிபற அறிந்து வைத்திருந்தார். நாட்டு மக்களுக்கும் அறிவுறுத்தினார்.

'பொருளாதாரச் சுதந்திரம்' என்பதற்கு விளக்கம் தருவதுபோல,

"இந்தியாவிலுள்ள ஏழு லட்சம் கிராமங்களுக்கும் இன்னும் சமுதாய—தார்மீக பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்கவில்லை."

என்ற அழுத்தந் திருத்தமான கொள்கையை காங்கிரஸ் கலைப்புத் தீர்மானத்திலே வலியுறுத்தி யுள்ளார் அடிகள். ஏழு லட்சம் கிராமங்களின் நலன்தான் இந்தியாவின் நலன் என்பதும் இதிலே தெளிவுபடுத்தப்படுகின்றது. ஆம்; காந்தியடிகள் விரும்பிய சோசலிசப் புரட்சி கிராம மக்களில் மிகப் பெரும்பாலோரான விவசாயிகளிடமிருந்துதான் ஆரம்பமாக இருந்தது என்பதனையும் இங்கு நினைவூட்டுகின்றோம்.

அடிகள், ஜனநாயகத்தை மனமார விரும்பினார். ஆம்; இராணுவத்தைக் கொண்டு நாட்டில் அமைதியைக் காத்துவரும் ஆட்சி ஜனநாயக ஆட்சியாகாது என்பது காந்தியச் சித்தாந்தம். "இராணுவ சர்வாதிகாரமா, மக்கள் சர்வாதிகாரமா?" என்னும் வினாவுக்கு, 'மக்கள் சர்வாதிகாரந்தான்' என்று விடையளிக்கிறது காந்தியம். காங்கிரஸ் கலைப்புத் தீர்மானத்திலே,

"ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் முன்னேற்றத்தில் இராணுவ அதிகாரத்தின் மீதுசாதாரண மக்களின் அதிகாரம் மேலோங்கி நிற்பதற்கான போராட்டம் நடைபெறுவது உறுதி."

என்றுள்ள வாசகத்தின் மூலமாக "மக்கள் சர்வாதிகாரம்" என்னும் கருத்தை வலியுறுத்துகின்றார் காந்தியடிகள். அவர் கருத்திலே, "மக்கள்" என்போர் ஏழு லட்சம் கிராமங்களில் உள்ள விவசாயிகள் தான் என்பதனை இங்கு இன்னொரு முறையும் நினைப்பூட்டுகின்றோம்.

## பதவி விரும்பாமை

கிராம மக்களுக்கு சமுதாய—தார்மீக—பொருளாதாரச் சுதந்திரத்தைத் தேடித் தருவதற்கான, இராணுவ சர்வாதிகாரத்திற்கு இடமற்ற மக்கள் சர்வாதிகாரத்தைத் தோற்றுவிப்பதற்கான போராட்டத்தை நடத்தப் பொறுப்பேற்கும் ஒரு இயக்கம் அல்லது அமைப்பு தேர்தலில் போட்டியிடும் பார்லிமெண்டரித் துறைக்குப் புறம்பானதாக இயங்க வேண்டுமென்று அடிகள் கருதினர். பார்லிமெண்டரித் துறை என்பது சறுக்கலான இடம் என்றே அடிகள் கருதினர். விடுதலைப் போராட்டத்தின்போதுகூட சட்டசபைப் பிரவேசத்தை அடிகள் நீண்ட நெடுங்காலம் எதிர்த்து வந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். 1936ல் பம்பாயில் கூடிய காங்கிரஸ் மகாசபையானது சட்டசபைக்குள் பிரவேசிக்கவும், வாய்ப்பு நேருமானல் மாநிலங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவும் தயாரென்று தீர்மானம் நிறைவேற்றியபோது அடிகள் காங்கிரசிலிருந்தே விலகினர்.

அரசியல் விடுதலைப் போராட்டத்தில் கடைப்பிடித்த இந்த நடைமுறையையே, சமுதாய—பொருளாதார விடுதலைப் போராட்டத்தில் கடைப்பிடிக்க வேண்டுமென்று காந்தியடிகள் கருதினர். அதனல், காங்கிரசின் இடத்திலே தோற்றுவிக்கப்பட வேண்டிய லோக் சேவா

சங்கமானது பார்லிமெண்டரித் துறைக்கு வெளியிலே தான் இயங்கவேண்டும் என்பதனையும் காங்கிரஸ் கலைப்புத் தீர்மானத்திலேயே தெளிவுபடுத்தினர். அந்த வாசகத்தை இன்னொரு முறையும் பார்ப்போம்.

"அரசியல் கட்சிகளுடனும், வகுப்புவாத அமைப்பு களுடனும் போட்டியிடுவதி லிருந்து லோக் சேவா சங்கம் விலகியிருக்க வேண்டும்."

தாம் கொடுக்கும் இந்தத் திட்டம் இறுதியான தென்று அடிகள் கருதவில்லை. இதனை ஒரு முன்னேடித் திட்டமாகவே அவர் அறிமுகப்படுத்தினர். காலப்போக் கில் இதில் சில மாறுதல்கள் ஏற்படுவதற்கும் இட முண்டு என்று எண்ணியவர்போல,

"......இவற்றிற்காகவும், இவைபோன்ற பிற காரணங்களுக்காகவும், அகில இந்திய காங் கிரஸ் ஸ்தாபனத்தைக் கலைத்து, கீழ்க்கண்ட விதிகளின் கீழ், அவ்வப்போது சந்தர்ப்பத் திற்கு ஏற்றவாறு அவற்றை மாற்றிக்கொள் ளும் அதிகாரத்துடன் லோக் சேவா சங்கம் தோற்றுவிக்கப்பட வேண்டும்."

என்று தீர்மானத்திலேயே தெளிவுபடுத்தினர். காலப் போக்கில் ஏற்படக்கூடியவையாக காந்தியடிகள் கருதிய மாறுதல்கள் சமுதாய—பொருளாதாரப் புரட்சியை மேலும் முறுக்கேற்றுவதாகத்தானே இருக்க முடியும்.

## போராட்டமின்றி சோஷலிசமில்லை !

இங்கு, காந்தியவாதிகள் என்று தங்களைக் கருதிக் கொள்வோருக்கு ஒன்றை நினைப்பூட்டுகின்றேம். காங் கிரஸ் கலைப்புத் தீர்மானத்திலே, "சமுதாய—பொருளா தார விடுதலைக்காக ஒரு போராட்டம் நடைபெறுவது உறுதி" என்று அடிகள் கூறியிருப்பதால், போராட்ட மின்றி, சட்ட ரீதியான வழிகளாலேயே சோசலிச சமு தாயத்தைக் காண முடியாதென்பது அவரது கருத் தென்பது புலனுகின்றது. அந்தப் போராட்டமும்

பார்லிமெண்டரித் துறைக்கு வெளியேயுள்ள லோக் சேவா சங்கத்தால் நடத்தப்படுமென்று தீர்மானம் கூறுவதால், அமைச்சரவையாலோ, பார்லிமெண்டாலோ, மாநிலச் சட்டமன்றங்களாலோ ஒரு போராட்டத்தின் தூண்டுதலின்றி, சோசலிசச் சமுதாயம் மலர்ந்துவிட முடியாது என்பதனையும் அடிகள் வற்புறுத்தியிருப்பது புலனாகின்றது.

இந்தியாவைப் போன்ற ஒரு விவசாய நாட்டில், உண்மையான சோசலிசப் புரட்சி கிராம மக்களிடையிலிருந்துதான் ஆரம்பமாக வேண்டும். ஆயுத பலத்தால் புரட்சி நடத்த விரும்புவோர் வேறு வகையில் சிந்திக்கலாம். ஆனால், சாத்விகப் புரட்சியில் நம்பிக்கை கொண்ட காந்தியவாதிகள், கிராம வாசிகளைக்கொண்டு தான் சோசலிசப் புரட்சிக்குப் பாடுபட வேண்டும்.

> "நாம் கோடானு கோடி ஏழை மக்கள் கொண்ட ஒரு ஜன சமூகமாவோம். அவர்களுடைய குரலை யாரும் கேட்பதில்லை. நகரங்களிலுள்ள வாயாடிகளுடைய குரல்தான் கேட்கின்றது. அதுதான் கோடானு கோடி இந்திய விவசாயிகள் குரல் என்று நாம் தவறாக எண்ணிவிடக் கூடாது." ['அரிசன்', 17—8—47.]

சோசலிசப் போராட்டம் மட்டுமல்லாமல், சுதந்தரப் போராட்டத்திற்கான முயற்சிகளும் கிராமங்களிலிருந்தே—ஏழை மக்களிடமிருந்தே தொடங்க வேண்டுமென்று காந்தியடிகள் கூறினார். அதனால், காங்கிரஸ் காரர்களைப் பார்த்து, "கிராமங்களுக்குப் போங்கள்" என்று ஆணையிட்டார். காங்கிரஸ் மகாசபையின் வருடாந்தரக் கூட்டத்தை கிராமப் பிரதேசங்களிலே கூட்டுமாறு காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு அறிவுரை கூறினார். தமது ஆசிரமத்தைக்கூட, சேவாக் கிராமத்தில் அமைத்துக் கொண்டார். தவிர்க்க முடியாத வகையில் புது டில்லியில் தங்கி இருக்க நேர்ந்தபோதும், தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் 'பங்கி காலனி'யிலேயே இருக்க முயன்றார்.

# சோஷலிசத்தில் பற்று

இதுகாறும் இந்திய தேசிய காங்கிரஸ் மகா சபையை லோக் சேவா சங்கமாக மாற்றுவதற்காகக் காந்தியடிகள் தயாரித்திருந்த தீர்மானத்தின் உட்பொருளை அறிந்தோம். இனி, காந்தியடிகளுக்கு "சோசலிசம்" என்னும் சித்தாந்தத்திலிருந்த உடன்பாட்டையும் உறுதிப்பாட்டையும் ஆராய்வோம்.

"சோசலிசம்" என்ற சொல் ஐரோப்பாவில் பிறந்து, ருஷ்யாவில் நடந்த வர்க்கப் புரட்சியில் வென்று, இன்று உலகெங்கும் வியாபித்துள்ளது. வேறு பலவற்றிலே சுதேசியத்தை வற்புறுத்தி வந்த காந்தியடிகள், இந்த விதேசச் சொல்லுக்கு மாற்றுப் பெயர் காண முயலாமல், இதனை அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டார். இந்தச் சொல் அவரைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

> "எனக்குத் தெரிந்த மட்டில் சோசலிசம் என்பது மிகவும் அழகான சொல்."
>
> *[காந்தி நூல், தொகுதி 6; பக். 137]*

என்று அடிகள் கூறியுள்ளார்.

## ராஜாஜியின் போக்கு

அடிகளார் வாழ்ந்த காலத்திலே, அவருடன் நெருங்கிப் பழகிய—அவரால் 'என் மனச்சாட்சியின் காவலர்' என்று புகழப்பெற்ற ராஜாஜி' இன்று 'சோசலிசம்' என்ற சொல்லைக்கூட ஏற்க மறுக்கிறார். 'நான் சோசலிசத்தின் முதல் நம்பர் விரோதி' என்று கூடத் தன்னை வருணித்துக் கொள்கிறார். சோசலிசத்தை எதிர்ப்பதற்கென்றே கட்சி நிறுவிச் செயல்படுகிறார். இது, காந்திய நெறியிலிருந்து பிறழ்ந்த நிலையாகும். அடி

களாரோ, சோசலிச எதிர்ப்புக்கு எதிர்ப்பு காட்டி யுள்ளார்.

பிரிட்டனிலுள்ள தொழிற்கட்சி சோசலிசக் கொள் கையுடையதாகும். அந்த நாட்டின் மற்ருெரு பெரிய கட்சியான கன்சர்வேடிவ் கட்சி சோசலிசத்தை ஏற்க வில்லே; எதிர்க்கவும் செய்கிறது. கன்சர்வேடிவ் கட்சித் தலேவர் சர். வின்ஸ்டன் சர்ச்சில் என்பார், ஒருமுறை தொழிற்கட்சியின் சோசலிசப் போக்கைக் கண்டித்துப் பேசியபோது, அவருக்குப் பதிலளித்துக் காந்தியடிகள் கூறியது வருமாறு:

> "சோசலிசம்' என்ருல் சர்ச்சிலுக்குப் பிடிக் காது. தொழிற்கட்சியோ சோசலிசமாகத்தான் இருக்க முடியும்.
>
> "சோசலிசம்' என்பது ஒரு மகத்தான கொள்கை. அதை எந்தவிதத்திலும் கண்டிக்க முடி யாது. சரியான விதத்தில் பயன்படுத்த வேண் டும் என்று மட்டுமே கூறமுடியும்.
>
> "சோசலிஸ்டுகள் கெட்டவர்களாக இருக் கலாம். ஆனுல், சோசலிசம் கெட்டதாக இருக்க முடியாது"
>
> ['அரிசன்,' 19-10-47.]

அடிகளாரின் இந்தக் கருத்து, அவர், 'சோசலிசம்' என்ற சொல்லேமட்டுமல்லாமல், வரலாற்று வழியே அது கொண்டுள்ள பொருளேயும் ஏற்றுக்கொண்டார் என்பதனேப் புலப்படுத்துகின்றது. அடிகளார் நிலே இவ்வளவு தெளிவாக இருந்தும், சோசலிச விரோதி களிலே சிலர், அவருடைய பெயரையும் தங்கள் கைக் கேடயமாகப் பயன்படுத்தி வருவது விந்தையே!

## எல்லேக் காந்தி கூறுகிருர்!

உண்மையான காந்தியவாதி எவரும் சுத்தமான சோசலிஸ்டாகத்தான் இருக்க முடியும். சோசலிசத்தை

வெறுப்போர், தங்களைக் காந்தியவாதிகள் என்று கூறிக்கொள்ள உரிமையற்றவர்களாவர். இதோ, உண்மையான காந்தியவாதியாக இன்று நம்மிடையே வாழ்ந்துவரும் எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் பேசுகிறார், கேளுங்கள் :

> "இந்தியாவில் சோசலிசம் மலரவேண்டும். அரசாங்கத்தில் சோசலிசத்தின் ரேகைகள் புலப் படாவிட்டால், சோசலிசம் என்பது, உதட்டளவில் தான் இருக்கும்."
>
> *[24-11-69ல் டில்லி நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் பேசியது.]*

சோசலிசத்தை எதிர்ப்போரிலே சிலர், அது தனி நபர்களுக்குச் செய்யப்படும் உபதேசமாக மட்டுமே இருந்துவிட வேண்டும்; அரசாங்கத்தின் துணை கொண்டு மக்கள் மீது திணிக்கப்படக் கூடாது" என் கின்றனர். எல்லைக் காந்தியோ, "அரசாங்கத்தில் சோச லிசத்தின் ரேகை புலப்படவேண்டும்" என்று உறுதி யாகக் கூறுகின்றார். "அரசாங்கமே சோசலிசத்தை அமுல் நடத்த முன் வராதவரை, சோசலிசம் என்பது உதட்டளவில்தான் இருக்கும்" என்கின்றார். எவ்வளவு தெளிவான பார்வை! இவரன்றோ உண்மைக் காந்திய வாதி!

## திருக்குறளில் சோசலிசம் !

சிலர் வளமாக வாழ்வதும், பலர் வறுமையால் வாடு வதுமான வர்க்க வேற்றுமையை வெறுக்கும் உணர்வு இந்தியப் பெருநாட்டில் நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. ஈசோபநிஷத், திருக்குறள் போன்ற வடமொழி—தென்மொழி இலக்கியங்களிலே அங்கு மிங்குமாக சமதர்மக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது. ஆம்; இன்றைய சோசலிசம், வர்க்க வேற்றுமையின் வரலாற்றைக் காரண—காரியங்களோடு விளக்குகிறது. வர்க்க வேற்றுமையால் காலத்திற்குக் காலம்—சகாப்

தத்திற்குச் சகாப்தம்—நூற்றாண்டுக்கு நூற்றாண்டு அடைந்து வந்துள்ள மாறுதல்களை எடுத்துக்காட்டி, அதன் விளைவாக, சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்கள் அடைந்துவரும் கொடுந்துயர்களையும் படம் பிடித்துக் காட்டுகின்றது. இவ்வளவோடு அமையா மல், வர்க்க வேற்றுமையை வேரும் வேரடி மண்ணு மில்லாமல் ஒழிப்பதற்கான வழிவகைகளையும் கூறு கின்றது. இவ்வளவையும் தன்னுள் கொண்ட இன் றைய சோசலிசத்தை "சாஸ்திரீய சோசலிசம்" அல்லது "விஞ்ஞான சோசலிசம்" என்று அழைக்கின்றனர் சோசலிஸ்டுகள்.

பாரத இலக்கியங்களிலே காணப்படும் வர்க்க வேற் றுமை வெறுப்புணர்வு, காரண காரிய ஆராய்ச்சியின் முடிவாக எழுந்ததன்று. உயிர்கள்பால் கொண்ட இரக்கத்தின் காரணமாக எழுந்ததாகும். இந்த உணர்ச்சி அரசர்களிடமோ, அமைச்சர்களிடமோ வெளிப்படாமல், வள்ளுவர் போன்ற ஆன்மிக ஞானிய ரிடமே வெளிப்பட்டிருக்கக் காண்கிறோம். ஆகவே, அதனை, "சமதர்ம உணர்வு" என்று வேண்டுமானால் சொல்லலாம்; ஆனால், இன்று சொல்லப்படும் சோசலிசம் தான் ஈசோபநிஷதத்திலும் திருக்குறளிலும் சொல்லப் படுகிறது என்று சாதிப்பதற்கில்லை.

## விஞ்ஞான சோசலிசம் !

காந்தியடிகள், நம்முடைய இலக்கியங்களில் காணப்படும் பழைய சன்மார்க்க வழிப்பட்ட சமதர்மத் திற்கும் கார்ல் மார்க்ஸ் அவர்களால் போதிக்கப்படும் விஞ்ஞான சோசலிசத்திற்கும் பாலமாக அமைகின்றார். இதனை அவரே சொல்லக் கேட்போம் !

> "இந்தியாவிலுள்ளவர்கள் சோசலிசக் கருத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கு வெகு காலத் திற்கு முன்பிருந்தே நான் சோசலிஸ்டாக இருந்து வருகிறேன்.

"என்னுடைய சோசலிசம் இயற்கையானது; எந்தப் புத்தகத்திலிருந்தும் கற்றுக்கொண்டதன்று. அகிம்சையில் எனக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையி லிருந்து இது பிறந்தது."

[கா. நூல். தொ. 6. பக். 148]

"சோசலிசமும் கம்யூனிசமும்கூட, ஈசோபநிஷத்தின் முதல் செய்யுளிலேயே விவரிக்கப்பட்டிருக்கின்றன. மனிதர் மனத்தை மாற்ற முடியும் என்பதில் சில சீர்திருத்தவாதிகள் நம்பிக்கையை இழந்தவுடன் விஞ்ஞான சோசலிசம் என்ற கொள்கை தோன்றியது என்பது உண்மை.

"விஞ்ஞான சோசலிஸ்டுகள் தீர்க்க முயலும் பிரச்னைகளைத் தீர்ப்பதில்தான் நானும் ஈடுபட்டிருக்கிறேன்."

[கா. நூல். தொ. 6; பக். 148]

"நான் தென்னுப்பிரிக்காவில் இருந்தபோதே சோசலிசத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறேன்."

[கா. நூல். தொ. 6; பக். 152]

காந்தியடிகள், மிகவும் மோசமான வர்க்க வேற்றுமை சமுதாயத்தில் நிலவி வருகிறதென்ற உண்மையை மறுக்கவில்லை; ஏற்றுக்கொண்டார். அதற்கான ஒரே பரிகாரம் சோசலிசம்தான் என்பதனையும் கொள்கையளவில் அவர் ஒப்புக்கொண்டார். இதோ, சான்று:

"இன்று மிகப் பெரும் அளவில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இருந்து வருகின்றன. பொருளாதார சமத்துவம்தான் சோசலிசத்தின் அடிப்படை.

"இன்றைய நேர்மையற்ற அமைப்பில் சிலர் செல்வத்தில் புரளுகிறார்கள்; பொது மக்களுக்குப் போதுமான உணவுகூடக் கிடைப்பதில்லை. இந்த நிலைமையில் இராம ராஜ்யம் சாத்தியமில்லை."

[கா. நூ. தொ. 6; பக். 152]

தமிழ் நாட்டிலே வள்ளுவர்—ஔவையார்—வள்ளலார் போன்ற ஞானியர், "ஏழை—பணக்காரர்" என்ற வர்க்க வேற்றுமையை வெறுத்தனர் என்றாலும், அதனை அகற்ற அவர்கள் காட்டிய வழி, 'தானம்'—'தருமம்' என்பனவாம். செல்வந்தர்களிடையே மன மாற்றம் ஏற்படுத்தி அதன்வழி வர்க்க வேற்றுமையின் கொடுமைகளைக் குறைத்துவிட முடியுமென்று அவர்கள் நம்பினர். அப்படி நம்புவதைத்தவிர, வேறு விஞ்ஞான ரீதியில் பரிகாரம் கூற அவர்கள் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலை அனுமதிக்கவில்லை.

காந்தியடிகள் வாழ்ந்த காலம் வள்ளுவர்—ஔவையார்—வள்ளலார் காலத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட விஞ்ஞான சகாப்தமாகும். அதனால், காந்தியடிகள் காலத்திலே விஞ்ஞான ரீதியான சோசலிசம் மக்கள் மத்தியிலே வந்துவிட்டது. வறுமையை ஒழிப்பதிலே உண்மையான நாட்டமுடைய எவரும்—அவர் சன்மார்க்க வாதியான ஞானியாகட்டும்; சமுதாயவாதியான அரசியல்வாதியாகட்டும்—விஞ்ஞான ரீதியான சோசலிசத்தை வெறுத்து ஒதுக்குவதற்கில்லை. ஆகவே, நடைமுறையில் விஞ்ஞான சோசலிஸ்டுகளோடு காந்தியடிகள் வேறுபட்டாரெனினும், விஞ்ஞான சோசலிசத்தைக் கொள்கையளவில் இதய சுத்தியோடு ஏற்றுக் கொண்டார்.

## காரணமென்ன?

இதுகாறும் கூறியவற்றால், காந்தியடிகள், "சோசலிசம்" என்பதனை, அதற்குரிய பொருளோடு ஏற்றுக் கொண்டார் என்பது உறுதிப்படும். ஆயினும், பழைய விடுதலைப் பாசறையின் தளபதிகளிலே சிலர் சோசலிசத்தை எதிர்ப்பதற்கு காந்தியடிகளின் பெயரையும் தங்கள் கைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, விடுதலைப் போராட்டத்தின் மத்தியிலே வர்க்கப் போராட்டத்தை ஊக்குவிக்கும் வகையிலே காங்கிரஸ் சோச

லிஸ்டுகள் செய்த சோசலிசப் பிரசாரத்தை அடிகள் எதிர்த்தது. மற்றென்று, வர்க்க வேற்றுமையை அகற்றி, சோசலிசச் சமுதாயங் காணும் புரட்சியை வன் முறையில் நடத்துவதை அடிகள் விரும்பாதது. இந்த இரண்டில், முன்னது முடிந்துபோன பிரச்னை. பின் னது, இன்னமும் இருக்கின்ற பிரச்னை.

சுதந்திரப் போராட்டத்தின் மத்தியிலே சோச லிசச் சிந்தனை கூடாதென்று காந்தியடிகள் என் றுமே சொன்னதில்லை. சுதந்தர இந்தியா எப்படி இருக்கும்—எப்படி இருக்கவேண்டும் என்று அடிகள் விளக்கியபோதெல்லாம் சோசலிச சமுதாயத்தையே வருணித்தார். கதர்—கிராமக் கைத்தொழில் வளர்ச்சி—தேசியக் கல்வி விஷயமாகவும் அடிகள் அறிமுகப்படுத் திய ஆக்கவழிப் பணிகளெல்லாம் சுதந்தர இந்தியாவில் தாம் படைக்க விரும்பிய சோசலிசச் சமுதாயத்தின் முன்னோடி வேலைகளென்றே அவர் கருதி வந்தார். ஆம்; எதிர்கால சமுதாயத்தைப் பற்றிய ஒரு திட்ட வட்டமான கொள்கையுடனேயே சுதந்தரப் போராட் டத்தை அடிகள் நடத்தினர். சுதந்தர இந்தியா சோச லிச இந்தியாவாகத்தான் இருக்க வேண்டுமென்ற உறுதியுடன்தான் அவர் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினர்.

## விடுதலைக்குப் பின்...

'சுதந்தரம்' என்பது, அடிமைப்பட்ட மக்கள் அனை வருடைய பொதுக் கோரிக்கை. அதனல், ஆளுவோ ரான அன்னியரை எதிர்த்து, அடிமைப்பட்ட மக்கள் அனைவரும் வர்க்க வேற்றுமையின்றி, ஒன்றுபட்டுப் போராடவேண்டி யிருந்தது. மற்றும், காந்தியடிகள் தலைமையில் நடந்த அரசியல் சுதந்திரப் போர் அகிம் சைப் போராக இருந்ததால், அதனை ஊடுருவும் வகை யில் அகிம்சையிலிருந்து வேறுபட்ட—வர்க்கப் போராட் டப் பிரசாரத்தை அனுமதிப்பதால், சுதந்தர விரும்பி களின் முகாம் பிளவுபடக் கூடுமென்றும் அடிகள் அஞ்

சினர். சுதந்தரப் போராட்டம் வெற்றிகரமாக முடிவுற்றதும், அதன் அடுத்த கட்டமாக சோசலிசப் போராட்டம் தோன்றுவது உறுதி என்றும் அடிகள் நம்பினர். இதோ, சான்று :

"அடிமைத்தனம் ஒழிந்து, சுதந்தரம் உதயமாகும்போது, சமூகத்திலுள்ள பலவீனங்களெல்லாம் வெளிக்கிளம்பி மேலே வந்துவிடும். அதைப்பற்றி அனுவசியமாக இப்போதே பரபரப்படைவதற்கு நியாயமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அந்தச் சமயத்தில் நாம் நிதானமாக நடந்து கொண்டால், எல்லாச் சிக்கல்களும் தீர்ந்துவிடும். பொருளாதாரப் பிரச்னை சம்பந்தப்பட்டவரையில், எப்படியும் அதைத் தீர்த்துத்தான் ஆக வேண்டும்."

*[கா. நூல். தொ. 6; பக். 152]*

கடந்துபோன காலத்தில்—அந்தக் காலத்திற்கு மட்டுமே பொருந்தக் கூடியதாக—அடிகள் கூறியவற்றைச் சான்று காட்டி, அவரை, சோசலிச விரோதியாக அறிமுகப்படுத்த முயல்வது பாவமாகும். சோசலிஸ்டுகளின் நடைமுறைக்கு விரோதியாக இருக்கும் ஒருவர், சோசலிசத் தத்துவத்திற்கும் விரோதியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. காந்தியடிகள் அப்படி இருக்கவுமில்லை. நாடு விடுதலை பெற்று முடியும்வரை கூட அடிகள் காத்திருக்கவில்லை. விடுதலை நெருங்கிக் கொண்டிருந்த நிலையிலேயே அவர் சோசலிசப் போராட்டத்திற்கு நாட்டைத் தயாரிக்கும் முறையிலே பேசவும் எழுதவும் ஆரம்பித்துவிட்டார்.

"நான் படைக்க விரும்பும் சுதந்தர இந்தியாவில் சாதி வேற்றுமை இருக்காது. ஏழை பணக்காரர் என்ற வர்க்க வேற்றுமையும் இருக்காது. பாப்பர்களும் பணக்காரர்களும் இருக்கத் தேவை இல்லை. எல்லாப் பொருள்களும் அரசுக்கே உரிமையாக இருக்கும். அரசு மக்கள் எல்லோருக்கும் சொந்தமாக இருக்கும்." *['அரிசன்': 23-2-42.]*

"உழைப்பவர் உழைப்பிற்கேற்ற கூலி பெறு வதற்குத் தகுந்தவரே யாவார். இந்த விதி அநாதி காலந்தொட்டு வழங்கி வருவதாகும். பயனுடைய வேலையைச் செய்வதால், உழைப்பாளி. கூலியை ஒரே விதமாகவும் போதுமானதாகவும் பெறவேண் டியவராவார். அந்த நல்லகாலம் வரும்வரை நாம் செய்யக் கூடியதெல்லாம் உழைப்பாளிக்கும் அவ ருடைய குடும்பத்தாருக்கும் போதுமான உணவும் உடையும் கிடைக்குமாறு செய்வதே யாகும்.

"இந்தச் சொற்ப அளவு கூடச் செய்யாத அர சாங்கம் அரசாங்கமே ஆகாது; அராஜகமே யாகும்."

['அரிசன்', 9-7-46.]

## நேருவுடன் கருத்து வேற்றுமை

காந்தியடிகள், சோசலிசத்தை ஒப்புக்கொண்டா ரெனினும், விஞ்ஞான சோசலிஸ்டுகளின் வர்க்கப் போராட்ட முறைகளை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. இவ்விஷயத்தில் சோசலிஸ்டுகளோடு தமக்குள்ள வேற் றுமையை ஒளிவு மறைவின்றி வெளியிட்டு வந்தார். குறிப்பாக, வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாத தென்பதனை அடிகள் அங்கீகரிக்கவில்லை. தவிர்க்கக் கூடியது என்றே கருதினர். இவ்விஷயத்தில், ஜவகர் லால் நேருவிடமும் அடிகளாருக்குக் கருத்து வேற் றுமை இருந்தது.

"முடிந்தால் வர்க்கப் போராட்டத்தைத் தவிர்க்கவேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். ஆனல், இறுதியில் வர்க்கப் போராட்டம் ஏற் பட்டே தீரும் என்று நேரு நினைக்கிறர்.

"ஜமீன்தார்களையும், மற்ற முதலாளி வர்க்கத் தினரையும் அகிம்சை முறையின் மூலம் மாற்ற லாம் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஆகையால், வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்று

நான் நினைக்கவில்லை. முடிந்த வரையில் எதிர்ப்பில்லாமல் போய்க் கொண்டிருப்பது அகிம்சையின் ஒரு முக்கிய அம்சமாகும்."

"வர்க்கப் போராட்டத்தைத் தவிர்க்க முடியாது என்று நினைத்தால், அதைப் பிரசாரம் செய்வதற்கும், போதிப்பதற்கும் நான் தயங்கமாட்டேன்."

['அரிசன்', 5-12-36.]

அடிகளாரின் இந்தக் கருத்து 1936ல் வெளியிடப்பட்டதாகும். இதிலே, வர்க்கப் போராட்டம்பற்றி நேருவுடன் தமக்குள்ள கருத்து வேற்றுமை காலப்போக்கில் மாறுதல் அடையவும் கூடும்; அப்போது தாமே வர்க்கப் போராட்டம் பற்றிப் போதிக்கவும் கூடும் என்றும் அடிகள் குறிப்பு தந்துள்ளார்.

இதற்குப் பத்தாண்டுகளுக்குப் பின்னர்—அதாவது, நாடு சுதந்தரம் பெற்ற நேரத்தில், அடிகள் பொருளாதாரப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்பதனை உணர்ந்துவிட்டார். அதனாலேயே,

"இந்தியாவிலுள்ள ஏழு லட்சம் கிராமங்களுக்கும் இன்னும் பொருளாதாரச் சுதந்தரம் கிடைக்கவில்லை......சாமான்ய மக்களின் அதிகாரம் மேலோங்கி நிற்பதற்கான போராட்டம் நடைபெறுவது உறுதி."

என்ற வாசகத்தையும் 'கொண்ட காங்கிரஸ் கலைப்புத் தீர்மானத்தை அடிகள் வரைந்தார்.

## போர் முறை யாது ?

அடிகள் குறிப்பிடும் போராட்டம் எத்தகையது? அது, வலதுசாரிகளின் ஆட்சிக்கும் இடதுசாரிகளடங்கிய எதிர்க்கட்சிக்குமான போராட்டமன்று. ஏனெனில், காங்கிரஸ் கலைப்புத் தீர்மானம் எழுதப்பட்ட நாளிலே நாட்டில் மத்தியிலும் மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆட்

சியே நடைபெற்று வந்தது. அடிகள் விரும்பியபடி காங்கிரஸ் கலைக்கப்பட்டிருப்பினும், அவர்பால் பக்தி கொண்ட—அவருடைய நம்பிக்கையைப் பெற்ற மாஜி காங்கிரஸ்காரர்களே அதிகார பீடங்களில் இருந்திருப் பார்கள். ஆகவே, ஆட்சியின் துணைகொண்டு, முற்றி லும் அகிம்சா முறையிலே, அரசியல் கட்சிகளுக்கு அப் பாற்பட்டதான லோக் சேவா சங்கத்தின் மூலம் பொரு ளாதாரப் போராட்டம் நடத்துவதே காந்தியடிகளின் கருத்தாக இருந்திருக்குமென்று நம்பலாம்.

ஆம்; சத்தியாக்கிரகம், மறியல், சட்டமறுப்பு, பொது வேலைநிறுத்தம் ஆகிய சாத்வீகப் போர் முறை களாலேயே—குறிப்பாக, அரசியல் விடுதலைக்குப் பயன் பட்ட முறைகளாலேயே பொருளாதார விடுதலைப் போராட்டத்தையும் நடத்த அடிகள் திட்டமிட்டிருந் தார். இதோ, அவரே கூறுகின்றார்:

"மிகவும் எளியவர்களுக்கு சமூக நீதி வழங்கு வது பலாத்காரத்தினால் சாத்தியமில்லை என்றே நான் கருதி வந்திருக்கிறேன். ஏழை எளியவர்கள் நன்கு பயிற்சி பெற்றால், தமக்கிழைக்கப்படும் தவறுகளுக்குச் சாத்வீகமான முறைகளின் மூலமே பரிகாரம் பெறுவது சாத்தியம் என்றும் நான் நம்பி வந்திருக்கின்றேன்.

"சாத்வீக ஒத்துழையாமையே அந்த முறை யாகும்."

*[கா. நூல், தொ. 6; பக். 145.]*

"நிலத்தை உழுபவர்கள் தமது சக்தியை உணர்ந்தவுடனேயே, ஜமீன்தாரின் தீமை செய லற்றதாகிவிடும். உண்ணவும் உடுத்தவும், தாமும் தம் குழந்தைகளும் கல்வி பெறவும் தேவையான அளவுக்குத் தமக்கு நியாயமான ஊதியம் கொடுத் தாலொழிய வேலை செய்ய முடியாதென்று அவர் கள் சொல்லிவிட்டால், ஜமீன்தார் என்ன செய்ய முடியும்?

"உழைப்பவர்கள் புத்திசாலித்தனத்துடன் ஐக்கியப்பட்டால், அது எதிர்க்க முடியாத சக்தியாகிவிடும். வர்க்கப் போராட்டம் அதனுல்தான் அவசியமில்லை என்று நான் சொல்லுகிறேன்."

*[காந்தி நூல், தொ. 6; பக். 173]*

## சோஷலிசமும் கம்யூனிசமும்

சோஷலிசத்திற்கும் கம்யூனிசத்திற்கும் வேற்றுமையுண்டு. "சோஷலிசத்தின் வளர்ச்சியே கம்யூனிஸம்" என்று சொல்லப்படுகிறது. இந்திய சோஷலிஸ்டுகளில் பலர் கம்யூனிசத்தை விரும்பாதவர்களாக இருக்கின்றனர். ஆனுல், கம்யூனிசத்திலிருந்து வேறுபடும் சோஷலிசத்தைப் புலப்படுத்தும் பொருட்டு, "ஜனநாயக சோஷலிசம்" என்று கூறுகின்றனர். கம்யூனிஸ்டுகள் ஜனநாயகத்தை வெறுக்கவில்லையென்ருலும், முதலாளித்துவ சமுதாயத்தில் நடைமுறையிலிருந்துவரும் பெயரளவு ஜனநாயகத்தை வெறுப்பவர்களாகி "சோஷலிச ஜனநாயம்" என்கின்றனர். 'ஜனநாயக சோஷலிசத்'திற்கும் 'சோஷலிச ஜனநாயகத்'திற்குமுள்ள வேறுபாடு நுணுகி ஆராய்ந்தறியத் தக்கதாகும். இன்று, சோஷலிஸத்தை விரும்பாதவர்கள், அதற்குக் 'கம்யூனிசம்' என்று பெயர் கொடுத்து, மக்களுக்குப் பூச்சாண்டி காட்டுகின்றனர். இன்றைய சமுதாயத்திலுள்ள அநீதியான ஏற்றத்தாழ்வுகளை வெறுப்போர் அனைவருக்கும் 'கம்யூனிஸ்டுகள்' என்று பெயர் வைத்துவிடுகின்றனர். இது பிரசாரத் தந்திரமாகும்.

வர்க்கப் புரட்சியின் மூலம்தான் சோசலிச சமுதாயம் அமைய முடியும் என்பது கம்யூனிஸ்டுகளின் அசைக்க முடியாத நம்பிக்கை. காங்கிரஸ்காரர்களோ, பார்லிமெண்டரி முறையாலேயே—அதாவது, சட்டங்கள் நிறைவேற்றி, திட்டங்களைச் செயல்படுத்துவதாலேயே சோசலிச சமுதாயத்தை அமைத்துவிட முடியுமென்று நம்புகின்றனர். நாட்டு மக்களையும் நம்ப வைக்க முயல்கின்றனர்.

முதலாளித்துவத்தை அடியோடு அகற்றுவது பிளவுபட்டுள்ள இன்றைய காங்கிரஸ் கட்சிகளின் குறிக்கோளல்ல. அந்தக் கட்சிகள் படைக்க விரும்பும் சோசலிச சமுதாயத்திலே தனியார் துறைக்கு—அதாவது, தனி நபர் முதலாளித்துவத்துக்குக் கணிசமான ஒரு இடமுண்டு என்று கூறப்படுகின்றது. இப்படி, சோசலிசமும் முதலாளித்துவமும் கலந்த ஒன்றுக்குக் "கலப்படப் பொருளாதாரம்" என்றும் பெயர் தரப்பட்டுள்ளது.

## கலப்படப் பொருளாதாரம்

காந்தியடிகள், தாம் காண விரும்பிய புதிய பாரதத்திற்கு, 'சோசலிச அரசு'—'இராம ராஜ்யம்'—'தரும கருத்தாப் பொதுவுடைமைச் சமுதாயம்' என்றெல்லாம் பெயர்கள் வைத்தார். ஆனால், அடிகள் காண விரும்பிய சோசலிசத்திற்கும் இன்றைய காங்கிரஸ் கட்சிகள் கூறி வரும் கலப்படப் பொருளாதாரத்திற்கும் தொடர்பு கிடையாது. 'கலப்படப் பொருளாதாரம்' என்பது, 'திரிசங்கு சுவர்க்கம்' என்பார்களே, அதுபோன்றதாகும். ஆம்; கலப்படப் பொருளாதாரம், காந்திசமுமல்ல; மார்க்சிசமுமல்ல! இரண்டுமல்லாத ஏதோ ஒரு 'இஸம்'.

காந்தியடிகள் 'பொருளாதாரம்' என்பதற்குத் தரும் விளக்கம் வருமாறு:

> "அரசியல் என்றால், எந்த முறையிலும் பிரிட்டிஷ் ராணுவத்தின் ஆதிக்கம் நீங்கியதாக இருக்க வேண்டும். 'பொருளாதாரம்' என்றால், பிரிட்டிஷ் முதலாளிகள், மூலதனம், அதுபோன்ற இந்திய முதலாளிகள் மூலதனத்திடமிருந்து முழுதும் விடுதலை பெறுவதே. அதுவே, உண்மைச் சுதந்திரம்."
>
> [கா. நூல். தொ. 6; பக். 126—27.]

இதிலே, இந்திய முதலாளிகளின் மூலதனத்திடமிருந்து முழு அளவில் விடுதலை பெறுவதே உண்மை

யான சுதந்திரம் என்று அடிகள் கூறியிருப்பது கலப் படப் பொருளாதாரத்திற்குப் பொருந்தாதல்லவா!

காந்தியடிகள், கம்யூனிசத்தைக்கூட கொள்கை யளவில் எதிர்க்கவில்லை; ஏற்கவும் செய்தார். அவர் விதிக்கும் ஒரே நிபந்தனை, கம்யூனிசத்தை அகிம்சை மூலம்தான் அடைய முயல வேண்டும் என்பதாகும். சான்று இதோ:

> "ரஷ்ய பாணி கம்யூனிசம்—அதாவது, மக்கள்மீது சுமத்தப்படும் கம்யூனிசம், இந்தியாவுக்கு வெறுப்பளிப்பதா யிருக்கும். அகிம்மை பூர்வ மான கம்யூனிசத்தையே நான் விரும்புகின் றேன். எந்தவிதமான பலாத்காரமும் இல் லாமல் கம்யூனிசம் வந்தால், அது வரவேற்கத் தக்கதே."
>
> [ 'அரிசன்'; 13—2—37. ]

> "கொள்ளை யடிப்பதற்கு 'வெளியாட்கள்' யாரும் இல்லாதபோது சுயநலக்காரர்கள் தம் இனத்த வரையே கொள்ளையடிக்க ஆரம்பித்து விடு கிறார்கள்."
>
> [ காந்தி நூல்; தொ. 6; பக். 130. ]

சோசலிசத்திற்கும் இந்திய தேசீயத்திற்கு முள்ள வரலாற்றுத் தொடர்புகளை இங்கு தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

# சோசலிச எழுச்சி

இந்தியாவில் தேசீய எழுச்சியும் சோசலிசக் கிளர்ச்சியும் ஒன்ருகவே தோன்றியதெனலாம். ஆம்; தேசபக்தியும் சோசலிசமும் உடன்பிறந்த சக்திகளாம். இதனையுணர்ந்தே,

> "தேசபக்தியும் முதலாளித்துவமும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று முரணனவை என்பதில் ஐயமில்லை; இது வரையிலும் அப்படித்தான் அவை இருந்து வந்திருக்கின்றன."
>
> [ காந்தி நூல். தொ. 6; பக். 344. ]

என்கிருர் அடிகள்.

இங்கு இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கும் சோசலிச இயக்கத்திற்கு முள்ள தொடர்பை ஆராய்வது அவசியமாகிறது.

1917 அக்டோபரில் ருஷ்யாவில் ஜாரின் கொடுங்கோன்மையையும் முதலாளித்துவக் கொள்ளையையும் ஒழித்து சோஷலிச அரசு மலர்ந்தது. அந்தப் புரட்சி இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தார்மிக ரீதியில் ஊக்கமளித்தது. இந்திய விடுதலை வீரர்களின் முதல் நம்பர் விரோதியாக இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ருஷ்யப் புரட்சியை வெறுத்தது. அதனுலும், "என் விரோதிக்கு விரோதி எனது நண்பன்" என்னும் பழமொழிக்கேற்பவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் போராடிக்கொண்டிருந்த இந்திய விடுதலை வீரர்கள் ருஷ்யப் புரட்சியின் வெற்றியை வரவேற்ருர்கள். அவர்களிலே கூர்த்த மதியுடைய பலர், தங்கள் போராட்டத்தின் வெற்றிக்குப் பின்னர் தோன்றவிருக்கும் சுதந்தர இந்தியாவானது ருஷ்யாவைப் போல சோசலிச நாடாகவே மலர வேண்டும் என்று விரும்பினர்.

ருஷ்யப் புரட்சி வெற்றி பெறுவதற்கு முன்பே, இந்தியப் பெருந் தலைவர்களிலே முதல்வரான தாதாபாய் நௌரோஜி அவர்கள், இங்கிலாந்தில் தங்கியிருந்த போது, உலகத் தொழிலாளர் (சோசலிஸ்டு) இயக்கத்தோடு உறவு கொண்டார். அதன் சார்பில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு 1893ல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1904ல் ஆம்ஸ்ட்டர்டாம் நகரில் நடைபெற்ற அகில உலக சோசலிஸ்டு மாநாட்டில் பங்கு பெற்றார். அம்மாநாட்டில் அவர் இந்திய தேசியப் பாசறையின் ஏகப் பிரதிநிதியாக வரவேற்கப்பட்டார்.

## பாரதி வகுத்த பாதை

விடுதலை வீரர்களிலே ஒருவரும் தேசிய மகாகவியுமான பாரதியார், 1917 வரை தேச பக்தியையும் தெய்வ பக்தியையும் போதிக்கும் பாடல்களையே இயற்றி வந்தார். 1917ல் ருஷ்யாவில் சோசலிச அரசு அமைந்த பின்னரே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த நிகழ்ச்சியால் கவர்ச்சி யடைந்தவராகி, சோசலிசப் பிரசாரத்திலும் ஈடுபடலானார். "புதிய ருஷ்யா" என்ற பாடலைப் பாடி, ருஷ்யாவில் நடந்த வர்க்கப் புரட்சியை வாயாரப் புகழ்ந்து, அந் நாட்டில் புதிதாக அமைந்த பொதுவுடைமை அரசையும் வரவேற்று வாழ்த்துக் கூறினார். மற்றும், "பாரத சமுதாயம் வாழ்கவே" என்ற பாடலில், அமைய விருக்கும் சுதந்தர பாரதத்தை, பொதுவுடைமைச் சமுதாயமாகவே கற்பனை செய்து காட்டினார்.

இந்திய விடுதலைக் கிளர்ச்சியானது பொதுஜன எழுச்சியாக மலர்ந்தது 1919ல் ஆகும். இந்த எழுச்சிக்கு, 1917ல் ருஷ்யாவில் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றதும் ஒரு தூண்டுதலாக அமைந்தது. இந்திய விடுதலை வீரர்களிலே பலர், "ஏகாதிபத்தியம் வேறு; முதலாளித்துவம் வேறு" என்று கருதாமல், இரண்டும் ஒன்றே என்று எண்ணினர். அதனால், இந்தியாவில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடு

தலைக்காகப் போராடிக்கொண்டிருந்த வீரர்கள், ருஷ்யா சோசலிச நாடாக மலர்ந்தது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தனர்.

அந்நாளில், ருஷ்யாவி லிருந்து "கம்யூனிச"ப் பிரசுரங்கள் ஏராளமாக இந்தியாவுக்கு மறைமுகமாக வந்து கொண்டிருந்தன. அந்தப் பிரசுரங்களைப் படித்து இந்தியத் தேச பக்தர்களிலே பலர் கம்யூனிஸ்டுக ளாயினர். சிறைச்சாலைகளில் அடைபட்ட தேசபக்தர் கள் மத்தியிலே அரசியல்—பொருளாதார வகுப்புகள் நடத்தினர் கம்யூனிஸ்டுகள்.

## சதி வழக்குகள்

பொது மக்கள், சாதாரண தேச பக்தர்கள் யார்? கம்யூனிஸ்டுகள் யார்?—என்று பிரித்தறிய முடியாதவர் களாக இருந்தனர். ஆனால், பிரட்டிஷ் அரசாங்கம், தேச பக்தர்களிலிருந்து கம்யூனிஸ்டுகளைப் பிரித் தெடுத்து, பலாத்காரமாக அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றதாக அவர்கள் மீது சதி வழக்குகள் தொடுத் தது. அவ்வகையில், மீரத் சதி வழக்கு, லாகூர் சதி வழக்கு, சென்னைச் சதி வழக்கு ஆகிய மூன்றும் பிரபல மானவையாகும்.

கம்யூனிசத்தை விரும்பாத தேசியவாதிகள்கூட, கம்யூனிஸ்டுகளின் அப்பழுக்கற்ற தேசபக்தியிலும் தியாக உணர்விலும் கவர்ச்சி யடைந்து அவர்கள்பால் நல்லெண்ணங் காட்டினர். திரு. மோகன் குமாரமங் கலம், திரு. பி. இராமமூர்த்தி ஆகியவர்களுள்பட தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் பலர் மீது சென்னையில் சதி வழக்கு நடைபெற்றபோது, பெருந் தலைவர் ராஜாஜி அவர்கள், சென்னை போலீஸ் கோர்ட்டில் நாள்தோறும் தோன்றி, வழக்கைக் கவனித்து வந்தார்.

தீவிர தேசபக்தர்களிலே சிலர், சோஷலிசத்தை மட்டுமே நேசித்தனர். மற்றுஞ் சிலர், கம்யூனி சத்தையே காதலித்தனர். வேறு சிலர், சோசலிசத்திற்

கும் கம்யூனிசத்திற்குமுள்ள வேற்றுமையை அறியாத வர்களாகி, சோசலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் ஆகிய இரு தரப்பாரையுமே நேசித்தனர்.

பண்டித ஜவகர்லால் நேரு, ஆசாரிய நரேந்திர தேவ், ஜெயப்பிரகாஷ் நாராயணர், தோழர் எம். சிங்கார வேலு செட்டியார், திரு. வி. கலியாணசுந்தனுர் போன்ற பெருந் தலைவர்கள் ருஷ்யாவில் பொதுவுடைமைப் புது வுலகம் பூத்தது கண்டு மகிழ்ச்சியும் கவர்ச்சியும் அடைந்தனர். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் பெருந் தலை வர்களில் ஒருவராக விளங்கிய தோழர் சிங்காரவேலர், அப்பட்டமான கம்யூனிஸ்டாக மாறினுர். சமயப் பற் றுடைய சாதுவான திரு. வி. க.வும் மார்க்ஸியத்தில் அழுத்தமான பற்றுடையவரானுர். தலைவர் ராஜாஜி அவர்கள் 1921-ல் வேலூர் சிறையில் அரசியல் கைதி களுக்கு வகுப்பு நடத்தினுர். அவ்வகுப்பில் பொது வுடைமையை ஆதரித்து அவர் நிகழ்த்திய சொற் பொழிவுகள், "அபேதவாதம் அல்லது பொது வுடைமை" என்ற பெயரில் நூலாக வெளி வந்துள்ளது.

சிறையிலும் வெளியிலுமாக தேசபக்தர்களிடையே வர்க்கப் புரட்சியை உருவாக்கப் பாடுபடும் இரகசியச் சங்கங்களும் இயங்கி வந்தன. பகவத் சிங்கும் அவ ருடைய தோழர்களும் "நவஜவான் பாரத சபை"யை யும், சந்திர சேகர ஆசாத்தும் அவருடைய குழுவின ரும் "இந்துஸ்தான் சோசலிஸ்டுக் குடியரசுச் சங்கத்" தையும் இரகசியமாக நடத்தினர். பின்னர் ஒரு கட்டத் தில், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே, "காங்கிரஸ் சோச லிஸ்டுக் கட்சி" அமைந்தது. திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணர், ஆசாரிய நரேந்திர தேவ் போன்ற பெருந் தலைவர்கள் இந்தக் கட்சியின் போஷகர்களாக இருந்து, போற்றி வளர்த்தனர். ஆரம்ப காலத்தில் அப்பட்ட மான கம்யூனிஸ்டுகளும் இதிலே கலந்திருந்தனர்.

## அடிகள் அதரவு

காங்கிரசுக்குள்ளேயே சோசலிஸ்டுக் கட்சி பிறந்த போது, பெருந் தலைவர்களிலே சிலர் கவலைகொண்ட

னர். அவர்களிலே சிலர் துணிந்து கண்டனக் குரல் எழுப்பினர்.

சுதந்தரப் போராட்டம் முடிவதற்கு முன்பு வர்க்கப் பூசலை எழுப்புவதனைக் காந்தியடிகள் விரும்பவில்லை யென்றாலும், சோசலிச எழுச்சிக்குத் தம்மை எதிரி யாக்கிக்கொள்ளவும் அவர் துணியவில்லை. ஆகவே, வன்முறை கூடாதென்ற ஒரு நிபந்தனையுடன் காங் கிரஸ் சோசலிஸ்டுக் கட்சியை வரவேற்று அறிக்கை விடுத்தார். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

> "காங்கிரசுக்குள்ளே சோசலிஸ்டுக் கட்சி தோன்றி யிருப்பதை நான் வரவேற்கின்றேன்.
>
> "அந்தக் கட்சியின் வேலைத் திட்டத்தில் சில இனங்களைக் கூர்ந்து கவனித்தேன். அவற் றைத் திருத்தி மாறுதல் செய்வது நலமாகும்.
>
> "தற்போது மக்கள் சமுதாயம் அமைந்திருக்கும் தோரணையில், ஒரு வர்க்கத்திற்கும் மற்றொரு வர்க்கத்திற்குமிடையே போராட்டம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அந்தப் போராட் டத்தில் பலாத்காரம் கலக்கக்கூடாது. அது காங்கிரசின் கொள்கைக்கு விரோதமாகும்.
>
> "காங்கிரஸ் சோசலிஸ்டுகள், இதர காங்கிரஸ்காரர் களைப் போலவே, அகிம்சா தருமத்தை அங்கீ கரிப்பார்களானால், அவர்கள் விரும்பும் போராட்டத்தில் காங்கிரஸ் வாதிகளெல்லாம் கலந்துகொள்வதில் எனக்கொன்றும் ஆட்சேப மில்லை.
>
> "சரியான காங்கிரஸ் சோசலிஸ்டுகள் பலம் திரட் டிக்கொண்டு, காங்கிரசின் நிர்வாகப் பொறுப் பை ஏற்றுக் கொள்வார்களானால், நான் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்பேன்."

[ராஜாஜி எழுதிய "அபேதவாதம் அல்லது பொதுவுடைமை" என்ற நூலின் பிற்சேர்க்கையிலிருந்து.]

இதுகாறும் எடுத்துக் காட்டியவற்ருல், இந்தியாவில் சோசலிச இயக்கம் விடுதலைப்போரின் ஒரு அங்கமாகவே பிறந்து வளர்ந்து வந்ததென்பது புலனுகும். காங்கிரசுக்குள்ளே சோசலிஸ்டுக் கட்சி பிறந்தது, 1934 ஆம் ஆண்டின் முற்பகுதியிலாகும்.

சோசலிச இயக்கத்தின் முதுகெலும்பு போன்றது தொழிற்சங்க இயக்கம். இந்த உண்மையை முதன் முதலாக உணர்ந்தவர் தமிழ் நாட்டவரே யாவர். கப்பலோட்டிய தமிழர் வ உ. சிதம்பரனுர், 1906 ஆம் ஆண்டிலேயே, தூத்துக்குடிக் கோரல் மில் தொழிலாளர் கிளர்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

1918ல், "சென்னைத் தொழிலாளர் சங்கம்" தோன்றியது. திரு. பி. பி. வாடியா, திரு. வி. கலியாணசுந்தரனுர் ஆகிய தேசியவாதிகளே இந்தச் சங்கத்தைத் தோற்றுவித்தனர். இதுவே, இந்தியாவிலே சிறந்த முறையில் அமைந்த முதல் தொழிற் சங்கமாகும்.

பின்னர், 1920ல் "அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ்" பிறந்தது. காங்கிரஸ் பெருந் தலைவர்களிலே பலர் இந்தச் சங்கத்தைத் தோற்றுவிப்பதற்குப் பொறுப்பேற்றனர். விடுதலைப் பாசறையாக விளங்கிய இந்திய தேசிய காங்கிரசின் தோழமை அமைப்பாகவே தொழிற்சங்கக் காங்கிரஸ் செயல்பட்டு வந்தது.

இனி, காந்தியத்திற்கும் மார்க்சிசத்திற்கும் உள்ள ஒற்றுமை—வேற்றுமைகளை ஆராய்வோம்.

# காந்திஸமும் மார்க்ஸிஸமும்

ஜெர்மானியரான கார்ல் மார்க்ஸ் என்னும் பேரறிஞர் "காபிடல்" என்ருெரு நூல் எழுதினுர். அது, உலகக் கம்யூனிஸ்டுகளால் மட்டுமன்றி, கம்யூனிஸ்டுகளோடு உறவு கொள்ள விரும்பாத ஜனநாயக சோஷலிஸ்டு களாலும் போற்றப்படுகின்றது. மற்றும் வரலாற்றுப் புகழ்பெற்ற "கம்யூனிஸ்டுப் பிரகடனம்" ஒன்றையும் 1848ல் அவர் வெளியிட்டார். இதனுல், "மார்க்ஸிஸம்" என்ருெரு புதிய தத்துவச் சொல் பிறந்தது. அதில் நம்பிக்கை யுடையோர், "மார்க்ஸிஸ்டுகள்" என்று அழைக்கப்படுகின்றனர்.

சோஷலிசச் சிந்தனைக்கும் சோசலிச இயக்கத்திற் கும் கார்ல் மார்க்ஸ்தான் புதிய உயிர் அளித்தார். மனித குல விடுதலைக்கு வழி காட்டும் தத்துவமாக மார்க்ஸி ஸத்தைக் கருதுகின்றனர் சோசலிஸ்டுகள். மார்க்ஸிஸத் தைச் செயல்படுத்துவதிலே சிறந்து விளங்கினுர் தோழர் லெனின்.

## மார்க்ஸ் பற்றி மகாத்மா

மறவழியை விரும்பாத அறவோரான காந்தியடி களும் மார்க்ஸியத்திலே கவர்ச்சியடைந்தார். சமூகத் தின் பூரணமான சாத்திரத்தை மார்க்ஸ் கண்டுபிடித்து விட்டார் என்றோ, லட்சிய பூர்வமான தகுதியுடைய தும் சமூகத் தீமைகளை முற்றிலும் போக்குவதுமான நியதிகளை அவர் போதிக்கிருர் என்றோ காந்தியடிகள் கருதவில்லை. ஆயினும், கார்ல் மார்க்ஸ் சமுதாயக் கொடுமைகளை அகற்ற முற்பட்டவர் என்ற அளவில் அவரிடம் அடிகளார் பெருமதிப்பு வைத்திருந்தார். அதனை அவர் வாக்காலேயே அறிவோம்:

"மார்க்ஸ், மனித வர்க்கம் முழுவதையும் ஒன்றாகக் கருதியிருக்கிறார். வர்க்கப் பிரிவினைகளுக் கெல்லாம் அப்பாற்போய் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் ஏழைகளான உலகப் பாட்டாளி களின் கட்சியில் தம்மை ஒருமைப்படுத்திக் கொண்டிருக்கிறார். இதுதான் மார்க்ஸின் உப தேசங்களை உயிருள்ளவையாக்கி யிருக்கின் றன.

"மார்க்ஸை நாம் குறைகூறலாம். ஆனால், அவர் மிகப் பெரியவர் என்பதை யார் மறுக்க முடி யும்? சமூகத் தீமைகளைக் குறித்து அவர் விவரித்திருப்பவையும் அவற்றிற்கு அவர் கூறும் பரிகாரங்களும் சரியானவையாக இருக்கலாம்; சரியானவையாக அல்லாமலும் இருக்கலாம். அவருடைய பொருளாதாரத் தத்துவங்களை நான் அப்படியே ஒப்புக் கொள்வதற்கில்லை. என்றாலும், ஏழைகள் நசுக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை மாத் திரம் நான் அறிவேன். இவ்விஷயத்தில் ஏதா வது செய்துதான் ஆகவேண்டும். இதை மார்க்ஸ் அவர் வழியில் செய்ய முற்பட்டிருக் கிறார். அவருக்கு ஆற்றலும் படிப்பும் அறி வும் இருக்கின்றன."

[காந்தி நூல் தொ. 7; பக். 658-659.]

## அவரும் படித்தார்!

காந்தியடிகள், ஆன்மிகமும் தெய்வ நம்பிக்கையும் இல்லாததாக மார்க்ஸியத்தைக் கருதினார். அது, மார்க் ஸிசத்திலுள்ள ஒரு பெருங் குறையாகவும் அவருக்குத் தோன்றியது. ஆயினும், மார்க்ஸிஸ நூல்களை அவர் விரும்பிப் படித்தார்.

சுதந்தரம் நெருங்கிக்கொண்டிருந்த நேரத்திலே, காந்தியடிகள், அடுத்து தாம் நடத்தவிருந்த பொருளா தாரப் புரட்சிக்குத் தம்மைத் தயார் செய்து கொண்

டிருந்தபோது அவர் மார்க்ஸிஸ நூல்களைப் படித்ததாக அவருடைய அந்தரங்கச் செயலாளர் பியாரிலால் கூறுகின்றார். அது வருமாறு:

"கடைசியாக காந்திஜி புனாவில் சிறைப்பட்டிருந்த போது மார்க்ஸிஸ நூல்களையெல்லாம் விரிவாகப் படித்த பிறகு அவர் கூறியதாவது:

"மார்க்சுக்கு இருந்த கல்வித் திறமை எனக்கு இல்லை. அது மாத்திரம் எனக்கு இருக்குமானால், மார்க்ஸ் தத்துவத்தைக் குறித்து மார்க்ஸைவிட இன்னும் நன்றாக நான் எழுதியிருப்பேன்.

"மார்க்ஸ் தத்துவ விளக்க நூல் ஒன்றின் உள்ளே இருந்த காகிதத்தில் காந்திஜி "ஒவ்வொருவருக்கும் எல்லாம்; ஒவ்வொருவரும் எல்லோருக்கும்" என்று எழுதியிருந்தார். "அவன் சக்திக்கு ஏற்றபடி ஒவ்வொருவரிடமிருந்தும், அவன் தேவைக்கு ஏற்றபடி ஒவ்வொருவனுக்கும்" என்றும் எழுதினார். அவர் கருத்துப்படி இதுதான் மார்க்சின் உபதேசம்."

[ காந்தி நூல் தொ. 6; பக். 654.]

தமிழ் நாட்டில் முதன் முதலில் காந்தியத்தோடு பிணைத்து மார்க்ஸிஸத்தைப் பிரசாரம் செய்த பெருமை இரு பெருந் தலைவர்களுக்கே உரிமை. அவர்கள், தலைவர் ராஜாஜியும் திரு. வி. கலியாணசுந்தரனாருமே ஆவர். இவ்விருவரும் அந்நாளில் காந்தியடிகளை தத்துவ அளவில் மார்க்ஸிய வாதியாகவே கருதினர்.

"சொத்து விஷயத்தில் மகாத்மா காந்திக்கும் பொதுவுடைமை வாதியைப் போலவேதான் அபிப்பிராயங்கள். ஆனால், பொதுவுடைமையை ஸ்தாபிப்பதற்குப் பலாத்காரம் உபயோகிப்பதை அவர் வெறுக்கிறார்."

[ 'அபேதவாதம்...' பக். 38. ]

திரு. வி. கலியாணசுந்தரனார், காந்தியத்திற்கும் மார்க்ஸியத்திற்கு முள்ள ஒற்றுமையை, "காந்திய மும், மார்க்கிஸமும்" என்ற தமது கவிதை நூலில் விளக்குகின்றார். தம் வாழ்நாள் முழுவதிலும் "காந்திஸ மும் மார்க்ஸிஸமும் ஒன்றுபட்டால்தான் உலகிற்குக் கதிமோட்சம் உண்டு" என்று கூறி வந்தார் திரு. வி. க.

## அன்றைய ராஜாஜி

மார்க்ஸிஸம் பலாத்காரத்தைத் தவிர்க்க முடியாத ஒரு போர் முறையாக வற்புறுத்துவதாகக் காந்தியடி கள் கருதவில்லை. சாத்விகத்தின் மூலமும் மார்க்ஸ் கனவு கண்ட பொதுவுடைமைச் சமுதாயத்தைப் படைக்க முடியும் என்று அடிகள் நம்பினார். அந்த நம்பிக்கையின் பேரில்தான் அவர் தம்மை ஒரு சோச லிஸ்டு என்று கூறிக் கொண்டார்.

காந்தியத்தின் வியாக்கியான கர்த்தாவாக விளங் கிய ராஜாஜியின் கருத்தும் அந்நாளில் இதுவாகத்தான் இருந்தது. இதோ, அவரே கூறுகின்றார்:

> "பொதுவுடைமை இலட்சியங்களை அடைவதற் காக, ருஷ்யாவில் பலாத்காரத்தை உபயோகித் தார்கள்; அது ஒருவழி. அவ்வாறில்லாமல், சமாதான முறையில் பிரசாரம் புரிந்து கொஞ் சம் கொஞ்சமாக மாறுதல்களைச் செய்து வர லாம்; இது இன்னொரு வழி.
>
> "பலாத்காரம் என்பது பொதுவுடைமைத் தத்து வத்தில் ஒரு முக்கிய அம்சமல்ல.
>
> "தனி மனிதர்களுக்குச் சொத்துரிமை இருப்பதை மாற்றிப் பொதுவுடைமையை ஸ்தாபிப்பதற் காக, அரசாங்க யந்திரத்தை நாம் கைப்பற்ற

வேண்டியது அவசியமாயிருக்கலாம். ஆனால், அப்படி அரசாங்க அமைப்பை பலாத்காரத்தை உபயோகித்தும் கைப்பற்றலாம். சமாதான முறைகளாலும் கைப்பற்ற முடியும்.''

['அபேதவாதம் அல்லது பொதுவுடைமை' பக். 36-37.]

இங்கு, தனிவுடைமைச் சமுதாயத்தின் மீது அந்நாளில் ராஜாஜி கொண்டிருந்த வெறுப்பை அறிந்து கொள்வது அவசியம். அதனால், அவரது "அபேதவாதம்'' என்ற நூலிலிருந்து சான்று காட்டுவோம்:

''தனி மனிதர்களுக்குச் சொத்துரிமை உண்டு என்ற தத்துவத்தை அஸ்திவாரமாகக் கொண்டே தற்போதைய ஜன சமூக வாழ்க்கை அமைந்திருக்கிறது.

''தனி மனிதர் சொத்துரிமை எண்ணம் நம் நாடி நரம்புகளில் ஊறிப்போயிருக்கிறது. இந்த எண்ணத்தை வேரோடு கல்லி யெறிய வேண்டும்.

''தனி மனிதருக்குச் சொத்துரிமை இருக்க வேண்டும் என்ற எண்ணம் மூடநம்பிக்கையாக வளர்ந்திருக்கிறது. பணக்காரன்தான் அப்படி நம்புகிறான் என்பதில்லை; பணக்காரனுடைய சொத்துதான் தனக்குச் சோறு போடுவதாக ஏழையும் நம்பிக் கொண்டிருக்கிறான். ஆகையால், தான் ஜீவிக்க வேண்டுமென்றால், தான் பணக்காரனை ஆதரிக்க வேண்டியது அவசிய மென்று ஏழை நினைக்கிறான். இந்த மூடநம்பிக்கையை அகற்றுவதற்காக, பொதுவுடைமைவாதி இடைவிடாமல் சரியான முறையில் ஞாயப் பிரசாரம் செய்ய வேண்டும்.

['அபேதவாதம் அல்லது பொதுவுடைமை'; பக். 36-37.]

## திரு. வி. க.வின் விருப்பம்

காந்தியடிகளையும் ராஜாஜியையும் போல திரு. வி. கலியாணசுந்தரனாரும் சாத்வீக வழிகளாலேயே மார்க்ஸிஸம் போதிக்கும் சமதர்ம சமுதாயத்தைப் படைக்க முடியும் என்று நம்பினார்.

"மார்க்ஸியம் நல்லதே; கெட்டதன்று. மார்க்ஸியத்தில் சில குறைகள் சொல்லப்படுகின்றன. உலகில் குறையற்ற ஒன்றைக் காண்டல் அரிது. மார்க்ஸியத்தில் சில குறைகள் இருக்கலாம். அதனால் மார்க்ஸியத்தைக் கடிவது அறிவுடைமை யாகாது.

"மார்க்ஸியம் ஹிம்ஸையைப் போதிப்பதென்று சில விடங்களில் கருதப்படுகிறது. இஃது உலகை ஹிம்ஸிக்கும் கூட்டத்தாரின் பொய்ப் பிரசாரம். பொய்ப் பிரசாரத்துக்குச் செவி சாய்க்கும் அளவில் நின்றுவிடுவது தவறு. மார்க்ஸியத்தை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்; பார்த்தால், அது அஹிம்சையை அறிவுறுத்துகிறதா அல்லது இம்சையை அறிவுறுத்துகிறதா என்பது புலனாகும். நமது இந்தியாவின் பண்டை அஹிம்சா தர்மத்தைப் புதுக்கவல்லது மார்க்ஸியம் என்பது எனது கொள்கை"

[ திரு. வி. க. வின் 'இந்தியாவும் விடுதலையும்'; பக். 15-16. ]

"நம்முடைய கொள்கைகள், ஸ்தாபனங்கள், ஒழுக்கத்தைப் பற்றிய தரங்கள், இலக்கியம், கலை, பழக்கங்கள், மதம் ஆகியவை நமது பொருளாதாரச் சூழ்நிலையிலிருந்து வந்தவை" என்கிறார் கார்ல் மார்க்ஸ். இதனை, காந்தியடிகள் ஏற்கவில்லை. இதுபற்றி அடிகளின் கருத்து வருமாறு:

"நமது கொள்கைகள், ஒழுக்கத்தைப் பற்றிய தரங்கள், மதிப்புகள் ஆகியவை முற்றிலும் நமது

லோகாயதச் சூழ்நிலையிலிருந்து வந்தவை, அதற்கு வெளியே அவற்றிற்குப் பூரணமான அடிப்படை எதுவுமே இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளவில்லை"

[கா. நூல் தொகுப்பு 6; பக். 654.]

ஆம்; லோகாயதத்திலிருந்து வேறுபட்டதான ஆன்மீகச் சூழ்நிலையிலிருந்து நமது ஒழுக்கம், இலக்கியம், கலை, மதம், பழக்க வழக்கம் ஆகியவை உருவாகியுள்ளனவென்று அடிகள் கருதினர். மார்க்ஸியம் போதிக்கும் லோகாயதத்திற்கும் காந்தியம் வலியுறுத்தும் ஆன்மிகத்திற்கும் முரண்பாடு இல்லையென்று திரு. வி. க. கருதினர். மார்க்ஸின் லோகாயதமும் காந்தியடிகளின் ஆன்மீகமும் ஒன்றுபடுவதையே காந்திய—மார்க்ஸிஸ ஒற்றுமையாக அவர் கருதினர்.

மார்க்ஸ் போதிக்கும் லோகாயதம் இந்திய சூழ்நிலைக்குப் பொருந்தும் வகையில் செய்யப்பட வேண்டும் என்றும் திரு. வி. க. விரும்பினர்.

"யான் இந்தியன். எனக்கு என்ன தோன்றுகிறது? 'காரல் மார்க்ஸ் இந்திய மண்ணில் தோன்றி, இந்திய நீரருந்தி, இந்தியக் காற்றில் உலவி, இந்திய ஒளியில் மூழ்கி, இந்தியக் கல்வி பயின்று நூல்கள் எழுதியிருப்பாரேல், அவர் தம் நூல்கள் இன்னும் மணம் பெற்றிருக்குமே' என்று தோன்றுகின்றது.

"சுக்கிர நீதி, கௌடில்யர் அர்த்த சாஸ்திரம், ஸ்மிருதி, உபநிஷதம், திருக்குறள் முதலிய நூல்களின் சாரம் மார்க்ஸிஸத்தில் படிந்தால் அஃது இந்தியாவுக்குப் பல வழியிலும் நலஞ் செய்வதாகும் என்று யான் கருதுகிறேன்.

"மார்க்ஸியம் ஒருவித தத்துவம். அது நடைமுறையில் அதன் தத்துவப்படியே வளராது; நாடுகளின் இயற்கை நோக்குக்கும் போக்குக்கும் ஏற்ற முறையிலேயே வளர்வதாகும்.

"நமது இந்தியா—பழமையில் பேர்பெற்ற இந்தியா—மார்க்ஸியத்தை அப்படியே ஏற்று நடத்தல் அரிது. எத்தனையோ தத்துவ இயல்களை உண்டு, ஜீரணஞ் செய்து, சத்தை ஏற்று, அசத்தைத் தள்ளிய இந்தியா—மார்க்சியத்தை மட்டும் உள்ளவாறு ஏற்குமா? அதை உள்ள வாறே ஏற்க இந்தியாவின் இயற்கை இடந் தராது.

"மார்க்ஸீயம்" என்றதும், 'அந்தோ! சார்வாகம்—உலகாயதம்—நாஸ்திகம்' என்று மருட்சி யடைந்து, 'அதைத் தீண்டலுமாகாது' என்று பிடிவாதஞ் செய்வது அறிவுக் கழகன்று.

"தார்க்கீகத்தையும் மிமாஞ்சத்தையும் ஈன்ற இந்தியா—வியாச சூத்திரத்தை ஈன்ற இந்தியா—திருவள்ளுவரையும் இளங்கோவையும் ஈன்ற இந்தியா மார்க்ஸியத்தை ஏற்க அஞ்சுமோ? அதை ஆராய்ந்து உண்மை காணப் பின்னிடுமோ? ஒருபோதும் அஞ்சாது; பின்னிடாது."

[ திரு. வி. க.வின் 'இந்தியாவும் விடுதலையும்'; பக். 13-16. ]

## நேருவின் ஆன்மிகம்

காந்தியத்திற்கும் மார்க்ஸியத்திற்கும் உறவு ஏற்படுத்திய பெருமை பண்டித நேரு அவர்களுக்கே உரியதாகும். அவர், ருஷ்யாவில் நிகழ்ந்த வர்க்கப் புரட்சியால் கவரப்பட்டார். அந்தப் புரட்சியில் புலர்ந்த புதிய ருஷ்யாவை—பொதுவுடைமை ருஷ்யாவைப் பார்க்க ஆர்வங் கொண்டு 1927ல் அந்த நாட்டிற்குச் சென்றார்.

சோவியத் ருஷ்யாவிலிருந்து திரும்பிய பின்னர், அவரது பேச்சிலும் எழுத்திலும் மார்க்ஸிய ஒளியைக் காண முடிந்தது. இதனை அவரே கூறக் கேட்போம்:

"ருஷ்யா ஒருபுறமிருக்க, மார்க்சியத்தின் தத்துவமும் தத்துவ இயலும் எனது மனத்தில் இருளடர்ந்த மூலைகளில் ஒளி பாய்ச்சியுள்ளது. வரலாற்றை நான் ஒரு புதிய திருஷ்டியுடன் பார்க்க முடிந்துள்ளது. மார்க்சிய விளக்கம் வரலாற்றின் மீது ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சியுள்ளது. அது ஏதோ ஒரு ஒழுங்கு முறைக்குட்பட்ட, குறிக்கோளுடன் கூடிய கருத்தைக் கவரும் நிகழ்ச்சியாக என் கண்முன் காட்சியளிக்கத் தொடங்கிற்று... மார்க்ஸியம், வரட்டுத் தத்துவத்திலிருந்து விடுபட்டது; விஞ்ஞானக் கண்ணோட்ட முள்ளது. மார்க்சியத்தின் இந்தச் சிறப்பு என்னைக் கவர்ந்துவிட்டது."

[ நேருவின் "சுயசரிதை"; பக். 362-863. ]

திரு. வி. கலியாணசுந்தரனாரைப்போல் நேருஜியும் காந்திஸம் மார்க்ஸிஸம் இரண்டையும் ஒருமைப்படுத்த முயன்றார். திரு. வி. க. காந்திஸ—மார்க்ஸிஸப் போதகராகமட்டும் வாழ்ந்தார். நேருஜியோ, அந்தக் கூட்டுத் தத்துவத்தைச் செயல்படுத்தி, சோஷலிசப் பாரதத்தைப் படைக்கவும், பாரதம் சுதந்தரம் பெறுவதற்கு முன்னும் சுதந்தரம் பெற்ற பின்னும் பாடுபட்டார்.

நேருஜி, விஞ்ஞான ரீதியான மார்க்ஸியத்தில் கொண்டிருந்த அழுத்தமான பற்று காரணமாக, காந்தியத்தோடு பிரிக்க முடியாதவாறு பிணைந்திருக்கும் மத—தெய்வீக உணர்ச்சிகளில் அழுத்தமான பற்றுக் கொள்ளாதவரானார். இந்த ஒரு விஷயத்தில் காந்தியடிகளோடு தமக்குள்ள கருத்து வேறுபாட்டை அடிக்கடி வெளிப்படையாகக் கூறி வந்தார். ஆயினும், அவர், அடிகளார் போதித்த ஆன்மீகத்திலிருந்து முற்றிலும் விடுபட்டவராக இருக்கவில்லை. இதோ, சான்று:

"......எனக்கும் ஏதோ ஒன்றில் நம்பிக்கை இருக்கிறது. அதை மதம் என்றாவது அல்லது நீங்

கள் விரும்பும் வேறு எந்தப் பெயரினுலாவது அழையுங்கள். அது மனிதனை அவனுடைய மாமூலான நிலையிலிருந்து மேலே உயர்த்து கிறது. மனிதனின் அந்தஸ்துக்கு ஆன்மீக குணம்சமும், தார்மிக ஆழமும் கொண்ட ஒரு புதிய உருவத்தைக் கொடுக்கிறது.''

[ஆர். கே. கரஞ்சியாவின் ''நேருவின் சிந்தனை''; பக். 33.]

காந்திஸத்தை உரைத்துப் பார்க்கும் கல்லாகவே மார்க்ஸிஸத்தை நேரு பயன்படுத்தினார். இறுதியாக வும் உறுதியாகவும் அவர் கடைப்பிடித்தது காந்திஸமே யாகும். இதனை, அப்பட்டமான மார்க்ஸிய வாதிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

''இந்திய தேச விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டு தேசியக் காங்கிரசின் முக்கிய தலை வர்களில் ஒருவராக வளர்ந்த நேரு காந்தியத் தால் கவரப்பட்டார். காந்தியம்தான் நாட் டின் மிகப் பெரிய அரசியல் கட்சியான காங் கிரசின் சித்தாந்தம்.

''அதே போதில் அரசியல் போராட்டத்தில் அவ ருக்குக் கிடைத்த மிகவும் விரிவான அனுபவ மும், மேற்கு நாடுகளின் முற்போக்கான ஜன நாயகக் கருத்துக்களுடன் அவருக்கு இருந்த தொடர்பும், இந்திய மக்களின் தேவைகளை யும் விருப்பங்களையும் நன்கு புரிந்து கொண்டு அவர் வெளிப்படுத்திய ஆழ்ந்த உணர்வும், சுயேச்சையாகவும் துணிவுடனும் சிந்திப்பதில் அவருக்கிருந்த ஆற்றலும் காந்தியத் தத்து வம் குறித்தும் சுயமாக ஆக்க முறையிலே சிந்தித்து பல சந்தர்ப்பங்களில் விமர்சனக் கண்கொண்டு பரிசீலித்து மதிப்பீடு செய்யும் படி அவரைத் தூண்டின.

"எனினும் காந்தியம் நேருவின்மீது தீர்மானமான செல்வாக்கை வகித்தது. இந்தச் சித்தாந்தத்தின்பால் விமர்சன ரீதியான கண்ணோட்டத்தை நேரு கொண்டிருந்தபோதிலும் காந்தியத்தையே பின்பற்றினார். குறிப்பாக, இந்தியா சுதந்தரமடைந்த பின் அவர் காந்தியமே தனது உலகக் கண்ணோட்டத்துக்கான சித்தாந்த, தத்துவார்த்த மூலாதாரமெனக் கருதினார். "......நாம் செயலாக்க முனையும் கொள்கைகளும், தத்துவார்த்தமும் காந்திஜி நமக்குப் போதித்தவையே" என்று நேரு கூறினார். அவர் மீது காந்தியத்தின் செல்வாக்கு எந்த அளவுக்கு இருந்தது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்."

[ சென்னை சோவியத் நாடு பிரசுராலயத்தார் 1967ல் "ஜவகர்லால் நேரு நினைவில்" என்னும் பெயரில் வெளியிட்டுள்ள மலரில் ருஷ்யக் கம்யூனிஸ்டான எ. லித்மன் என்பார், "ஜவகர்லால் நேருவின் தத்துவார்த்தக் கருத்துக்கள்" என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். ]

காந்தியடிகளுக்குப் பின்னர் இந்திய தேசிய காங்கிரசை உண்மையான சோஷலிசக் கட்சியாக மாற்ற நேரு தவறிவிட்டார் என்று யாரேனும் சொன்னால், அதனை மறுப்பதற்கில்லை. ஆனால் விடுதலைப் போராட்ட காலத்திலும் சரி; விடுதலைக்குப் பின்னரும் சரி; காங்கிரஸ் மகாசபையானது சோஷலிச விரோதிகளின் கூடாரமாக மாறிவிடக் கூடிய அபாயமிருந்தது அந்த அபாயத்திலிருந்து காங்கிரசைக்காத்து, சோசலிச ஆதரவாளர்களின் கை ஓரளவேனும் மேலோங்கி இருக்கும்படிச் செய்தவர் நேருவே ஆவார்.

# தீர்க்கதரிசனம்

காந்தியடிகள், தவிர்க்க முடியாத காரணத்தால் பாரத நாட்டிற்கு விடுதலை தேடும் முயற்சியிலேயே தமது ஆற்றல் முழுவதையும் செலவழித்தார். ஆயினும் அவர் சர்வதேச அரசியலில் தெளிந்த மதியும் தீர்க்க தரிசனமும் உடையவராக இருந்தார்.

இரண்டாவது பெரும்போரின் விளைவாக இந்தியா, பர்மா, மலாசியா, சிங்கப்பூர், இலங்கை, இந்தோனேசியா ஆகிய நாடுகள் அரசியல விடுதலை பெறக் கண்டோம். இப்படி நிகழுமென்று முன்கூட்டியே அடிகள் உணர்ந்திருந்தார். அத்துடன், உலகம் முழுவதுமே சோசலிச மயமாகும் என்றும் அவர் கருதினர்.

> "இந்த யுத்தத்தின் முடிவுடன் முதலாளித்துவத்தின் ஆட்சியும் மடிந்துவிடும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆயுத பலத்தின் மூலமோ. அகிம்சையின் மூலமோ ஏழைகளின் ஆட்சி வருவதையும் நான் காண்கின்றேன்."
>
> ['அரிசன்', 12-2-42.]

இப்படியே, சோசலிசத்திற்கும் கம்யூனிசத்திற்குமுள்ள தொடர்பு பற்றியும் அடிகள் தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார். இன்று சோசலிசத்தை ஒப்புக்கொள்வோரிற் பலர் கம்யூனிசத்தை வெறுக்கின்றனர். இந்த இரண்டையும் வெண்ணெயும் சுண்ணும்பும் போலக் கருதுவோருமுண்டு. அடிகள் அப்படி நினைக்கவில்லை.

> "என்னுடைய கம்யூனிசம் சோசலிசத்திலிருந்து அதிகம் மாறுபட்டதல்ல. இரண்டும் நன்ருகக் கலந்ததே அது. எனக்குப் புரிந்தவரை

யில் கம்யூனிசம் என்பது சோசலிசத்தின் இயற்கையான விளைவு.'' ['அரிசன்', 4.8-46.]

காந்தியடிகள் சர்வாதிகாரத்தை அடியோடு வெறுப்பவர். சோசலிசத்தைச் சர்வாதிகார முறையில் மக்கள் மீது திணிக்கக்கூடாதென்று அவர் கூறி வந்தார். இதன் பொருள் தெளிவு—அதாவது, மக்கள், தங்களுக்காகத் தாங்களே சோசலிச சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்பதாம். இதனை, "மக்கள் சர்வாதிகாரம்'' என்கின்றனர் கம்யூனிஸ்டுகள். ஒரு கட்டத்தில் சர்வாதிகாரமும் கலந்தே சோசலிசம் நடைமுறைக்கு வரக்கூடும் என்பதனை அடிகள் உணர்ந்திருந்தார்.

அமெரிக்கப் பத்திரிகையாளரான லூயி பிஷர் என்பார், ஒரு சமயம் அடிகளைச் சந்தித்து, "நீங்கள் ஒரு சோசலிஸ்டுதானே?'' என்று கேட்டார். அதற்கு அடிகள், "ஆம்; நான் சோசலிஸ்டுதான்'' என்று பதிலளித்தார்.

பிஷர், "நீங்கள் உண்மையாகவே சர்வாதிகாரத்தை ஆட்சேபிக்கிறீர்களல்லவா?'' என்று கேட்க, அடிகள் "சோசலிசமே சர்வாதிகாரந்தானே! அல்லவென்றால், அது பொழுது போக்கு வேதாந்தமாயிருக்க வேண்டும். நானும் என்னைக் கம்யூனிஸ்டு என்று சொல்லிக் கொள்ளுகிறேன்'' என்று பதில் கூறினர். [கா. நூ. தொ. 6; பக். 141.]

## ஜனநாயகம் எது ?

ஜனநாயகம் பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் இருந்து வருகின்றன. முதலாளித்துவத்தை ஒழிக்க விரும்பும் சோசலிஸ்டுகளிலேயும் சிலர், "நாங்கள் விரும்புவது சோசலிச ஜனநாயகம்'' என்கின்றனர். இதனை, கம்யூனிஸ்டுகள் வெறுக்கவில்லை. ஆயினும், இதனை, "பூர்ஷ்வா ஜனநாயகம்'' என்று கூறுகின்றனர். அவர்களது இறுதி லட்சியம் "சோசலிச ஜன

நாயகம்" ஆகும். இதனை, எஃப். புர்வாஸ்கி என்பவரால் எழுதப்பட்டு, சென்னை 'சோவியத் 'நாடு' பிரசுராலயத்தாரால் வெளியிடப்பட்டுள்ள "உலக விடுதலை இயக்கமும் சோசலிசமும்" (பக்கம் 134) என்ற நூல் விளக்குகின்றது. அது வருமாறு :

"முதலாளித்துவ அமைப்பின் கீழ் கம்யூனிஸ்டுகள் பூர்ஷ்வா ஜனநாயகத்தை ஆதரிக்கிறார்கள்; ஏனெனில், அதில் எண்ணற்ற குறைகள் இருந்த போதிலும்கூட, உழைக்கும் மக்களின் நேரடியான நலன்களைப் பாதுகாக்கவும், அவர்களை சோசலிசத்துக்கான ஒரு போராட்டத்தில் ஒன்றுபடுத்தவும், அதிகாரத்துவம், சர்வாதிகாரம், மற்றும் அந்த ரகத்தைச் சேர்ந்த பிற ஆட்சிகள் ஆகியவற்றைக் காட்டிலும், முதலாளித்துவ ஜனநாயகம் மேலான சந்தர்ப்பங்களை இன்னும் அதிகமாக வழங்குவது தான்.

"அதிகாரத்தைப் பெற்ற பின்னர், கம்யூனிஸ்டுகளின் தலைமையிலுள்ள தொழிலாளி வர்க்கம் சோசலிச ஜனநாயகத்தை உறுதியோடு புகுத்துகின்றது.

"அது, உற்பத்தியைச் சமுதாய மயமாக்குவதன் மூலமும், ஓர் உறுதியான பொருளாதார அடித்தளத்தின் மீது அரசியல் ஜனநாயகத்தை நிறுவுகின்றது."

அடிகள், முதலாளித்துவச் சமுதாயத்தின் ஜனநாயகம் பற்றிக் கூறுகையில், "ஜனநாயகம் என்ற புனிதப் பெயரில் ஆளும் வர்க்கத்தினரால் அல்லது வகுப்பினரால் மக்கள் சுரண்டப்படுகிறார்கள்" (கா. நூ. தொ. 6, பக். 11) என்று குறிப்பிட்டார். "அகிம்சா பூர்வமான ஜனநாயகமே இதற்கு உண்மையான பரிகாரம்" ('அரிசன், 8-6-40) என்பது அடிகளாரின் கருத்து.

## துவேஷமற்ற வர்க்கப் போர்!

காந்தியடிகள், மார்க்சியத்தைப் பெரிதும் மதித்தார் என்றாலும், மார்க்சிய வாதிகள் விரும்பும் வர்க்கப் போராட்டத்தை, அப்போராட்டத்திலே அவர்கள் கடைப்பிடிக்கும் இரகசியப் போர் முறைகளை அவர் அடியோடு வெறுத்தார்—எதிர்த்தார். இதனால், அன்று காந்தியடிகளும், இன்று காந்தியவாதிகளும் விஞ்ஞான சோசலிஸ்டுகளோடு ஒரே அணியில் நிற்கும் நிலை உருவாகவில்லை.

வர்க்கப் போர் தவிர்க்க முடியாதது என்பது மார்க்ஸீய வாதிகளின் முடிவான கொள்கை. காந்தியடிகள், சமுதாயத்தில் இருவேறு வர்க்கங்கள் இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொண்டார். அவற்றிடையே போராட்டம் நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் ஒப்புக் கொண்டார். முடிவில், வர்க்கமற்ற சமுதாயம் அமையவேண்டுமென்பதிலும் உறுதி கொண்டிருந்தார். ஆனால், முதலாளிகளிடையே மன மாற்றம் ஏற்படுத்த முயற்சி எடுத்து, அதில் வெற்றி காண்பதன் மூலம் வர்க்கப் போராட்டத்தைத் தவிர்க்க வேண்டும் என்று அவர் விரும்பினார்—தவிர்க்கவும் முடியும் என்றும் அவர் நம்பினார்.

வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாததாகி விட்டாலும், அது, வர்க்கத் துவேஷமற்ற சாத்வீக—சத்தியாக்கிரக நெறிகளின்படி நடைபெற வேண்டுமென்பதும் அடிகளாரின் கொள்கை.

> "லட்சியத்தையும், அதன் தன்மையையும் மிகத் தெளிவாக வியாக்கியானம் செய்து விட்டாலும், அதை அடைவதற்கான வழியை அறிந்து, அதைப் பயன்படுத்தினாலொழிய லட்சியத்தை அடைய முடியாது. ஆகையால், அந்த வழிகளைக் காப்பாற்றுவதிலும், அவற்றைப் படிப் படியாகப் பயன்படுத்துவதிலுமே நான் கருத்து செலுத்தி வந்திருக்கிறேன். வழிமுறைகளை நாம் சரிவரப்

புரிந்துகொண்டால், லட்சியம் வெற்றியடைவது உறுதி என்பது எனக்குத் தெரியும். நாம் லட்சியத்தை நோக்கி எவ்வளவு தூரம் போகிறேம் என்பது, பின்பற்றும் மார்க்கங்களின் தூய்மையையே பொறுத்திருக்கிறது என்றும் நான் கருதுகின்றேன்.

"பாமர மக்களைச் சுரண்டி வாழ்க்கை நடத்தும் சமஸ்தானாதிபதிகள், ஜமீன்தார்கள் முதலியோர், நம்முடைய மார்க்கங்கள் குற்றமற்றவை என்பதை அறிந்துகொண்டால், நம்மைக் கண்டு பயப்படுவதையோ, சந்தேகப்படுவதையோ, நிறுத்தி விடுவார்கள். நான் யாரையும் நிர்ப்பந்தம் செய்ய விரும்பவில்லை. அவர்கள் மனத்தை மாற்றவே முயல்கிறேன். இந்த வழி மிகவும் நீண்டதாகத் தோன்றலாம்; நீண்டதாகவும் இருக்கலாம். ஆனால், அதுதான் குறுக்குவழி என்று நான் நம்புகிறேன்.

"லட்சியத்தை விடவும் வழிகளே முக்கியம் என்று நான் வற்யுறுத்துவதில்தான் வேற்றுமை இருக்கிறது. லட்சியத்தைப் போலவே வழிகளும் முக்கியமானவை என்று நான் கருதுகின்றேன். ஒருவகையில் வழிகள் இன்னும் அதிக முக்கியமானவை. ஏனெனில், அவை நம் சக்திக்கு உட்பட்டிருக்கின்றன. வழிகள் நம் சக்திக்கு உட்பட்டில்லையென்றால், லட்சியத்திலும் வெற்றி பெற முடியாது."

*[கா. நூ. தொ. 6 ; பக். 21.]*

அடிகளார் சுதந்தரப் போராட்டத்திலும் லட்சியத்தைப் போலவே, அதை அடைவதற்கான வழியும் தூயதாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். அதில் அவர் வெற்றியுங் கண்டார். அதனால், அதேமாதிரியான—லட்சியத்தைப் போன்றே வழியும் தூயதான—போர் முறையைப் பொருளாதாரப் போராட்டத்திற்கும் அடிகள் வற்புறுத்தினர்.

SENTAMIL COLLEGE 4659 MADURAI

வழிகள் தூயவையா யிருப்பின், மாற்றாரின் மனத்தை மாற்ற முடியும்; அதன் மூலம் லட்சியமும் வெற்றி அடையும் என்பதனை, சுதந்திரப் போராட்டத்திலே கண்கூடாகக் கண்டுவிட்டோம். 600 சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்கும் மகத்தான புரட்சியை சாத்விகமும் சமாதானமுமான முறைகளில் நிகழ்த்த முடிந்ததென்றால், அதற்குக் காரணம், சமஸ்தானாதிபதிகளின மனத்தை மாற்ற முடிந்ததுதான்.

> "சமஸ்தானாதிபதிகள் தமது எதேச்சாதிகாரத்தைத் தாமாகவே விட்டுக் கொடுத்து விடுவார்கள் என்பதில் திரு. ஜெயப்பிரகாசருக்கு நம்பிக்கை இல்லை போலும்! எனக்கு அந்த நம்பிக்கை இருக்கிறது. ஏனெனில், முதலாவதாக அவர்களும் நம்மைப்போல நல்ல மனிதர்களே. இரண்டாவதாக, உண்மையான அகிம்சையின் ஆற்றலில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது."
>
> *[காந்தி நூல் தொ. 6; பக். 5.]*

என்பதாக, 20-4-40 'அரிசன்' இதழில் அடிகள் எழுதினார். அவர் நம்பியபடியே நடந்ததை அனுபவத்தில் கண்டோம்.

## இரகசிய முறை

மார்க்ஸீய வாதிகள் வர்க்கப் புரட்சியில் இரகசிய முறைகளைக் கையாளுகின்றனர். இந்த முறை காந்தியத்திற்கேயன்றி, ஜனநாயகத்திற்கும் விரோதமானதென்று அடிகள் கருதினார். சுதந்தரப் போராட்டத்தின் போதும் அவர் இரகசிய முறையை அடியோடு வெறுத்தார். அங்கு மிங்குமாக ஒன்றிரு இடங்களில்—ஒன்றிரு தேசபக்தர்களால் இரகசிய முறை கையாளப்பட்டது பற்றி அறிந்தபோதும், அதனை வன்மையாகக் கண்டிக்கவும் அடிகள் தயங்கவில்லை. ஆகவே, பொருளாதாரப் போராட்டத்திலும், இரகசிய முறை, வெற்றிக்குத் தடையாக இருக்குமென்று அடிகள் கருதியது

குறித்து வியப்படைவதற்கில்லை. இதுபற்றி அடிகள் கூறியது வருமாறு :

"அடுத்தபடியாக, இரகசிய முறைகளுக்கு வருவோம். இரகசிய முறைகள் தடுக்கப்பட வேண்டுமென்பதில் என்னுடைய உறுதி மாறவே இல்லை. இதற்கு என்னால் விதிவிலக்களிக்கவே முடியவில்லை. இரகசியத்தினால் எவ்வளவோ விஷமச் செயல்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவற்றை அடக்குவதில் கண்டிப்பு காட்டாவிடில், அது இயக்கத்தை நாசம் செய்து விடும்.

"இரகசிய முறைகள் தேவைப்படும் அசாதாரண நேரங்கள் சில இருக்கலாம். ஆனால், அச்சமற்று இருப்பதற்குப் பொதுமக்களைப் பயிற்றுவிக்க வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். அதற்காக, தேவைப்படுமிடத்தும் இரகசிய முறைகளின் பயனை நான் கைவிட்டு விடுவேன். குறிப்பிட்ட சில நேரங்களில் இரகசிய முறைகளைக் கையாளலாமென்று மக்கள் நினைக்கும்படிச் செய்து, அவர்கள் மனத்தைக் குழப்ப நான் விரும்பவில்லை. மக்களின் சாத்வீக எதிர்ப்புச் சக்தி வளர்ச்சி அடைவதற்கு இரகசியம் விரோதமானதாகும்"

*[காந்தி நூல். தொ, 6; பக். 21.]*

பலாத்காரமும் இரகசிய முறையும் உடன் பிறந்தவையாகும். அடிகள், பலாத்காரத்தை அறவே வெறுத்தவராதலால், அதன் உடன் பிறப்பான இரகசிய முறையையும் வெறுப்பவரானார்.

காந்தியடிகள், சோசலிசத்தைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு விட்டவர்கள் அதற்கேற்ப எளிய வாழ்க்கை வாழ வேண்டுமென்பதனையும் வற்புறுத்தினார். இதில், தமக்கும் பிற சோஷலிஸ்டுகளுக்குமிடையேயுள்ள வேற்றுமையையும் விளக்கினார். அது வருமாறு :

"சோஷலிசத்தை அடைவதற்கு முதற்படி, இந்த வழியை மேற்கொள்ளுபவர், தனது சொந்த வாழ்க்கையில் இதற்கான மாறுதல்களைச் செய்துகொள்ள வேண்டியதுதான்.

"இன்று பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதற்குத் தாங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்று சோசலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் சொல்லுகிறார்கள். அதை ஆதரித்துப் பிரச்சாரம் மட்டுந்தான் செய்வார்களாம். அதற்கு வேண்டிய வெறுப்புணர்ச்சியைச் சிருஷ்டித்து, வளர்க்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். 'இராச்சிய நிர்வாகம் கிடைக்கும்போது சமத்துவத்தை அமுல் நடத்துவோம்' என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

"என்னுடைய திட்டப்படி......துவேசத்திற்குப் பதிலாக அன்புணர்ச்சிகளைத் திரட்டி, மக்களை என்பக்கமாக திருப்புவதன் மூலம் நான் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவேன்.

"சமூகம் முழுவதையும் என் பக்கமாகத் திருப்பும் வரையில் நான் காத்திருக்க மாட்டேன். என்னையே முதல் உதாரணமாக வைத்துக்கொண்டு ஆரம்பித்து விடுவேன்.

"சென்ற ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இதையே செய்ய நான் முயற்சித்து வருகிறேன். ஆகவே, பணக்காரர்கள் எனக்களிக்கும் மோட்டார்களையும், மற்ற வசதிகளையும் நான் பயன்படுத்திக் கொண்டாலும், நான் முதல்தரமான கம்யூனிஸ்டு என்று சொல்லிக் கொள்கிறேன்.

"அவர்களுக்கு என்மீது எந்தவிதமான பிடிப்பும் கிடையாது. மக்களின் நலன்களுக்கு அவசியம் என்று தெரிந்தால், ஒரே நிமிடத்தில் அவர்களை நான் உதறித் தள்ளிவிட முடியும்."

[பியாரிலால் எழுதிய "காந்திஜியின் கம்யூனிசம்" என்ற நூலிலிருந்து]

வறுமையை ஒழிப்பதிலே உண்மையான நாட்டமுடைய எவரும்—அவர் சன்மார்க்கவாதியான ஞானியாகட்டும்; சமுதாய வாதியான அரசியல் வாதியாகட்டும்—விஞ்ஞான ரீதியான சோசலிசத்தை வெறுத்து ஒதுக்குவதற்கில்லை. ஆகவே நடைமுறையில் விஞ்ஞான சோசலிஸ்டுகளோடு காந்தியடிகள் வேறுபட்டாரெனினும், விஞ்ஞான சோசலிசத்தைக் கொள்கையளவில் இதய சுத்தியோடு ஏற்றுக் கொண்டார்.

அடிகள், சுதந்திரப் போராட்டத்தின்போதும் இதே வழிமுறைகளைப் போதித்தார். ஆம்; சுதந்திர இந்தியாவில் அரசாங்கத்தின் மூலமாக நடைமுறைக்குக் கொண்டுவரத்தக்க மதுவிலக்கு, கைத்தொழில் அபிவிருத்தி, சாதிவேற்றுமை ஒழிப்பு, தாய்மொழி வளர்ச்சி, தீண்டாமை விலக்கு ஆகியவற்றைச் சுதந்தரத்திற்காகப் பாடுபடும் தேசபக்தர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டுமென்று அடிகள் வற்புறுத்தினர்.

சோசலிசத்திற்காகப் பாடுபடுவோர், தங்கள் சொந்த வாழ்க்கையில் சுகஜீவிகளாகவோ, புலனடக்கமில்லாதவர்களாகவோ இருப்பதென்பது, அடிகளால் நினைத்துப் பார்க்கவும் முடியாததாக இருந்தது.

# தருமகர்த்தாப் பொதுவுடைமை

காந்தியடிகள் விஞ்ஞான சோஷலிஸ்டுகளைப் போலவே, வர்க்க வேற்றுமை யற்ற சமுதாயத்தை விரும்பினராதலால், "உடைமையாவது களவு" என்று கூறினர். "இந்திய சமஸ்தானாதிபதிகள், மில் முதலாளிகள், லேவாதேவிக்காரர்கள் முதலியவர்கள் மக்களைச் சுரண்டுவதன் மூலமே கொள்ளை லாபமடிக்கிறார்கள்" (கா. நூ. தொ. 6; பக்கம் 157) என்று அவர்கள் மீது குற்றஞ் சாட்டினர். ஆயினும், விஞ்ஞான சோஷலிஸ்டுகளின் நடைமுறையில் வர்க்கத் துவேஷம், பலாத்காரம், சர்வாதிகாரம் ஆகியவை கலந்திருப்பதன் காரணமாக, தனிவுடைமைக்கு எதிராக தாம் விரும்பும் சமத்துவத் திற்குத் "தருமகர்த்தாப் பொதுவுடைமை" என்று பெயர் தந்தார். இதன் மூலம் விஞ்ஞான சோஷலிஸ்டுகளிடமிருந்து தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டார். "தருமகர்த்தாப் பொதுவுடைமை" என்பது, தனித் தத்துவமன்று; நடைமுறைக்கான பெயர்தான். அடிகளாரின் தத்துவம் அப்பட்டமான சோசலிசந்தான். அதில் ஐயமில்லை. "கடையனுக்கும் கதிமோட்சம்" (கா. நூ. தொ. 6; பக்கம் 23) என்பது அடிகளாரின் கோஷமாக இருந்தது. "உடலுழைப்புக்கே சமுதாயத்தில் அதிக மதிப்பிருக்க வேண்டும்" (கா. நூ. தொ. 6; பக். 15) என்றும் அவர் கூறினர்.

தருமகர்த்தாப் பொதுவுடைமை என்பதற்கு அடிகள் தந்த விளக்கம் வருமாறு:

> "நம்மிடமுள்ள தேவைக்கு அதிகமான செல்வத்தை, நாம் தருமகர்த்தாக்களைப் போன்று வைத்துக் கொண்டிருக்கிறோமென்ற கருத்தே இந்தச் சம விநியோகக் கொள்கையின் அடிப்படையா யிருக்க வேண்டும்.

"இந்தக் கொள்கையின்படி ஒருவர் தம்முடைய பக்கத்து வீட்டுக்காரரைவிட ஒரு ரூபாய் கூட அதிகமாக வைத்துக் கொண்டிருக்கக் கூடாது...பணக்காரர்களுடைய செல்வம் அவர்களிடமே விட்டு வைக்கப்பட்டிருக்கும்.

"தம்முடைய சொந்தத் தேவைகளுக்கு நியாயமாக எவ்வளவு வேண்டுமோ அதை மட்டும் அவர்கள் செலவிடுவார்கள். மீதமுள்ளவற்றை தரும கர்த்தா மாதிரி வைத்துக்கொண்டு இருப்பார்கள். அது சமூகத்திற்குச் செலவிடப்பட வேண்டியது.

"தருமகர்த்தாவாக இருப்பவர்கள் நாணயமாக நடந்து கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையுடனேயே இந்த வாதம் சொல்லப்படுகிறது."

[கா. நூ. தொ. 6; பக். 34.]

"வார்சுரிமை மூலமாகவோ, வியாபாரம், தொழில் மூலமாகவோ எனக்குக் கணிசமான சொத்துக் கிடைத்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்தச் செல்வம் பூராவும் எனக்குச் சொந்தமானதல்ல என்பதை நான் உணர வேண்டும். லட்சக் கணக்கான மற்றவர்களைப் போல நாணயமான வாழ்க்கை நடத்துவதற்குத்தான் எனக்கு உரிமையுண்டு என்பதை நான் உணர வேண்டும். மீதமுள்ள என் செல்வம் பூராவும் சமுதாயத்திற்குச் சொந்தமானது; சமுதாயத்தின் நலன்களுக்காகவே அதைச் செலவிட வேண்டும்.

"ஜமீன் தார் கள், சமஸ்தானாதிபதிகளின் சொத்துக்கள் விஷயத்தில் சோசலிஸ்டுக் கொள்கை தேசத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டபோது இந்த முறையை நான் விளக்கினேன்."

[காந்தி நூல் தொ. 6; பக். 222.]

## அதிகாரக் குவியல்

அடிகள், தாம் பொது வாழ்வில் ஈடுபட்ட நாள் தொட்டே தனிவுடைமையின் கொடுமைகளை உணர்ந்து அதனை வெறுத்து வந்தாரெனினும், அவர் "தருமகர்த் தாப் பொதுவுடைமை" என்ற சொற்றொடரைப் பயன் படுத்தியது, 3-6-39 'அரிசன்' இதழிலாகும்.

விஞ்ஞான சோசலிசத்தில் அதிகாரங்களனைத்தும் அரசாங்கத்திடம் குவிக்கப்படுகின்றது. 'மக்கள் சர்வாதி காரம்' என்ற பெயரில் ஒற்றைக் கட்சியின் சர்வாதி காரம் சமுதாயத்தின் மீது திணிக்கப்படுகிறது. தரும கர்த்தாப் பொதுவுடைமையில் அதிகாரக் குவியலும் ஒற்றைக் கட்சியின் சர்வாதிகாரமும் தவிர்க்கப்படு மென்பது அடிகளின் நம்பிக்கையாகும்.

காந்தியடிகள் முழுமையான ஜனநாயகவாதி. சோசலிசத்திற்காகக் கூட ஜனநாயகத்தை மூளியாக் கவோ, முடமாக்கவோ அவர் விரும்பவில்லை. அதனு லேயே, எந்தவிதமான சர்வாதிகாரத்திற்கும் இடமற்ற தூய்மையான ஜனநாயகத்தின் மூலமாகவே அவர் சோஷலிச சமுதாயத்தைப் படைக்க விரும்பினுர். "அதிக அதிகாரம் செலுத்தாத அரசாங்கமே சிறந்த அரசாங்கம்" என்பதாக அடிகள் கூறினுர்.

> "மக்களுக்கு ராஜீய அதிகாரம் கிடைத்துவிடும் போது மக்களின் சுதந்திரத்தில் தலையிடுவது ஒரு குறைந்த பட்ச அளவுக்குக் குறைந்து விடுகிறது என்பதே பொருளாகும். அதாவது, அரசாங்கத் தின் தலையீடு அதிகமாக இல்லாமல் தன் விவகா ரங்களைச் சுமுகமாகவும், திறம்படவும் நடத்தும் நாட்டில் உண்மையான ஜனநாயகம் இருக்கும். எங்கே இந்த நிலைமை இல்லையோ, அங்கே ஜன நாயக அரசாங்கம் என்பது பெயரளவில்தான் இருக்கும்."

[கா. நூ. தொ. 6; பக். 13.]

"சுரண்டலை ஒரு குறைந்த பட்ச அளவுக்குக் குறைத்து விடக்கூடிய விதத்தில் மனிதர்கள் தங்கள் மனோ உறுதியை வளர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன். அரசாங்கத்தின் அதிகாரம் விரிவடைந்து கொண்டே போவது எனக்குப் பெரும் திகிலைத் தரக்கூடியதாகும். அதனால், சுரண்டல் குறைந்து நன்மை ஏற்படுவதுபோல் தோன்றினாலும், அது மிகப் பெரும் தீங்கை இழைத்து விடுகிறது. ஏனெனில், எந்த முன்னேற்றத்திற்குமே ஆணிவேர் போன்ற மனிதனுடைய தனித்தன்மையை அது அழித்து விடுகிறது."

[கா. நூ. தொ. 6; பக். 23.]

## சர்வாதிகாரம் வேண்டாம் !

அடிகள் அரசாங்கத்திடம் எல்லையற்று அதிகாரங்கள் குவிக்கப்படுவதை வெறுத்ததுபோல, அரசாங்கம் அல்லது கட்சி ரீதியான சர்வாதிகாரத்தையும் வெறுத்தார். "மக்களுக்கு நன்மையளிக்க என்றுள்ள சர்வாதிகாரத்தையோ, வேறெந்தவிதமான சர்வாதிகாரத்தையோ நான் ஒப்புக்கொள்ள முடியாது." (கா. நூ. தொ. 6; பக். 22) என்று கூறினார்.

சர்வாதிகாரத்தை அடிகள் வெறுத்ததனாலேயே நாட்டில் இன்று நடைமுறையிலுள்ள பெயரளவு ஜனநாயகத்தை அவர் ஏற்றுக் கொண்டுவிட்டார் என்று யாரும் கருதிவிடக்கூடாது. ஆம்; சோசலிச விரோதிகள்—உதட்டளவில் சோஷலிசம் பேசுவோர் இப்படித் தான் பிரசாரம் செய்கிறார்கள். இன்றைய ஜனநாயகம் 'வல்லான் வகுத்தது வாய்க்கால்' என்பது அடிகளாருக்குத் தெரியும்.

வறுமையும், கல்வியின்மையும், சாதி உயர்வு தாழ்வும், அரசியல் கலப்புடைய சுயசாதிப் பற்றும், மூடநம்பிக்கைகளும், நிலப் பிரபுத்துவமும் கோடானு

கோடி மக்கள் மீது ஆதிக்கம் செலுத்திவரும் வரையில் உண்மையான ஜனநாயகம் நடைமுறையி லிருப்பது சாத்தியமில்லை. இன்றைய சமுதாய அமைப்பே ஒரு வகையான பலாத்காரத்தின் மூலம் கட்டப்பட்டதாகும். அதாவது, பலர்மீது சிலர் ஆதிக்கம் செலுத்திவரும் சமுதாயத்திலேயே இன்று நாம் வாழ்ந்து வருகின்றோம். இதனை உணர்ந்தே, அடிகள், "அகிம்சா பூர்வமான ஜனநாயகமே உண்மையான பரிகாரம்" (கா. நூ. தொ. 6; பக். 22.) என்றார்.

வர்க்கத் துவேஷம், பலாத்காரம், சர்வாதிகாரம் ஆகிய முறைகளின் மூலம் சோசலிச சமுதாயத்தைப் படைப்பதனை காந்தியடிகள் விரும்பாதது போல, நிலப் பிரபுக்கள், முதலாளிகள் ஆகியோரும் விரும்பவில்லை. மேற்போக்காகப் பார்த்தால், காந்தியடிகளுக்கும் நிலப் பிரபுத்துவ—முதலாளித்துவ சக்திகளுக்கும் பலாத்கார முறை மூலம் சோஷலிச சமுதாயம் அமைப்பதனை எதிர்ப்பதில் ஒற்றுமை இருப்பது போலத் தோன்றும். ஆனால் இது வெறும் மயக்கம். இந்த மயக்கத்தைப் பயன்படுத்தித்தான் காந்தியடிகளின் கருத்துக்களை—இங்கும் அங்குமாக—தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சோசலிசத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்து வருகின்றனர் முதலாளித்துவக் கூட்டத்தார்.

## வெண்ணெயும் சுண்ணும்பும்

உண்மையில், சோசலிசத்தை எதிர்க்கும் நிலப் பிரபுத்துவ — முதலாளித்துவக் கூட்டத்தாருக்கும் காந்தியடிகளுக்குமுள்ள வேற்றுமையானது வெண்ணெய்க்கும் சுண்ணும்புக்கும் உள்ளது போன்றதாகும். பணக்காரர்கள் வெறுப்பது, வர்க்கத் துவேஷம்—பலாத்காரம்—சர்வாதிகாரம ஆகியவற்றை மட்டுமல்ல; சோசலிசக் கொள்கையைக் கூடத்தான்! சுருங்கச் சொன்னால், இன்றுள்ள வர்க்க வேற்றுமையோடு கூடிய சமுதாயத்தை என்றென்றும் நிலைநிறுத்த வேண்டுமென்பதே சோசலிச விரோதிகளின் கொள்கையாகும்.

காந்தியடிகளோ, எந்த நியாயத்தைக் கொண்டும் இன்றுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வோடு கூடிய சமுதாயம் அப்படியே நீடிப்பதை விரும்பாதவர்; விரும்பு வோரை சமூக விரோதிகளாகவும் கருதியவர். சோசலிச சமுதாயம் படைக்க வேண்டுமென்ற கொள்கையிலே விஞ்ஞான சோஷலிஸ்டுகளோடும் ஒத்துப்போகக் கூடியவர்.

வர்க்கத் துவேஷத்தையும் பலாத்காரத்தையும் அடிகள் வெறுத்தது, அவற்றல் சோசலிச சமுதாயத் தைக் காணும் நாள் தொலைவில் போய்விடக்கூடும் என்ற அச்சத்தாலுந்தான். தனது சாத்வீக முறை யால் சோசலிச சமுதாயத்தை விரைவில் காண முடியும் என்று அவர் நம்பினர்.

பலாத்கார—சர்வாதிகார முறைகளால் தனி நபர் சுதந்தரம் திரும்பவும் பெற முடியாதபடி அழிந்து போய்விடக் கூடுமென்றும் அடிகள் அஞ்சினர். 'தனி நபர் சுதந்தரம்' என்று அடிகள் கூறியது, லோகாயத சுதந்தரத்தை மட்டும் அல்ல; ஆன்மிக சுதந்தரத்தையு மாகும். உணவு, உடை, வீடுபோன்ற லோகாயத வச திகளுக்காக ஆன்மிக சுதந்திரத்தை இழந்துவிடுவதை அடிகள் நினைத்துப் பார்க்கவும் முடியாதவரானர். அதனாலேயே, பலாத்கார—சர்வாதிகார முறைகளால் சோசஷலிச சமுதாயம் படைப்பதனை அவர் வெறுத் தார்.

நிலப் பிரபுக்கள் முதலாளிகள் நிலை அதுவன்று. அவர்கள் ஆன்மிக உணர்வுக்கு நெடுந்தொலைவிலுள்ள வர்கள். ஆகவே, விஞ்ஞான சோசலிசத்திற்கும் காந்தி யத்திற்குமுள்ள கொள்கை ஒற்றுமையை மறைத்து விட்டு, நடைமுறையில் இரண்டுக்கு மிடையே உள்ள வேற்றுமையைப் பெரிதுபடுத்திப் பிரசாரம் செய்து, பொருளாதார ஏற்றத் தாழ்வுடைய இன்றைய சமுதா யத்தை நிலைநிறுத்த முயலுகிறர்கள். அவர்களுடைய இந்தப் போக்கானது காந்தியடிகள் விருமபாத வர்க்கத் துவேஷத்தை வளர்த்துவிடக் கூடும்.

யாரெல்லாம் சோசலிசத்தின் விரோதிகளோ, அவர்களெல்லாம் காந்தியத்திற்கும் விரோதிகளே என்பதை மக்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

## மனமாற்றம்

பணக்காரர்களின் மனங்களை மாற்றிவிட முடியும் என்று அடிகள் உண்மையாகவே நம்பினர். காந்தியடிகளோடு நெருங்கிப் பழகியவரும் சிறந்த காந்திய எழுத்தாளருமான திரு. வி. பி. கேர் கூறுவதாவது :

> "பாவத்தி லிருந்து மீட்கவே முடியாதவன் என்று காந்திஜி யாரையும் நினைத்ததில்லை. பெரும்பாலும் சந்தர்ப்பத்தினுலும், சூழ்நிலை காரணமாகவுமே ஒருவன் தவறிழைக்கிருன். ஆகவே, மனிதன் வேறு; சூழ்நிலை அல்லது முறை வேறு என்ற வேறுபாட்டைக் கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. தவறிழைப்பவனை விரோதியாகக் கருதக் கூடாது. வாய் வார்த்தையாகச் சொல்லியும் அவனை நேர்வழிக்குக் கொண்டு வரலாம். அவசியமானுல் ஒத்துழையாமை முறையையும் பயன்படுத்தலாம். இது பலனளிக்கத்தக்க வழியாகும். தவறிழைத்த ஒருவன் அதை உணர்ந்து உண்மையாகவே அதற்காக அவன் மனப் பூர்வமாக வருந்தும்படிச் செய்வதற்குக் கஷ்டப்பட வேண்டியிருக்கலாம். ஆகவே, தீய முறையைத் தான் அழிக்க வேண்டுமே ஒழிய, தனி மனிதனை அல்ல. இந்த முறையில் எதிராளியின் பகையை நாம் தேடிக்கொள்வதில்லை. ஒரு பொது நோக்கத்திற்கு அவர் நம்முடன் ஒத்துழைக்கும்படி செய்வதற்கும் இதில் வாய்ப்பு இருக்கிறது."
>
> *[கா. நூ. தொ. 6; பக். 5.]*

## தனிநபர் சுதந்தரம்

காந்தியடிகள் தனி நபர் சுதந்திரத்திற்குப் பெரிதும் மதிப்பளித்தார். ஆனுல், அந்தத் தனி நபர் சுதந்

தரம் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ளவர்கள் நலன்களுக்கு விரோதமானதாக இருக்கக்கூடாதென்பதும் அவரது கருத்தாக இருந்தது. இந்நாளில், 'தனி நபர் சுதந்தரம்' பற்றிப் பேசுவோர், அன்னிய ஆட்சிக்காலத்தில்—நிலப் பிரபுத்துவ சமுதாயத்தில் எபபடி எப்படியெல்லாமோ முன்னேறி விட்டார்களே, அவர்கள் நலன்களைக் காப்பதற்காகவே அப்படிப் பேசுகின்றனர். ஆம்; நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டினால், பாங்குகளை அரசுடைமையாக்கினால், நகர்ப்புறச் சொத்துக்கும் வருவாய்க்கும் உச்சவரம்பு கட்டினால், மாஜி மன்னர்களுக்குத் தரப்படும் மான்யங்களை நிறுத்தினால், கல்லூரிகளில் தாய் மொழியைப் பயிற்றுமொழியாக்கினால் அதெல்லாம் தனிநபர் சுதந்திரத்தைப் பறிப்பதாகும் என்று வாதாடுகின்றனர். நீதிமன்ற மேறி அரசு மீது வழக்குத் தொடுக்கின்றனர். அதிலே சில நேரங்களில் வெற்றியும் பெறுகின்றனர். இவர்களுடைய தனிநபர் சுதந்தரக் கோஷம், சமுதாய முன்னேற்றத்திற்கு எதிரான தாகும். வியப்பென்னவென்றால், இந்தக் கூட்டத்தார், தங்கள் தனிநபர் சுதந்தரக் கோஷத்திற்கு ஆதரவாகக் காந்தியடிகள் கருத்துக்களையும் பயன்படுத்திக் கொள்வதாகும்.

தனி நபர் சுதந்தரமும் சமுதாயத்தின் முன்னேற்றமும் ஒத்துப்போக வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார்; ஒத்துப்போக முடியுமென்றும் அவர் நம்பினார். ஒருக்கால், தனி நபர் சுதந்திரத்திற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் முரண்பாடு ஏற்படுமானால், அப்போது சமுதாய முன்னேற்றத்திற்கே ஆதரவு தர வேண்டும்; தனி நபர்கள் தங்கள் சுதந்தரத்தை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று அடிகள் கூறினார். இதோ சான்று :

"சுதந்தரம் பெற வேண்டியவர்கள் மக்கள். இது முற்றிலும் பணக்காரர்கள் அல்லது படித்தவர்களின் பொறுப்பல்ல. எந்தச் சுதந்தர அமைப்பிலும், பணக்காரர்களும் படித்தவர்களும் தங்கள்

நலன்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும்.”

*[கா. நூ. தொ. 6; பக். 228.]*

“வாயில்லாப் பூச்சிகளாகவுள்ள ஏழை மக்களின் நன்மைக்காக சுதந்திரம் பெறுவதே நமது நோக்கம். ஆகவே, அவர்களுடைய நலன்களுக்கு விரோதமாக உள்ள ஒவ்வொரு நலனும் மாற்றப்பட வேண்டும். மாற்ற முடியாதென்ருல், அது ஒடுக்கப்பட வேண்டும்.”

*[‘யங் இந்தியா,’ 17-9-31]*

காந்தியவாதிகள், ‘தனி நபர் சுதந்திரம்’ என்ற புனிதமான தத்துவத்தை ஏற்கலாம்; எதிர்க்கத் தேவையில்லை. ஆனால், தனிநபர் சுதந்தரம் என்பது, தனிவுடைமைக்கு ஆதரவு அளிப்பது அல்ல. உண்மையான பொதுவுடைமைச் சமுதாயத்தில்தான் தனி நபர் சுதந்தரம் இருக்க முடியும்.

நிலப் பிரபுத்துவ—முதலாளித்துவச் சக்திகளும், அந்தச் சக்திகளுக்கு ஆதரவளிக்கும் கட்சிகளும் காந்தியடிகளின் தருமகர்த்தாப் பொதுவுடைமையை, விஞ்ஞான சோசலிசத்தைத் தாக்கும் தடியாகப் பயன்படுத்த முயல்கின்றன.

ஆம்; சட்ட திட்டங்களின் மூலம் சோசலிச சமுதாயம் படைக்கும் முயற்சிகளுக்கு எதிராக, தருமகர்த்தாப் பொதுவுடைமைத் தத்துவம் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது, “தனி வுடமையாளர் மனமாற்றம் அடையும்வரை காத்திருப்பதுதான் காந்தியம்; சட்டத்தின் மூலம் நிர்ப்பந்திப்பது காந்தியமாகாது. அதையும் ஒருவகை பலாத்காரமாகவே காந்தியடிகள் கருதினர்” என்று வாதாடப்படுகின்றது.

இது, காந்தியத்தைத் திரித்துக் கூறுவதாகும். காந்தியடிகள் தனிவுடைமையாளரின் மனமாற்றத்தின் மூலம் பொதுவுடைமைச் சமுதாயம் படைப்பதையே விரும்பினர் என்பது உண்மை. ஆனால், அந்த நிலை

ஏற்படாதென்றால், குறைந்த பட்ச பலாத்காரம் பயன் படுத்தப்படுவதை அவர் ஆதரித்தார் என்பதை இந்தத் திரிபுவாதிகள் மறந்து விடுகின்றனர்; அல்லது மறைத்து விடுகின்றனர்.

> "இன்றைய பணக்காரர்களைப் பொருத்தவரையில் இரண்டே வழிகள் தான் இருக்கின்றன. ஒன்று, அவர்கள் தாமாகவே தம் செல்வத்திற்குத் தருமகர்த்தாக்களாகத் தம்மைத் தாமே மாற்றிக் கொள்ளவேண்டும். அல்லது, போராட்டத்தில் இறங்க வேண்டும்."
>
> *[கா. நூ. தொ. 6; பக். 228.]*

இது, தனி வுடைமையாளர்களுக்குக் காந்தியடிகள் விடுத்த தெளிவான அறைகூவலாகும்—அதாவது, பணக்காரர்கள் தருமகர்த்தாப் பொதுவுடைமையை ஏற்கவேண்டும்; இல்லையேல், ஏழை மக்களின் எழுச்சி மிக்க—சாத்விகமான கிளர்ச்சியைச் சந்திக்க அவர்கள் தயாராக வேண்டும்.

விஞ்ஞான சோசலிஸ்டுகள் சொல்லுகின்ற—அகிம்சை வழியில்லாத வர்க்கப் போராட்டத்தை காந்தியடிகள் விரும்பவில்லை யென்பது தெளிவு. ஆயினும், மனமாற்றமடையாத பணக்காரர்களுக்கு எதிராக பொதுமக்கள் கருத்தைத் திரட்டவும், அகிம்சை வழிப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்தி, அதன் மூலம் சுதந்தர இந்தியாவை சோஷலிச இந்தியாவாக மாற்றவும் காந்தியடிகள் அனுமதித்துள்ளார். "சுதந்திர இந்தியாவில் போராட்டத்திற்கே இடமில்லை" என்ற கருத்து காந்தியத்திற்கு முரணானதாகும். இதோ சான்று :

> "பணக்காரர்கள் தாமாகவே தருமகர்த்தாக்களாகா விட்டால், விபரீதத்தைத் தவிர்க்கவேண்டுமென்ற விருப்பம் அவர்களுக்கு இல்லாவிட்டால், சந்தர்ப்பங்களின் நிர்ப்பந்தம் காரணமாகஅவர்கள் அந்த ஏற்பாட்டிற்கு இணங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

"அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட அரசில், பலாத்காரத்தின் மூலம் சாதிக்கவே முடியாததையும் பொதுமக்கள் அபிப்பிராயத்தின் மூலம் சாதித்துவிட முடியும்.

"உண்மையில், உழைப்பவர்களேதான் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் சொந்தக்காரர்கள். அறிவோடு கூடிய சேர்க்கையின் மூலம் தம்மிடமுள்ள ஆற்றலை அவர்கள் உணர்ந்தால், சுரண்டும் வர்க்கத்தின் கொடுமைகள் முடிவுக்கு வந்துவிடும். ஏழைகளை ஒடுக்கிவைக்கும் தீமைகளுடன் அவர்கள் ஒத்துழையாமையைக் கடைப்பிடித்தால், அவை ஆதரிப்பாரற்றுச் செத்துவிடும். வர்க்கப் போராட்டத்தைத் தவிர்க்கவும் இதுதான் வழி."

*[கா. நூ. தொ. 6; பக். 39–40.]*

# சுயாட்சியும் சோஷலிசமும்

இந்தியாவைப் போன்ற தனித்த மொழி, பண்பாடு, பழக்கவழக்கம், வரலாறு ஆகியவற்றை யுடைய மொழி வழித் தேசிய இனங்களும் அவற்றின் ராஜ்ய ரீதியான தாயகங்களும் கொண்ட ஒரு நாட்டில், அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலம்தான்—அதாவது, மொழிவாரி ராஜ்யங்களுக்குச் சுயாட்சி யளிப்பதன் மூலம்தான் சோசலிசத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முடியும். இன்னொரு வகையில் சொல்வதானால், இந்தியாவைப் போன்ற கிராமங்களை மிகுதியாகக் கொண்ட விவசாய நாட்டிலே, கிராமங்களுக்குச் சுயாட்சி யளிப்பதன் மூலம்தான் சோசலிசத்தை நடைமுறைக்குக் கொண்டு வர முடியும். இதனைக் காந்தியடிகள் தெள்ளத்தெளிய உணர்ந்திருந்தார்.

மாநிலங்களுக்கும் கிராமங்களுக்கும் சுயாட்சி யளிப்பதன் வாயிலாகத்தான் சுதந்தர இந்தியாவை சோசலிச இந்தியாவாக மாற்றமுடியும் என்பதனைக் காந்தியடிகள் உணர்ந்திருந்தது போலவும், வற்புறுத்தியது போலவும், வேறெந்தத் தலைவரும் உணர்ந்திருக்கவோ, வற்புறுத்தவோ இல்லையெனச் சொல்லலாம். 'கிராம ராஜ்யம்' என்பதற்கு அடிகள் தந்த தார்மிகப் பெயர் தான் 'ராம ராஜ்யம்'. 'கிராம ராஜ்யம்' அமையாதவரை ராமராஜ்யம் இல்லை. ஆனால், தாம் விரும்பும் கிராம ராஜ்யமான இராம ராஜ்யம் போராட்டமின்றி அமையா தென்பதனை—அதாவது, 1947 ஆகஸ்டுப் பதினைந்தில் வெற்றியிலே முடிந்த சுதந்தரப் போராட்டத்தின் விளை வாகவே—அதன் வழி அமைந்த அரசியல் நிர்ணய மன் றத்தின் வாயிலாகவே, கிராம சுயாட்சி அடிப்படையில் சுயாட்சியுடைய ராஜ்யங்களைக் கொண்ட சோசலிச இந்

தியா அமைவது சாத்தியமில்லையென்பதனைக் காந்தியடிகள் தெள்ளத் தெளிய அறிந்து வைத்திருந்தார்.

"இப்போது அமைக்கப்போகும் அரசியல் நிர்ணய சபையைத் தாங்கள் அமைக்க விரும்பும் சுதந்தர இந்தியாவை அமைப்பதற்குப் பயன்படுத்த முடியும் என்று நம்புகிறீர்களா ?" என்று அடிகளாரிடம் கேட்கப்பட்டபோது, அவர் அளித்த பதில் வருமாறு:

> "அரசியல் நிர்ணய சபையைக் கொண்டு அந்தக் காரியத்தைச் சாதிக்கலாம். ஆனாலும், அது நடக்குமோ என்னவோ ?
>
> "இந்தியாவானது தூய்மையாக எண்ணி, தூய்மையாகக் காரியம் செய்வதில் தலைமை வகிக்க வேண்டுமானால், கடவுள் இந்தப் பெரிய மனிதர்களை முட்டாள்களாக்கி, தங்கள் கருத்துக்களை வெளியிடுவதற்கு வேண்டிய ஆற்றலை கிராமங்களுக்கு அளிப்பார்."
>
> ['அரிசன்', 28-7-46]

## கீழேயிருந்து...

இந்தக் கருத்தை வெளியிட்ட பின்னர்தான் காங்கிரசை லோக் சேவக் சங்கமாக மாற்றி, சுதந்தரப் போராட்டத்தை அடுத்து அதிக இடைவெளி ஏற்படவிடாமல் பொருளாதார(சோசலிச)ப் போராட்டமொன்றை நடத்துவதற்கு அடிகள் தயாரானார். அதற்காக, அகில இந்திய காங்கிரசில் நிறைவேற்றுவதற்கான தீர்மான மொன்றையும் தயாரித்திருந்த நிலையிலே அடிகளாரின் வாழ்க்கை முடிந்துவிட்டது.

> "சுதந்தரம் கீழேயிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாகவோ, அல்லது முழு அதிகாரம் உள்ள பஞ்சாயத்தாகவோ இருக்கவேண்டும். ஆகையால், ஒவ்வொரு கிராமமும் சுயதேவைப் பூர்த்தி உள்ளதாக இருக்கவேண்டும் என்று ஆகிறது."
>
> [கா. நூல். தொ. 15; பக். 114]

அதிகாரங்களைப் பரவலாக்குவ தென்ருல்—அதாவது, மாநிலங்களுக்கும் கிராமங்களுக்கும் சுயாட்சியளிப்பதென்ருல், பொருளாதாரத்தையும் பரவலாக்குவதாகும். இந்த உண்மையை காந்திய வாதியான ஸ்ரீமந் நாராயணன் வாக்கால் அறிவோம் :

> "அரசியல், பொருளாதார சக்தியை விரிவான முறையில் பரவல் மயமாக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்தியாவில் பஞ்சாயத்து ராஜ்யத்தை நிறுவ நாம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிருேம்."
>
> [காந்தி நூல் தொகுப்பு-15; முன்னுரையில்]

கிராம ராஜ்ய அடிப்படை சோசலிசத்திற்கு மிகவும் இன்றியமையாத தென்பதனை, பேராசிரியர் ஜோப் என்பார், "நவீன அரசியல் சித்தாந்தம்" என்ற தமது நூலில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்ருர் :

> "சமூக நடவடிக்கையில் மனிதனுக்குள்ள நம்பிக்கை புத்துயிர் பெறச் செய்யவேண்டுமானுல், அரசாங்கத்தைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அவற்றின் அலுவல்களைப் பரவல் மயமாக்கி விநியோகிக்க வேண்டும்."

மாநில அரசுகளை மான்யம் பெறும் அரசுகளாக்கி, அதிகாரங்களை மத்தியில் குவிக்கும் முறை சோசலிசத்திற்கு விரோதமாவதுபோல, மாநில அரசுகளிடம் அதிக அதிகாரங்களைக் குவித்துவிட்டு, கிராமங்களைச் சூன்யங்களாக்கி வைப்பதும் சோசலிசத்திற்கு விரோதமானதுதான். இதனை உணர்ந்தே மாநில சுயாட்சி கோரும் தமிழரசுக் கழகம் கிராம ராஜ்யக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

## முக்கோண அரசியல்

பிற நாடுகள் நிலை எதுவாயினுஞ்சரி; சாத்விகமான முறையில் - சட்டரீதியான வழிகளில் ஜனநாயக சோசலிசச் சமுதாயம் காண விரும்பும் இந்தியாவிலே, மாநில

சுயாட்சியையோ, கிராம ராஜ்யத்தையோ புறக்கணிப்பதற்கில்லை. இங்கு 'மத்தியில சமஷ்டி; மாநிலங்களில் சுயாட்சி; கிராமங்களிலே சுயதேவைப் பூர்த்தி' ஆகிய மூன்றும் இணைந்த முக்கோண அரசியல்தான் காந்தியடிகள் கனவு கண்ட ராம ராஜ்யம்!

விவசாயத் தொழிலையே நம்பியிருக்கும் கிராமங்களை மிகுதியாகக் கொண்ட இந்தியாவிலே, நிலப் பிரபுத்துவத்துக்கு முடிவு கட்டுவதன் வாயிலாகத்தான் இன்றுள்ள சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைக்க முடியும். காந்தியடிகள், விளைநிலங்களைப் பொறுத்தவரையில் தருமகர்த்தாப் பொதுவுடைமையைப் புகுத்த விரும்பினர் என்று சொல்வதற்கில்லை. விளைநிலங்களைத் தவிர ஏனைய சொத்துக்களுக்குத்தான் அடிகள் தருமகர்த்தாப் பொதுவுடைமையைப் போதித்தார்.

> ''உண்மையான சோசலிசத்தைப் பரம்பரை பரம்பரையாக நம்முடைய முன்னோர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அவர்கள் சொன்னார்கள்: "எல்லா நிலங்களும் கோபாலுக்குச் சொந்தம். ஆகவே, எல்லைக் கோட்டிற்கு இடமேது? மனிதன் தான் இந்த எல்லைக்கோட்டை உண்டாக்கினன். அவனே அதை அழித்துவிடலாம்''. கோபால் என்ற சொல்லுக்கு இடையன் என்பது பொருள். அதற்கு ஆண்டவன் என்றும் பொருள்.
>
> ''எதிர்கால அகிம்சா அரசியல் அமைப்பில் நிலமானது அரசாங்கத்திற்குத்தான் சொந்தமாக இருக்கும். ஏனென்றால், எல்லா நிலமும் கோபாலுக்குத்தான்.''
>
> [கா. நூ. தொ. 15; பக். 157]

''நிலமானது நிலச் சுவான்தாருக்கு சொந்தமானதன்று. கடவுளுக்குத்தான் சொந்தம். அதனால், உழுது பயிரிடும் விவசாயிகளுக்கே சொந்தம்.''

['அரிசன்', 9-2-47.]

சுதந்தர இந்தியாவிலே விளைநிலங்களை உழுது பயிரிடும் உழவர்களுக்கே உரிமையாக்க வேண்டுமென்று கருதிய காந்தியடிகள், அதற்காக, நிலவுடைமையாளர்களுக்கு நஷ்டஈடு தருவது சாத்தியமில்லையென்று கூறினார். ஒரு கட்டத்தில் உழுது பயிரிடும் உழைப்பாளிகளே தாங்கள் உழைக்கும் நிலத்தை உரிமையாக்கிக் கொள்ளக் கூடும் என்றும் கருதினார். இதுபற்றி, அடிகளாருக்கும் அமெரிக்க அறிஞர் லூயி பிஷர் என்பாருக்கும் 1942ஆம் ஆண்டில் நடந்த உரையாடல் வருமாறு:

லூயி பிஷர்: சுதந்தர இந்தியாவில் பெரும்பான்மையினராக இருக்கும் விவசாயிகளின் முன்னேற்றத்திற்குத் தங்கள் திட்டம் என்ன?

காந்தியடிகள்: உழுது பயிரிடுவோர் நிலங்களை எடுத்துக் கொள்ளுவார்கள். அதை எடுத்துக் கொள்ளும்படி நாங்கள் அவர்களுக்குச் சொல்ல வேண்டிய தேவையில்லை. தாங்களாகவே நிலங்களைக் கைப்பற்றத்தான் செய்வார்கள்.

பிஷர்: பலாத்காரமாகவா?

காந்தி: பலாத்காரம் ஏற்படலாம். ஆயினும், நிலவுடைமையாளரும் ஒத்துழைப்பார்கள்.

பிஷர்: நஷ்ட ஈடின்றி நிலம் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென நினைக்கிறீர்களா?

காந்தி: சந்தேக மில்லாமல்! நிலவுடைமையாளர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பது பொருளாதாரப்படி யாராலும் செய்ய முடியாத காரியம்.

பிஷர்: நஷ்டஈடு கொடுக்க மறுப்பதால் நிலவுடைமையாளர்கள் பலாத்கார முறையில் எதிர்ப்புக் காட்டமாட்டார்களா?

காந்தி: சில நாட்களுக்குக் குழப்பம் இருக்கலாம். ஆனால், அதை நாம் விரைவில் அடக்கிவிட முடியும்.

['லூயி பிஷர் எழுதிய காந்தியடிகளுடன் ஒரு வாரம்' என்ற நூலிலிருந்து.]

இதனுல், நிலவுடைமையைப் பொறுத்தவரையில் தருமகர்த்தாப் பொதுவுடைமையை அடிகள் வலியுறுத்தவில்லை யென்பது புலனுகும். நாடு சுதந்தரம் பெற்ற பின்னர், தாமே அகிம்சா முறையில் உழுவோருக்கே நிலத்தை உரிமையாக்கும் கிளர்ச்சியை நடத்தப் போவதாக நினைத்துக்கொண்டு அடிகள் லூயி பிஷருக்குப் பேட்டியளித்திருக்கிறுர்.

# மதமும் சோஷலிசமும்

விஞ்ஞான சோசலிசத்தில் பற்றுடையோரில் பலர், தெய்வப் பற்றும் மதப் பற்றும் அற்றவர்களாக, அவற்றை அறவே மறுப்பவர்களாக இருக்கின்றனர். 'மார்க்ஸிஸம்' தெய்வ—மதப் பற்றுக்களுக்கு எதிரானதென்றும் சொல்லப்படுகின்றது.

## நேருவின் நிலை

காந்தியடிகளின் வாரிசான நேருஜிகூட, தெய்வப் பற்றும் மதப் பற்றும் அற்றவரென்று பிறர் சொல்லத் தக்கவராக வாழ்க்கை நடத்தினர். நேருஜி, விஞ்ஞான சோலிசத்தைச் செயல்படுத்துவதிலே தீவிரங்காட்டவில்லை யென்ருலும், அதிலே அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்தா ரென்பதிலே யாருக்கும் ஐயமிருக்க முடியாது. விஞ்ஞான சோசலிஸ்டாக விளங்கிய காரணத்தாலேயே, நேருஜி, தெய்வ—மதப் பற்றுகளைத் துறந்தவராக வாழ்ந்தார் என்று கருதுவோருமுண்டு. இதோ, நேரு பேசுகிருர்:

"இந்தியா மத பக்தியுள்ள நாடாகக் கருதப்படுகின்றது. இந்துக்களும் முஸ்லிம்களும் சீக்கியர்களும் தங்களுடைய மதங்களின் பேரால் கர்வப்படுகிருர்கள். அந்தக் கர்வம் உண்மை யென்று ருசுப்படுத்த மண்டைகளை உடைக்கிருர்கள்.

"இந்தியாவிலும் சரி, வேறு எங்கேயும் சரி; மதம் என்று கட்டுப்பாடாக வகுக்கப்பட்டு அனுட்டிக்கப்பட்டு வரும் ஏற்பாட்டில் எனக்கு வெறுப்பு. அதை நான் அடிக்கடி கண்டித்திருக்கிறேன். அதை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்பது என் ஆசை.

"மதம் என்றால் குருட்டு நம்பிக்கை, பிற்போக்கு, ஆராய்ச்சிக்கு அடங்காத கொள்கை, வெறி, மூடபக்தி, சுரண்டல், பரம்பரை பாத்தியப் பாதுகாப்பு என்றுதான் எனக்கு எப்பொழுதுமே தோன்றும்......"

[ நேருவின் 'சுயசரிதம்' பக். 632. ]

இது, மதத்தைப் பற்றி நேருஜி கொண்டிருந்த கருத்தாகும். ஆனால், இதுவே அவரது முடிவான கருத்தாக இருக்கவில்லை. இதனைத் தொடர்ந்து அவர் கூறுவது வருமாறு:

"...இருந்தாலும், மதத்திற்குள்ளே வேறொரு பொருளும் இருக்கிறதென்று எனக்குத் தெரியும். மனித வர்க்கத்தின் தீராத தாபத்தைத் தீர்த்து வைக்கக்கூடிய சக்தி மதத்தினுள் இருக்கிறதென்று எனக்குத் தெரியும். இந்தச் சூட்சுமமான ஒன்று மதத்தினுள் இல்லாவிட்டால் அது மகத்தான ஒரு சக்தியாக ஓங்கி துன்ப சாகரத்தில் மூழ்கித் தவிக்கும் கோடிக்கணக்கான ஆன்மாக்களுக்கு அமைதியையும் ஆறுதலையும் எவ்வாறு கொடுத்திருக்க முடியும்?"

## உயிரற்ற ஓடு

இதுவும், மதத்தில் பற்றுகொண்டவராக நேருஜியை அறிமுகப்படுத்தவில்லை என்றாலும், மதத்தாலும் ஏதோ ஒரு வகையில்—ஓரளவில் மக்களில் சிலருக்கேனும் நன்மை விளையத்தான் செய்கின்றது என்ற உணர்வு அவருக்கும் இருந்ததென்பதனை உணர்த்துகின்றது. இதற்கு மேலும்,

"பண்டைக் காலத்தில் எப்படியிருந்த போதிலும் இப்பொழுது ஸ்தாபனங்களாக வழங்கி வரும் மதத்தில் ஓடுதான் இருக்கிறது, உயிரில்லை. ஒரு கூட்டில் அதற்கு இயற்கையான சத்து போய் விட்ட பிறகு அந்தக் கூட்டிற்கு இயல்பாயில்லாத

சாமான்கள் வந்து வெளியே அடைத்துக்கொண்டு, அந்தக் கூட்டின் பழைய உருவமும் அமைப்பும் கெடாமல் இருப்பதுபோல் மதமும் இருக்கின்றது.''

என்கிறார் நேரு. நேருவின் கூற்றிலிருந்து, தேசியப் பற்றோடு ஜனநாயக சோசலிசத்தை விரும்புவோரிலும் மத எதிர்ப்பாளர்கள் இருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது. மதம் தேவையற்றது என்று கருதும் நேரு கூட, தெய்வ உண்மையை மறுக்கவில்லை என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். ஒருகால், காந்தியடிகளின் தொடர்பு அந்த அளவுக்கு நேருவின் மனத்தைப் பக்குவப் படுத்தியதுபோலும்.

காந்தியடிகளைப் பொறுத்தவரையில், அவர் தம்மை ஒரு விஞ்ஞான சோசலிஸ்டு என்று சொல்லிக் கொண்டாலும், தெய்வ உண்மையில் நம்பிக்கை கொண்டு, தெய்வ வழிபாட்டையும் கடைப்பிடித்து, பிறருக்கும் அதனைப் போதித்தார்.

இந்தியாவின் விடுதலைக் கிளர்ச்சியைக்கூட தெய்வ பக்தியை அடிப்படையாகக் கொண்டே அடிகள் நடத்தி வந்தார்.

> ''உங்களுடைய அகிம்சைக் கிளர்ச்சியின் பயனாக ஆங்கிலேயர் தாங்களாகவே சமாதான முறையில் இந்தியாவைவிட்டு வெளியேறி விடுவார்கள் என்பதாகத் தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஆதாரமென்ன?''
>
> [ காந்தி நூல்; தொகுப்பு 6; பக். 6. ]

என்று ஒரு சமயம் அடிகளாரைக் கேட்டபோது,

> ''கடவுளிடமும், அவருடைய நீதியிலும் எனக்குள்ள நம்பிக்கையே ஆதாரம்.''

என்று அவர் பதிலளித்தார்.

## சமயமும் அரசியலும்

காந்தியடிகள், சுதந்திர இந்தியாவில் அரசு சமயச் சார்பற்றதாக இருக்கவேண்டுமென்றே எண்ணினர்;

அதிலே உறுதியும் காட்டினர். ஆனால், தனி நபர் வாழ்விலே, 'சமயச் சார்பற்ற அரசியல்' கடைப்பிடிக்கப்படுவதனை அவர் விரும்பவில்லை. அதனை வெறுக்கவும் செய்தார்.

"பிரபஞ்சம் அனைத்திலும் நிறைந்து நிற்பதான சத்திய வடிவத்தை நேருக்கு நேர் ஒருவர் தரிசிக்க வேண்டுமாயின், மிகத் தாழ்ந்த உயிரையும், தன்னுயிரைப் போலவே நேசிக்கக்கூடியவராக அவர் இருக்க வேண்டும்.

"அந்த நிலையை அடைந்துவிட ஆசைப்படுகிறவர் யாரும், எந்தத் துறையினின்றும் விலகிட முடியாது. அதனாலேயே, சத்தியத்தினிடம் நான் கொண்டிருக்கும் பக்தி, என்னை அரசியல் துறையில் இழுத்துவிட்டிருக்கிறது.

"சமயத்திற்கும் அரசியலுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று கூறுவோர், சமயம் என்பது இன்ன தென்பதையே அறியாதவர்களாவர். இதைக் கொஞ்சமேனும் தயக்கமின்றி, ஆயினும் முழுப் பணிவுடன் கூறுவேன்.

"என்னுடைய தேசபக்தி என்பது நிரந்தரமான விடுதலையையும் சாந்தியையும் தேடி நான் செய்துகொண்டிருக்கும் பிரயாணத்தில் ஒரு கட்டமேயாகும். ஆகவே, சமயம் இல்லாத அரசியல் என்பது எனக்குக் கிடையாது. அரசியலானது சமயத்திற்குத் துணையாக இருக்கிறது.

"மதம் இல்லாத அரசியல் மரணக்குழி போன்றது. ஏனெனில், அத்தகைய அரசியல் ஆன்மாவை அழித்து விடுகிறது."

[ கா. நூ. தொ. 6. பக். 7—8. ]

காந்தியடிகள், தனி மனிதர் வாழ்க்கையிலே அரசியலற்ற சமயத்தையும், சமயமற்ற அரசியலையும் கடைப்பிடிப்பது கேடு பயப்பது என்று நம்பினர். அவர்

நினைவிலிருந்த சமயமானது, முற்றிலும் ஆன்மீக நெறிகளைக் கொண்டதாகும். ஒரு மதத்தைவிட இன்னொரு மதம் உயர்ந்ததென்ற நிலையிலே, மதத்துக்கு மதம் தெய்வங்கள் வேறுபடுகின்றன என்ற நினைப்பிலே, அவர் மதவாதியாக இருக்கவில்லை. இந்த உண்மையை நினைவில் கொண்டால் விஞ்ஞான சோசலிஸ்டுகள்கூட காந்தியடிகள் கொண்டிருந்த மத உணர்வை ஏற்கா விட்டாலும், எதிர்க்க மாட்டார்கள்.

"அனுஷ்டிப்பதுதான் மதம்; வேஷம் போடுவதன்று.

"வேஷம் போடுவதும், திரித்துக் கூறுவதும், மதம் என்னும் பெயரால் செலாவணியாகி வருகின்றன."

['அரிசன்', 9—6—46.]

என்பது, போலி மதவாதிகளைப் பற்றிக் காந்தியடிகள் தெரிவித்த கண்டனமாகும்.

## சோற்று வடிவில் கடவுள்

ஆன்மிக நெறிகளைக் கொண்ட உண்மையான மதம் சோசலிசத்திற்கு விரோதமானதல்ல வென்று அடிகள் மனப்பூர்வமாக நம்பினார். மதத்தை மட்டு மல்ல, தெய்வத்தையும்கூட சோசலிசத்திற்கு ஒத்த சக்தியாகவே அடிகள் கருதினார். அதனை, அவரது வாக்காலேயே அறிவோம்:

"பஞ்சத்தால் அடிபட்டு, வேலையற்றிருக்கும் மக்களுக்கு வேலையாகவும், (உணவுக்கான உறுதி என்ற முறையில் சம்பளமாகவும்) கடவுள் தோன்ற வேண்டும். அந்த ஏழை மக்கள், கடவுள் இவ்வாறு காட்சி அளிப்பதைத்தான் ஏற்பார்கள்."

['காந்திஜி பொன் மொழிகள்'; என். கே. போஸ் திரட்டியவை.]

"நான் அமைக்க விரும்பும் சுதந்திர இந்தியாவில் எல்லா மதங்களும் சரி சமமான தகுதியுடை

யவையா யிருக்கும். நாமெல்லோரும் ஆணிவேர் ஆழ்ந்து போயிருக்கும் பிரமாண்டமானதோர் மரத்தின் கிளைகளாவோம். எவ்வளவு பெரிய புயற் காற்றும் அதை அசைக்க முடியாது.''

[ 'அரிசன்', 28—7—46. ]

இது, அடிகள் வெளியிட்ட கருத்தாகும். 'எம்மதமும் சம்மதம்' என்று வள்ளலார் கூறினரே, அதன் உட் கருத்தை உறுதிப்படுத்துவதுபோல, 'எம்மதமும் சம நிலை' என்றார் காந்தியடிகள்.

கடவுள் வழிபாட்டு முறையிலேயும் சோசலிசத் திற்கு எதிரான பழக்க வழக்கங்களை—பணத்தாலேயே பகவானை வழிபடும் பண்பற்ற முறையை அடிகள் வெறுத்தார்.

"கடவுளுக்குச் செய்யும் வழிபாடு கற்பூரம் முதலியவைகள் அல்ல. உயர்ந்த ஒழுக்க நெறியே யாகும்.''

[ 'அரிசன்', 18—8—47. ]

## சத்தியமே கடவுள்

சோசலிஸ்டுகள் மதத்தை ஏற்ருலும் சரி, ஏற்க மறுத்தாலும் சரி; தெய்வ நம்பிக்கையைமட்டும் அவர்கள் கைவிடக் கூடாதென்று காந்தியடிகள் உறுதியாகப் போதித்தார்.

"சோசலிசத்தில் சத்தியமும் அகிம்சையும் இருந்துவர வேண்டும். சோசலிச சேவையில் ஈடுபட்டிருப்போருக்குக் கடவுளிடம் ஜீவ நம்பிக்கையிருக்க வேண்டும்.

"சத்தியமே கடவுள் என்று கூறுகிறேன். இந்தக் கடவுள் ஜீவனுள்ள சக்தி. அச்சக்தியைக் கொண்டதே நம் வாழ்க்கை. அது உள்ளுக்குள் இருக்கிறது. ஆனல், உடல் அல்ல. மகத்தான இந்த சக்தி இருக்கிறது என்பதை மறுக்கிறவர்,

என்றும் வற்றாததான இந்தச் சக்தியின் உபயோகத்தைத் தனக்கு மறுத்துக் கொள்ளுபவராதலால், செயலற்றவராக இருக்கிறார்.

"சுக்கான் இல்லாத கப்பல் காற்றடித்த பக்கமெல்லாம் போய் முன்னேறிப்போக முடியாமல் அழிவதைப் போன்று, அவரும் ஆகிவிடுகிறார். இத்தகைய சோசலிசம் அவர்களை எங்கும் கொண்டு போய்ச் சேர்ப்பதில்லை." [கா. தொ. 6; பக். 661]

உண்மையான ஆன்ம ஞானத்தைப் போதிக்கும் மதமானது சொத்துரிமையை ஆதரிக்கவில்லையென்று உறுதியாகச் சொல்லலாம். 'யான்' என்ற உயிர் அல்லது உடற்பற்றும், 'எனது' என்ற உடைமைப் பற்றும் உடையவன் எவனோ, அவன் வீடுபேறு பெறமாட்டான்; அவற்றை விட்டவனே பெறுவான் என்பது திருவள்ளுவர் வாக்காகும். இதனை,

" யான்எனது என்னும் செறுக்கருப்பான்
வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் "

என்ற குறட்பாவால் அறிகிறோம். இந்நாளில், மடாதிபதிகளெலாம் 'மிராசுதார்களாக'வும் இருக்கிறார்களே, அவர்கள் தவறையும் இக்குறட்பா உணர்த்துகின்றதல்லவா?

துறவறத்தார்க்கு வள்ளுவர் சொன்ன இந்த விதி, ஓரளவு இல்லறத்தார்க்கும் பொருந்துவதேயாகும். புறநானூற்றுப் புலவரான நக்கீரனார்,

"கடுமாப் பார்க்கும்
கல்லா வொருவற்கும்
உண்பது நாழி
உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம்
ஓரொக் கும்மே

செல்வத்துப் பயனே
ஈதல்
துய்ப்பே மெனினே
தப்புந பலவே'' [புறம்: 189]

என்று பாடியுள்ளார். இந்தப் பாடல் காந்தியடிகள் போதித்த தருமகர்த்தாப் பொதுவுடைமையையே வலியுறுத்துகின்றது.

## போலி மதவாதிகள்

எளியோரின் உழைப்பை வலியோர் கவரும் கொடுமையை இந்து மதம் ஆதரிக்கவேயில்லை. அத்தகைய சுரண்டலை ஆதரிக்கும் கருத்துக்கள் சமய சாத்திரத்திலோ, புராணங்களிலோ, காப்பியங்களிலோ இருக்குமாயின், அவை தெய்வ சம்மதமானவையல்ல வென்று கருதி, அவற்றை ஒதுக்கித்தள்ள சோஷலிஸ்டுகளுக்கு உரிமையுண்டு.

கோபால கிருஷ்ண பாரதியார், வள்ளற் பெருமான், சுப்பிரமணிய பாரதியார், திரு. வி. கலியாணசுந்தரனுர் ஆகிய ஞானியர்கள் சொத்துரிமையால் விளையும் கேடுகளை எடுத்துக்கூறி, அவற்றை வெறுத்து எழுதி உள்ளனர்.

சமயத்தின் பெயரால் சுகபோக வாழ்க்கை நடத்தும் போலி மத வாதிகளே சோஷலிசத்தை வெறுப்பர்; உண்மை ஞானிகள் வரவேற்பார்கள். காந்தியடிகள் உண்மை ஞானியாவார். அதனுற்றுன், மதத்தையும் தெய்வ வழிபாட்டையும் கைவிடாமலே, விஞ்ஞான சோசலிசத்தை ஆதரிக்க முடியும் என்பதனைக் காட்டினுர். அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்திருப்பின், சொத்துரிமையின் கொடுமையை ஒழிக்க தேசந் தழுவிய வகையில் அறப்போர் தொடங்கி யிருப்பாரென்பதில் ஐயமில்லை.

இந்தியாவைப் போன்ற பல்வேறு துணை நாடுகளைக் கொண்ட பெருநாட்டிலே, மத்தியில் அதிகாரங்

களைக் குவிப்பது, சோசலிசத்திற்கு எதிரான செயலாகும். இந்த உண்மையை காந்தியடிகளைப் போல, காங்கிரஸ் பெருந் தலைவர்களிலே வேறெவரும் அறிந்திருக்கவில்லை எனலாம். அடிகள், தாம் அரசியலில் புகுந்த நாள் முதற்கொண்டே "கிராம சுயாட்சி"யை வலியுறுத்தி வந்தார். அதிகாரங்கள் மத்தியில் குவிவதை வெறுத்ததுபோல, மாநில அரசிடம் குவிவதையும் வெறுத்தார். அதையும் சோசலிசத்திற்கு விரோதமான நிலையாகவே அவர் கருதினார்—குறிப்பாக, நகரங்கள் கிராமங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலை நீடிக்கும்வரை ஜனநாயகமோ, ஜனநாயக சோசலிசமோ தலை எடுத்து வளராது என்பது காந்தியத் தத்துவமாகும்.

# கல்வியும் சோஷலிசமும்

ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு கொண்டதாக விளங்கவேண்டும்—அதாவது, தன் தேவைகளைத் தானே நிறைவேற்றிக்கொள்ள அதிகாரமும் ஆற்றலும் பெற்று விளங்க வேண்டும். இது போல, ஒவ்வொரு மாநிலமும் தன்னாட்சிபெற்று விளங்க வேண்டும்—அதாவது, மத்திய அரசின் தயவோ, தலையீடோ இன்றி, ஒவ்வொரு மாநிலமும் சுயாட்சி பெற்று இருக்க வேண்டும். இந்த அடிப்படையில், மத்தியில், தேவைப்படும் அதிகாரங்களை மட்டுமே கொண்ட சமஷ்டி அரசு அமையவேண்டும். இதுவே, காந்திய சமஷ்டித் தத்துவமாகும்.

சுதந்திரத்துக்கு முன்னும் சரி, சுதந்திரத்துக்குப் பின்னும் சரி; இந்தியாவின் அரசியலானது, கிராமங்களைச் சுரண்டி, நகரங்கள் சுக வாழ்க்கை நடத்தும் போக்கிலேயே இருந்து வருகின்றது. சுதந்திரம் பெற்ற பின்புள்ள இருபது ஆண்டுகளில், மத்தியிலும், மாநிலங்களிலுமாக காந்தியடிகளால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ் கட்சிதான் ஏகபோகமாக அதிகாரம் செலுத்தியது. அவருடைய வாரிசுகள்தான் பிரதமர்களாகவும், முதல்வர்களாகவும், அமைச்சர்களாகவுமிருந்து வருகின்றனர். ஆனால், அடிகள் கனவுகண்ட கிராம ராஜ்யம்-அதாவது இராம ராஜ்யம் இதுவரை அமையவில்லை. இன்று நடைமுறையிலுள்ள அரசியலமைப்புச் சட்டம் முழு அளவில் மாற்றி அமைக்கப்படாதவரை இராம ராஜ்யம் அமைவது சாத்தியமே இல்லை.

## கல்வியில் மாறுதல்

இந்தியாவிலே, அன்னியமொழி ஒன்றைப் போதனு மொழியாகக் கொண்ட கல்வித் திட்டம் நடைமுறையி

லிருப்பதால், படித்தவர்களுக்கும் படிக்காத மக்களுக்கும் நடுவே மிகப் பெரிய இடைவெளி இருந்து வருகின்றது. படித்தவர்களிடையே உயர்வு மனப்பான்மையும், படிக்காதவர்களிடையே தாழ்வு மனப்பான்மையும் கடந்த ஒன்றரை நூற்றுண்டுக் காலமாக வளர்ந்து வந்துள்ளன. இந்த இடைவெளி அதாவது, படித்தவர்களுடைய உயர்வு மனப்பான்மை மறையாத வரை சோசலிச சமுதாயம் அமைவது இயலாததாகும். படித்த சாதியினரிடையே காணப்படும் உயர்வு மனப்பான்மையானது முதலாளித்துவத்தை விடவும் கொடுமையானதாகும். இந்தக் கொடுமையை ஆணி வேரோடு அழிக்க வேண்டுமானுல், கல்விமுறை முழுவதையும் மாற்றி அமைத்தாக வேண்டும். சோசலிச சமுதாயம் படைக்க நாம் செய்யவேண்டிய முதல் காரியம் இதுதான்.

> ''அன்னியமொழிக் கல்வியினுல் ஏற்படும் கேடு என்ன வென்ருல், படித்தவர்களுக்கும் பாமரர்களுக்குமிடையே ஒரு பிளவை உண்டாக்கி விட்டதாகும். நாம் எல்லோரும் தங்களுடன் தொடர்பற்ற ஏதோ வேறு மனிதர்கள் என்று மக்கள் நம்மைப் பற்றி நினைக்கிருர்கள். அவர்கள் நம்மை நம்புவதில்லை. நாம் ஏஜமானர்களென்றும், நம்மைக் கண்டு பயப்பட வேண்டும் என்றும் நினைக்கிருர்கள்.''
>
> [ கா. நூ. தொ. 15; பக். 16. ]

இது, காந்தியடிகள் பொன்மொழியாகும். படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்குமிடையே தோன்றியுள்ள பிளவு அகலாதவரை, சோசலிசப் புரட்சியைத் தோற்றுவிக்க படித்தவர்களால் முடியாது.

சோசலிசப் புரட்சி தோன்ற வேண்டுமானுல், அதன் அவசியத்தை சாதாரண மக்கள் உணர வேண்டும். அதற்கான பொது அறிவு அவர்களுக்கு இயற்கையாகவே இருந்தும், அன்னிய மொழி ஆதிக்கமானது அவர்களைக் குருடர்களாகவும். செவிடர்களாகவும் ஊமையராகவும் செய்திருக்கிறது. பாட்டாளி வர்க்கத்

தினரான சாதாரணப் பொதுமக்கள், தங்களிடையே முதலாளித்துவம் வளர்த்துள்ள சாதி மத வருண வேற்றுமைகளை யெல்லாம் மறந்து வர்க்கரீதியில் ஒன்றுபட காந்தியடிகள் வழிகாட்டியுள்ளார். இதோ, அவர் வாக்கு:

"நம் நாட்டில் உள்ள பிரதேச மொழிகள் வளர்ச்சி அடைவது, நம்முடைய மக்களிடையே சமூக, அரசியல், பொருளாதார விழிப்பை உண்டு பண்ணும். நாடு என்ற முழுமையான சித்திரத்தில் தங்களுடைய நிலைமை என்ன என்பதை அவர்கள் இன்னும் நன்றாக உணர்வார்கள். வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களா யிருந்தாலும் எல்லோரும் ஒரே படகில் செல்லுபவர்கள்தான் என்பதைத் தெரிந்து கொள்ளுவார்கள்.

"இவ்வாறாக, அவர்கள் மொழி வேற்றுமைகளை மறந்து, தங்களுடைய நலன்களை உணர்ந்து, அதற்காகப் போராடவும், ஆபத்துக்களிலிருந்து தங்கள் நலன்களைக் காக்கவும் தயாராக இருப்பார்கள்."

[ கா. நூ. தொ. 6 பக். 52. ]

## ஆங்கில மோகம்

இன்றைய முதலாளித்துவ சமுதாயத்தில் தங்கள் நலன்கள் எப்படி பாதிக்கப்படுகின்றன; சோசலிச சமுதாயம் அமைந்தால் தங்கள் வாழ்க்கையிலே எப்படி மறுமலர்ச்சி தோன்றும் என்பதனை உழவர்களோ; தொழிலாளர்களோ போதுமான அளவில் உணர முடியாதபடி அன்னிய மொழி ஆதிக்கம் தடையாக இருந்து வருகின்றது. இதனை சோசலிச விரோதிகள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அதனாற்றான், அவர்கள் தங்கள் தாய் மொழிக்கு எதிராக, ஆங்கிலமொழி ஆதிக்கம் நீடிப்பதை ஆதரிக்கிறார்கள். கல்லூரிகளில் தமிழ் போதனு மொழியாக வருவதை எதிர்த்து, தங்கள் பற்களையும்—நகங்களையும் கருவிகளாகக்கொண்டு போராடுகிறார்கள்.

ஆம்; ஆங்கில ஆதிக்கம் அகன்ருல், நாட்டில் பொருளாதாரப் புரட்சி தோன்றும் என்பதனை சோசலிச விரோதிகள் அறிந்து வைத்துள்ள அளவுக்கு 'சோசலிஸ்டுகள்' என்போர் தெரிந்து வைத்திருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. தொழிற்சங்க இயக்கத் தலைவர்களிலேயே பலர், ஆங்கில ஆதிக்கத்தை வெளிப்படையாக ஆதரிக்கின்றனர். தொழிலாளர் கூட்டங்களில் ஆங்கிலத்தில் பேசுவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

தாய்மொழி மூலமே கல்வி தரும் புரட்சிகரமான புதிய திட்டம் நடைமுறைக்கு வந்தாகவேண்டும். காந்தியடிகள் தந்த ஆதாரக் கல்வி, தேசியக் கல்வித் திட்டங்கள் சோசலிச சமுதாயத்தைப் படைப்பதற்கு உதவி புரியக் கூடியவை ஆகும். நடைமுறையில் உள்ள கல்வித் திட்டத்திலே மாணவர்கள் உடலுழைப்பில் ஈடுபட வாய்ப்பே இல்லை. பொறியியல், தொழில் நுணுக்கம் போன்ற படிப்பில்கூட உடலுழைப்பு அம்சம் அடியோடு இல்லை. வேறு முதலாளித்துவ நாடுகளிலே கூட இத்தகைய கல்வி முறை அமுலிலில்லை.

இந்தியாவில் மெக்காலே கல்வித் திட்டமானது அன்னிய ஆட்சிக்குத் தேவைப்படும் சிப்பந்தி வர்க்கத்தைத் தயாரிப்பதற்கென்றே உருவாக்கப்பட்டதாகும். அதனுல், உடலுழைப்பு அம்சம் அதிலே இடம் பெருதது இயற்கை. ஆனுல், நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும், மெக்காலே கல்வித் திட்டம் தொடர்ந்து நடைமுறையிலிருப்பது சுதந்திர இந்தியாவுக்கு ஏற்பட்டுவிட்ட பயங்கரமான ஒரு விபத்தாகும். அறிவாளிகளை, தலைவர்களை, ஆட்சியாளர்களை, உழவுக்கும் தொழிலுக்கும் தொடர்புடைய தொழில் நுணுக்க நிபுணர்களைத் தயாரிக்கக்கூடியதான ஒரு கல்விமுறை சுதந்திர இந்தியாவுக்குத் தேவைப்படுகின்றது. அந்தப் புதிய கல்வி முறையே சோசலிச இந்தியாவிற்கும் பயன்படுவதாகும். துரதிருஷ்டம் என்னவென்ருல், இரவு பகலாக சோசலிச பஜனை செய்பவர்கள்கூட, தாய்மொழியின் மூலம் கல்வி போதிப்பதை—கல்வியின் ஆரம்பக் கட்டத்திலிருந்தே

தொழிலோடு தொடர்பு கொண்ட கல்வி தருவதைக் கொஞ்சங்கூட விரும்பாததாகும். இப்படிப்பட்டவர்களை சோசலிஸ்டுகள் என்று எப்படி ஏறக முடியும்? :

ஆறுவது வயதின் தொடக்கத்தில் கல்வி பயிலத் தொடங்கும் ஒருமாணவன், பட்டப் படிப்பு முடியும்வரை —அதாவது, சுமார் 20 அல்லது 23 வயதுவரை தன் கைகளைக் கொண்டு தொழில் செய்யாமலிருந்தால், அவன் படித்துப் பட்டம் பெற்றுப் பெரியவனான பின்னர், உழவர்களையும் தொழிலாளர்களையும் மதிக்கும் மனப்பான்மையைப் பெறுவது சாத்தியமில்லை தானே !

# அகிம்சை வழியில் சோஷலிசம்

காந்தியடிகள் இந்தியாவின் அரசியல் விடுதலையை அகிம்சையின் மூலமே அடைய முயன்றார். அதிலே, பாரதப் பெரு நாட்டுக்கு வெற்றியும் தேடித் தந்தார். இந்திய சமுதாயத்தில் பொருளாதார சமத்துவத்தைப் படைப்பதையும் அகிம்சையின் மூலமே நிறைவேற்றித் தர முயன்றார்—நிறைவேற்றித் தர முடியுமென்றும் உறுதியாக நம்பினார்.

ஒரு நாடு வலிமை மிக்க ஒரு அன்னிய வல்லரசை அகிம்சையின் மூலமே எதிர்த்துப் போராடி அதனை வெளியேற்றி வெற்றி பெறுவதென்பது மனித சமுதாயம் கண்டிராத ஒரு புதுமையாகும். அந்தப் புதுமையை—சாத்வீகப் புரட்சியை இந்தியா கடைப்பிடித்தது; வெற்றியும் கண்டது.

## புது வழி

ஒரு சமுதாயத்தின் பொருளாதார விடுதலைப் புரட்சி அகிம்சையின் மூலம் வெற்றி பெற்றதாக உலக நாடுகளின் வரலாறு காட்டவில்லை. ஜார் ருஷ்யா பொதுவுடைமை ருஷ்யாவாக மாறியது தொடங்கி, பல்வேறு நாடுகள் சோசலிச வியூகத்திற்குள் வந்தன. ஆம்; காந்தியடிகள் போதிக்கும் அகிம்சைக்கு மாறுபட்ட வழியிலே! ஆனால், இந்தப் பொருளாதார சமத்துவத்தை—அதாவது, சோசலிச சமுதாயத்தைப் படைப்பதிலேயும் இந்தியா உலக நாடுகளுக்குப் புது வழியைப் போதிக்க வேண்டுமென்று அடிகள் விரும்பினார்.

காந்தியடிகள் மறைந்த பின்பு அகில இந்திய தேசியக் காங்கிரசானது, கொள்கையிலே தெளிவும் நடைமுறையில் அனுப சாத்தியமான வேலைத் திட்டமு

மின்றி, பொருளாதார சமத்துவத்தைப் படைக்கப் போவதாகக் கோஷித்தது. ஆனால், "சோசலிசம்" என்னும் சொல்லை அப்படியே ஏற்றுக்கொள்ள அதற்குத் துணிவில்லை. அதனால், 1954ல் ஆவடியில் கூடிய காங்கிரஸ் மகா சபையிலே "சோசலிச பாணி" சமுதாயம் படைக்கப்போவதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

அதிலும் உறுதி காட்டாமல், ஆவடி காங்கிரசுக்குப் பத்தாண்டுகளுக்குப் பின்னர், பாணியைப் பறி கொடுத்துவிட்டு, "ஜனநாயக சோசலிச சமுதாயம்" படைக்கப்போவதாக விரதம் ஏற்றது. ஆனால், பாரதப் பேரரசின் துணைப் பிரதமராகவும், நிதி மந்திரியாகவும் இருந்த திரு. மொரார்ஜி தேசாய், சோசலிசத்தின் உயிர் நாடியான தேச உடைமைக் கொள்கைக்குத் திருத்தம் கண்டார். அதாவது, சமூகக் கட்டுப்பாடு என்பதன் மூலமே ஜனநாயக சோசலிச சமுதாயத்தைப் படைக்க முடியும் என்பதாக வாதாடினார். அதுவே, காங்கிரஸ் கட்சி பிளவுபடுவதற்கான பல காரணங்களில் ஒரு காரணமாக அமைந்தது.

விடுதலைப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் மேடையிலே, முதன் முதலாக சோசலிசக் கோஷம் எழுப்பியவர் நேருஜிதான். அவர், அன்று வெளியிட்ட கருத்து வருமாறு:

"சோசலிசம்" என்ற சொல்லுக்கு ஆங்கில மொழியில், திட்டமான பொருளிருந்தும் முற்றிலும் அதற்கு மாறான பொருளில் கூறுவது சோசலிசம் என்ற விஷயத்தை விசித்திரமான வகையில் சமாளிப்பதாகும். ஏனெனில், தனிப்பட்டவர்கள், தங்களுக்கே தனியான தான கருத்தில் சொற்களை உபயோகிப்பது, கருத்துக்களைப் பறிமாறிக் கொள்வதில் உதவிகரமாக இராது.

"தான் என்ஜின் டிரைவர் என்று சொல்லிக் கொள்கிறவர், பிறகு தன் என்ஜின் மரத்தினால் ஆனது என்றும், அது மாட்டினால் இழுக்கப்படுவது என்றும் சொல்லு

வாராயின் என்சின் டிரைவர் என்ற சொல்லே அவர் தவருக உபயோகிப்பவரே யாவார்.''

[காந்தி நூல்கள், தொ-6; பக். 675.]

இது, காங்கிரசுக்குள்ளே மறைந்திருந்த சோசலிச விரோதிகள், சோசலிசத்தை ஒப்புக்கொள்வதுபோல நடித்து அதற்கு தவருன வியாக்கியானங்கள் செய்வது குறித்துக் காந்தியடிகளிடம் முறையிட்டுக்கொண்டு 13—8—34ல் தலைவர் நேரு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியாகும்.

## நேருவின் மிதவாதம்

விடுதலைப் போராட்ட காலத்திலே, விஞ்ஞான ரீதியான சோசலிசத்தையே விரும்பிய—அதற்கு மிதவாத ரீதியில் வியாக்யானம் சொல்வதை வெறுத்த பண்டித நேரு அவர்களே, தாம் பிரதமர் நேருவாக மாறிய பின்னர், முன்னர் தாமே வெறுத்த மிதவாதத்தைக் கடைப் பிடித்தார். சோசலிச பாணி, ஜனநாயக சோசலிசம் என்றெல்லாம் அடைமொழிகள் கொடுத்து சோசலிசம் பேசினுர். காந்தியடிகளைப் பொறுத்தவரையில் இத்தகைய குழப்பம் எதற்கும் அவர் தம்மை ஆளாக்கிக்கொள்ளவில்லை. அரசியல் விடுதலையை அகிம்சையின் மூலம் அடைந்தது போலவே, பொருளாதார விடுதலையான சோசலிசத்தையும் அகிம்சையின் மூலமே அடைய வேண்டுமென்பதில் அவர் உறுதி காட்டினுர்.

தாம் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் இரண்டாவது உலகப் பெரும்போரின் விளைவாக உலகம் முழுவதும் உருவாகிவரும் சோசலிச எழுச்சியானது, இந்தியப் பெரு நாட்டிலும் எதிரொலித்தே தீருமென்பதனை அடிகள் தெள்ளத் தெளிய அறிந்து வைத்திருந்தார்.

சோசலிச எழுச்சி தவிர்க்க முடியாத தென்பதனை அறிந்திருந்த அடிகள், அது பலாத்கார ரீதியில் நிகழ்வதனைத் தடுக்கவும், சாத்வீகப் புரட்சியாக அதனை மாற்றவும் பொறுப்பேற்றுர்.

இன்றைய காங்கிரஸ்காரர்கள்—குறிப்பாக, சோசலிசம் பேசும் காங்கிரஸ்காரர்கள் பாட்டாளி வர்க்கத்தினருக்கு அகிம்சா உபதேசம் செய்கிருர்கள். அடிகளார் தமது பார்வையை முதலாளிகள் பக்கமே முதலில் திருப்பினுர். அவர்களுடைய கொடுமைகளை எடுத்துக் காட்டி, கால மாறுதலை உணர்ந்து திருந்துமாறு அறிவுரை கூறினுர்.

"பணக்காரர்கள், இன்று தங்களுடைய கடமை என்ன என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். தங்கள் சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஊதியந் தந்து அவர்களால் அமர்த்தப்படும் ஆட்களே, அவர்களுக்கு எதிராகத் திரும்பிவிடக்கூடும். அகிம்சை ஆயுதத்தை உபயோகிக்க விரும்புகின்ற பணக்காரர்களுக்கு சிறந்ததும் பலனுள்ளதுமான மந்திரம் இதுதான்:

'சொத்தைத் துறப்பதனுலே அதை அனுபவி' என்பதன் பொருள் கோடிக்கணக்கில் சம்பாதிப்பதாயினும் சம்பாதியுங்கள். ஆனுல், சொத்து உங்களுடையதல்ல என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்; மக்களுடையது அது. உங்களுடைய நியாயமான தேவைக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள். மீதத்தை சமூகத்திற்காக உபயோகியுங்கள்.

"இந்த உண்மை இதுவரையிலும் அனுசரிக்கப்படவில்லை. ஆனுல், பணம் படைத்த வகுப்பினர் இந்த சங்கடமான சமயத்தில்கூட இதன்படி நடக்காது போவார்களாயின், அவர்கள் தங்களுடைய சொத்துக்கும் ஆசைகளுக்கும் அடிமைகளாக இருந்து வருவதோடு முடிவில் அவர்களை ஆக்கிரமித்துக்கொள்வோருக்கும் அடிமையாகிவிடுவார்கள்.

"உடல் எவ்விதம் நிரந்தரமானதன்றே, அது போலவே உடல் சக்தியும் நிரந்தரமானதல்ல என்பது நினைவிலிருக்கட்டும். ஆனுல், ஆன்மா என்

றும் அழிவற்றது போன்றே ஆன்ம சக்தியும் நிரந்தரமானது.”

[கா. நூ. தொ-2; பக். 757.]

காந்தியடிகள், உண்மையாகவே சாத்வீக ரீதியான பொருளாதாரப் புரட்சியை விரும்பினார். வர்க்க பேதங்கள் அழிவதிலே அவர் எல்லையற்ற ஆர்வம் கொண்டிருந்தார். அதனால் சுரண்டப்படுகிற மக்களைப் பார்த்து அகிம்சோபதேசம் செய்ததுபோல, சுரண்டுகின்ற கூட்டத்தாரைப் பார்த்தும் சோஷலிசோபதேசம் செய்வதை அவசியமும் அவசரமுமான கடமையாகக் கருதினார்.

## தேர்தல் சோஷலிசம்!

தேர்தலில் வாக்காளர்களை மயக்குவதற்காக சோசலிசம் பேசும் போலித்தனத்தையும் அடிகள் வெறுத்தார். அத்தகைய பித்தலாட்டம் அகிம்சா தருமத்திற்கு எதிரானதென்றும் அடிகள் கருதினார். ஆம்; அடிகளாரின் அகிம்சையிலே பொய்க்கும் பித்தலாட்டத்திற்கும் இடம் கிடையாது. அந்த இரண்டு கேடுகளையும் பலாத்கார இராட்சதனின் தோழர்களாகவே அவர் கருதினார்.

சோசலிசம் பேசும் ஒருவர் தமது சொந்த வாழ்க்கையில் அதனைக் கடைப்பிடிக்காமலே சோசலிச சமுதாயத்தைப் படைக்கப் பாடுபடுவதாகச் சொல்வது மக்களை ஏமாற்றும் முயற்சியாகவே காந்தியடிகள் கருதினார்.

> “எல்லோரும் சோசலிசப் பாதையை மேற்கொண்ட பிறகு, அந்த நிலையை அடைவதற்கு முயற்சி செய்யலாமென்று நாம் தத்துவம் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. நமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளாமல் பேசிக்கொண்டே போகலாம். கட்சிகள் அமைத்துக்கொண் டிருக்கலாம். கிடைத்ததைப் பருந்து மாதிரி கொத்திக்கொண்டு போகலாம். ஆனால், இது சோசலிசமாகாது.

"சோசலிசப் பாதையில் செல்வதை எவ்வளவுக் கெவ்வளவு விளையாட்டாகக் கருதுகிறோமோ, அவ் வளவுக்கவ்வளவு அது நம் கைக்குக் கிட்டாமல் அப்பால் செல்லும்.

"சோசலிசம் பளிங்குபோல் பரிசுத்தமானது. ஆதலால், அதை அடையப் பரிசுத்தமான முறையையே கைக்கொள்ள வேண்டும். தீய முறையைக் கடைப்பிடித்தால் தீய பயனே கிட்டும்.

"ஆகையால் உண்மையும் அகிம்சையும் தூய்மையும் நிரம்பிய சோசலிஸ்டுகள்தான் இந்தியாவிலும் உலகிலும் சோசலிச சமுதாயத்தை அமைக்க முடியும்."

['கா. நூல். தொ. 2; பக். 856-59.']

இந்நாளில் அரண்மனை போன்ற பங்களாவில் வாழ்ந்துகொண்டு, அன்றாடம் ஆடம்பர சொகுசு வாழ்க்கை நடத்திக்கொண்டு, பாங்குகளில் லட்சக் கணக்கில் பணத்தைச் சேமித்து வைத்துக்கொண்டு சிலர் சோசலிசம் பேசுவதையும், சோசலிசம் கோரும் கட்சியின் முன்னணித் தலைவர்களாக இருப்பதையும் கண்கூடாகக் கண்டு வருகின்றோம். இத்தகைய போலி களை சோசலிசத்தின் விரோதிகளாகவே அடிகள் கருதினார்.

இன்னொரு சாரார், ஏழையாக அரசியல் வாழ்வில் புகுந்து, பெரும் பணக்காரராகத் தம்மை வளர்த்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே விஞ்ஞான சோசலிசம் பேசுகின்றனர். இவர்களைத்தான், 'கிடைத்ததைப் பருந்து மாதிரி கொத்திக்கொண்டு போகக் கூடியவர் கள்' என்கிறார் அடிகள்.

## தனி நபர் சோஷலிசம்

சுருங்கச் சொன்னால், காந்தியடிகள் போதித்த சோசலிசமானது தனி மனிதரிடமிருந்தே ஆரம்ப

மாகின்றது. அத்தகைய தனி நபர்களின் எண்ணிக்கை பெருகப் பெருக, சோசலிச சமுதாயம் உருவாகின்றது. இன்னும் தெளிவாகச் சொல்வதானால் காந்திய சோசலிச மானது, தனி நபர்களிடமும் விளங்கி, அதே நேரத்தில் சமுதாயத்தையும் தன் மயமாக்குவதற்குப் புரட்சி செய்கின்றது. ஆம்; தனி மனிதன் வேறு, சமுதாயம் வேறு அல்ல. சமுதாயத்தின் அங்கமே தனி மனிதன். இதுவே காந்திய சித்தாந்தம்.

தனி நபர்களும், அந்த நபர்களைக் கொண்ட அரசியல் கட்சிகளும் 'சோசலிசம்' என்ற புனிதமான சித்தாந்தத்தைப் போலித்தனமாகப் பயன்படுத்துவது அபாயகரமான போக்காகும். இந்தப் போலித்தனத்தைப் பாட்டாளி வர்க்கத்தினர் நன்கு உணர்ந்து கொள்ளும் போது பலாத்கார ரீதியான பொருளாதாரப் புரட்சிக்கே அவர்கள் ஆதரவு தருவார்கள். அப்போது இரத்தப் புரட்சியைத் தவிர்க்க முடியாது. இதை உணர்ந்த தனாலேயே சோசலிசத்தைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளும் ஒரு தனி நபர் தனது சொந்த வாழ்க்கையிலும் அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அடிகள் விரும்பினார். இந்த ஒழுக்கமானது அகிம்சைக்குத் துணை புரிவதாகுமென்றும் அவர் நம்பினார்.

தொழில் முதலாளிகளும், நிலப் பிரபுக்களும், வணிக முதலாளிகளும், காந்தியடிகளின் பெயராலும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு அகிம்சோபதேசம் செய்கின்றனர். இது, காந்தியடிகளின் போதனையைத் தவறுகப் பயன்படுத்துவதாகும். உண்மையிலே, உடைமையாளர் என்போர், காந்தியச் சித்தாந்தப்படி தங்கள் சொந்த வாழ்க்கையிலே அகிம்சையையேனும் கடைப்பிடித்துக் காட்டவேண்டும்.

உண்மை என்னவென்ருல், உடைமையாளராக இருப்பதே பலாத்காரத்தோடு கூடிய வாழ்வாகும். 'உடைமையாவது களவு' என்பது காந்தியடிகள் கொள்கை.

"சொத்துரிமையைத் துறப்பது திருடாமையின் ஒரு அம்சம். ஒரு சாமானை நாம் திருடிப் பெருமலிருந்தாலும், தேவையில்லாமல் அதை நாம் வைத்திருந்தால், அதைத் திருடியவர்களாகவே நாம் கருதப்படலாம். அதை நாம் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்வது, அதனை வருங்காலத்திற்காகப் பத்திரப்படுத்திக் கொள்வது என்ருகும்.

"சத்தியத்தை நாடுபவன், அன்பு மதத்தைப் பின்பற்றுபவன் நாளைக்கென்று எதையும் ஒதுக்கி வைத்துக்கொள்ளலாகாது. ஆண்டவன் எதையும் அடுத்த நாளைக்கென மிகுத்து வைத்துக் கொள்வதில்லை."

அடிகளாரின் இந்த உபதேசத்தைப் பின்பற்றுகிறவர்களே பாட்டாளி வர்க்கத்திற்கு அகிம்சோபதேசம் செய்ய உரிமை பெற்றவர்களாவார்கள். தேவைக்கு அதிகமான பொருள்களையோ, பணத்தையோ குவித்து வைத்துக்கொண்டு, அந்தக் கொடுமையின் விளைவாக வறுமைப்பட்டு வாடும் பாட்டாளி வர்க்கத்தினர் புரட்சி செய்தால், அவர்களைப் பார்த்து அகிம்சோபதேசம் செய்வது அகிம்சா தத்துவத்தையே அவமதிப்பதாகும்.

## அரசமைப்பு மாறுதல்

சிலர், இன்று நடைமுறையிலுள்ள அரசியல் சட்டத்தில் கை வைக்காமலே—அதிலுள்ள சொத்துரிமை விதியைத் திருத்தாமலே, சோசலிச சமுதாயம் படைத்துவிடலாமென்று கனவு காண்கின்றனர்.

பண்டைக் காலத்திலே சாஸ்திரங்களின் பெயரால் என்னென்ன கொடுமைகள் எல்லாம் உழைப்பாளி வர்க்கத்தினருக்குச் செய்யப்பட்டனவோ, அவ்வளவு கொடுமைகள் இன்று சட்டத்தின் பேராலும் செய்யப்பட்டு வருகின்றன என்ருல், அந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு, சமுதாயத்தில் சமத்துவத்தை ஏற்படுத்த முடியுமா?

இன்று நடைமுறையில் உள்ள அரசியல் சட்டத்தை உருவாக்கிய அரசியல் நிர்ணய மன்றத்திடமே காந்தியடிகள் நம்பிக்கை தெரிவிக்கவில்லை.

அரசியல் நிர்ணய மன்றம்பற்றி காந்தியடிகளிடம் கேட்கப்பட்ட கேள்வியையும் அவர் அளித்த பதிலையும் மீண்டுமொரு முறை பார்ப்போம் :

கேள்வி: இப்பொழுது அமைக்கப்போகும் அரசியல் நிர்ணய மன்றத்தைத் தாங்கள் அமைக்க விரும்பும் சுதந்தர இந்தியாவை அமைப்பதற்குப் பயன்படுத்த முடியும் என்று தாங்கள் நம்புகிறீர்களா?

பதில்: அரசியல் நிர்ணய மன்றத்தைக் கொண்டு அந்தக் காரியத்தைச் சாதிக்கலாம். ஆனாலும், அது நடக்குமோ என்னமோ?

சுதந்திரம் வந்தால் எப்படி நடக்கும் என்பதைப் பற்றி காங்கிரஸ் கட்சியில்கூட ஒருமித்த கருத்து இருப்பதாகத் தெரியவில்லை.

கிராமத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் அரசியலை அமைக்க வேண்டும் என்று காங்கிரசிலேயே அநேகர் விரும்புகின்றனர் என்பதனை நான் அறிவேன்.

இந்தியாவானது தூய்மையாக எண்ணித் தூய்மையாக செயலாற்றுவதில் தலைமை தாங்க வேண்டுமானால், கடவுள் இந்தப் பெரிய மனிதர்களை முட்டாள்களாக்கி தங்கள் கருத்துக்களை வெளியிடுவதற்கு வேண்டிய ஆற்றலை கிராம மக்களுக்கு அளிப்பார்.''

['அரிசன்', 28-7-46.]

'சட்டம்', 'ஒழுங்கு' என்றெல்லாம் அடிக்கடி போதனை புரிவோர் அவை தாங்கள் செலுத்திவரும் ஆதிக்கத்திற்கு அரண் செய்வதாலேயே அத்தகைய போதனையில் ஈடுபடுகின்றனர்.

அடிகள் போதித்த அகிம்சை சத்தியத்தோடும் தர்மத்தோடும் கூடியதாகும். இந்த இரண்டுக்கும் மாறுபட்ட சட்டம் எதுவாயினும் சரி; அதனை சத்தியாக்கிரகம் என்னும் கருவி கொண்டு உடைத்தெறியுமாறு அடிகள் போதித்தார்.

## மேட்டுக்குடி மனப்பான்மை

நாடு சுதந்திரம் பெற்றுவிட்ட பின்னர் சாத்வீக முறையிலும்கூட 'சத்தியாக்கிரகம்' போன்ற போர் முறைக்கு இடமில்லை என்று காந்தியடிகளின் சீடர்களாக இருந்தவர்களிலேயே பலர் கூறிவரக் கேட்கின்றோம். இது, மேட்டுக்குடி மனப்பான்மையாகும். இவர்களுடைய காந்தி பக்தியையே சந்தேகிக்க வேண்டியிருக்கின்றது.

சுதந்திர இந்தியாவில் சத்தியாக்கிரகப் போர் முறைக்கே இடமில்லை என்று கூறுவோர் ஏழைகளின் பசிக்கும் பட்டினிக்கும் அவரவர் தலைவிதியே காரணம் என்று சொல்லாமல் சொல்லுவோராகின்றனர்.

தனிவுடைமைக்குச் சாதகமான முறையில் அமைந்துள்ள இன்றைய சமுதாயம் பலாத்கார ரீதியில்தான் உருவாக்கப்பட்டது. பலாத்காரத்தின் மூலமாகக் காப்பாற்றப்பட்டும் வருகின்றது—என்பது காந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படைச் சித்தாந்தமாகும். இதனை ஒப்புக்கொள்ள மறுப்போர் காந்தியவாதிகளாக இருக்க முடியாது.

காந்தியத்திலே, 'சுதந்திரம்' என்பதற்கான பொருளிலே 'சோசலிசம்' என்பதும் சேர்ந்தே யிருக்கின்றது. சோசலிச மற்றது, சுதந்திரமாகாது. ஒருகால், அது மேட்டுக்குடியினருக்கு நலந்தரும் சுதந்திரமாக இருக்கலாம். நாட்டு மக்கள் அனைவருக்கும் நலன்தரும் சுதந்திரமாகாது. இந்த உண்மையைச் சொல்ல சோசலிஸ்டாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. காந்தியவாதியாக இருந்துகொண்டே இதைச் சொல்ல முடியும். இதைச் சொல்பவர்தான் காந்தியவாதி.

## கூலியில் சமம்

சமுதாயத்தில் சம்பளம் அல்லது கூலி விகிதத்திலே, ஏறுமாறான ஏற்றத்தாழ்வு இருப்பது சோசலிசத்திற்கு எதிரானதாகும். இதனை நாடு சுதந்தரம் பெறுவதற்கு முன்பே காந்தியடிகள் எடுத்துக் காட்டினார். அது வருமாறு :

> "உலகம் கண்டு பொறாமைப்படத் தக்கவிதத்தில் இந்தியா உரிமை வாழ்வு நடத்தவேண்டுமானால், நியாயமான ஒரு நாளைய வேலைக்குத் தோட்டிகள், டாக்டர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், வணிகர்கள் யாவருமே ஒரே மாதிரியான ஊதியந்தான் பெறுவார்கள் என்பதில் எனக்கு ஐயமே இல்லை. இந்திய சமுதாயம் இந்தக் குறிக்கோளை அடையாமலே இருக்கலாம். ஆனால், இந்தியா ஒரு நல்ல நாடாக இருக்கவேண்டுமானால், இந்த லட்சியப் பாதையில் நடைபோட வேண்டியது இந்தியர் ஒவ்வொருவருடைய கடமையாகும்; வேறெந்தப் பாதையையும் பார்க்கக் கூடாது.
>
> "ஒரு தோட்டிக்கு எவ்வளவு கிடைக்கிறதோ அதற்கு அதிகமாகப் பெற வக்கீலுக்கோ, டாக்டருக்கோ ஆசிரியருக்கோ உரிமையில்லை."
>
> *[கா. நூ. தொ. 6; பக். 217]*

1936ல் கராச்சியில் நடந்த காங்கிரஸ் மகாசபையில் அரசாங்க அமைச்சர்கள்—அதிகாரிகள் ஆகியோரின் உயர்ந்த அளவு ஊதியம் 500 ரூபாயாக இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

1937ல் சில மாநிலங்களிலே காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டபோது, அமைச்சர் ஒவ்வொருவரும் மாதாந்தர ஊதியம் ரூ. 500 அளவிலேயே பெற்றனர். ஆனால், அதிகாரிகள் சம்பள விஷயத்தில் கராச்சித் தீர்மானம் அமுல்படுத்தப்படவில்லை. பிரிட்டிஷ் மேலாதிக்கம் இருந்ததால், அப்போது அது சாத்தியமாகவில்லை. ஆனால், நாடு சுதந்தரம் பெற்ற பின்னர், கராச்சித் தீர்

மானம் அமைச்சர்கள் விஷயத்தில்கூட சரியானபடி நடைமுறைக்கு வரவில்லை. அதிகாரிகள் சம்பளத் திற்கு உச்சவரம்பு கட்டுவதிலும் கராச்சித் தீர்மானம் அமுலாகவில்லை. அன்றுமட்டுமல்ல; இன்றுங் கூடத் தான்!

சம்பள விஷயத்தில் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமை நீடிக்கும்வரை சோசலிசம் என்பது காகிதப் பூதான!

## கராச்சித் தீர்மானம்

கராச்சித் தீர்மானம், அதிகபட்ச ஊதியத்திற்கு வரம்பு கட்டியதுபோல, சாதாரண உழைப்பாளரின் குறைந்தபட்ச சம்பளத்திற்கும் வரம்பு கட்டவேண்டு மென்று வற்புறுத்தியது. ஒரே வேலைக்கு ஊருக்கு ஊர், தொழிற்சாலைக்குத் தொழிற்சாலை, ஊதிய வேற்றுமை இருப்பது சோசலிசமாகாது. ஒரே வேலையில் ஆணுக் கொரு ஊதியம், பெண்ணுக்கொரு ஊதியம் இருந்து வருவதையும் பார்க்கிறோம். இந்த அநீதிகளைக் 'காந் தியம்' ஆதரிக்கவில்லை; கடுமையாக எதிர்க்கின்றது.

ஒரேவிதமான ஊதியம் இருக்க வேண்டுமென்று தத்துவ ரீதியில் அடிகள் கூறினாலும், நடைமுறையில் அதனைச் சற்றுத் தளர்த்த வேண்டியதன் அவசியத் தையும் அவர் உணர்ந்திருந்தார்.

> "ஒரு அமைச்சர் ஏன் ரூ. 1500 பெறவேண்டும்? ஒரு 'சப்ராஸி' அல்லது ஆசிரியருக்குமட்டும் ஏன் மாதம் ரூ 15 கொடுக்க வேண்டும்?"—என்பது பொருத்தமான கேள்விதான். ஆனால், இந்தக் கேள்வியை எழுப்புவதனால் மட்டும் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. இம்மாதிரி வேற்றுமைகள் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கின்றன.
>
> "ஓர் எறும்புக்கு ஒரே தானியம் இருந்தால் போதும். ஓர் யானைக்கு மட்டும் ஏன் ஏராளமான

தீனி வேண்டி இருக்கிறது? இந்தக் கேள்வியிலேயே அதற்குப் பதிலும் இருக்கிறது.

"சமுதாயத்தில் பற்பலவிதமான தேவைகள் உடையவர்கள் இருக்கிறார்கள் என்பதை அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். ஆனால், அது ஏன், எப்படி என்பது நமக்குத் தெரியாது.

"முடிந்தவரை இந்த வேற்றுமைகளைக் குறைக்க முயற்சிப்பதுதான் இன்று அனுபவ சாத்தியமான செயலாகும். அமைதியான கிளர்ச்சியின் மூலமே, பொது மக்கள் ஆதரவை உருவாக்குவதன் மூலமே இதைச் செய்யலாம்."

*[கா. நூ. தொ. 6; பக். 218]*

வாழ்க்கைத் தேவைகளை அனைவருக்கும் சமமாக விநியோகிக்க வேண்டுமென்பது அடிகளாரின் கொள்கை. அதுபற்றி அவர் வெளியிட்ட கருத்து வருமாறு:

"சமமான விநியோகம் என்பது என்ன? ஒவ்வொருவருக்கும் இயல்பான தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்குச் சாதனங்கள் கிடைக்கவேண்டும் என்பதுதான்.

"சான்றாக, ஒருவனுக்கு ஜீரணசக்தி குறைவாக இருந்தால், ரொட்டிக்குக் கால் பவுண்டு மாவுதான் வேண்டும். மற்றொருவனுக்கு ஒரு பவுண்டு மாவு வேண்டியிருந்தால், இருவரும் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வேண்டிய வசதியைப் பெறவேண்டும்.

"இந்தக் குறிக்கோள் நிறைவேற வேண்டுமானால், இன்றுள்ள சமூக அமைப்பையே மாற்றி அமைக்க வேண்டும்."

*[கா. நூ. தொ. 6; பக். 215]*

ஆசிரியர் தொழில் செய்யும் ஒருவர், அதை விட்டால், அதைவிடவும் மேலான அந்தஸ்துடைய தொழி

லேயே விரும்புகிறார். உடலுழைப்புத் தொழிலைச் செய்ய விரும்பாதவராகிறார். காரணம், உடலுழைப்புத் தொழிலை இழிவானதாகக் கருதுவதாகும். போதிய ஊதியம் கிடைக்காதென்பதும் மற்றொரு காரணமாகும்.

## ராஜ பாதை

தொழில் வேறுபட்டாலும் ஊதிய வேறுபாடு கூடாதென்ற குறிக்கோளுடைய காந்தியடிகள் தொழில்களிலே ஒன்றை மேலானதாகவும் இன்னொன்றை இழிவானதாகவும் எண்ணுகின்ற மனப்பான்மையை வெறுத்தார். இதுபற்றி அவரது கருத்து வருவாறு:

> "ஒரு மனிதன் தன்னுடைய பழைய வாணிபத்தை நடத்த முடியவில்லையானால், தோட்டி வேலை செய்தல் அல்லது கல்லுடைத்தல் போன்ற ஏதாவது ஒரு உடலுழைப்புத் தொழிலைச் செய்யவேண்டியது அவருடைய கடமையாகும். இதில் அவருடைய விருப்பத்திற்கு இடமில்லை. ஆனால், ஊதியம் ஒரேமாதிரியானதா யிருக்கவேண்டும்.
>
> "ஒரு தோட்டிக்கு எவ்வளவு கிடைக்கிறதோ அதற்கு அதிகமாகப் பெற வக்கீலுக்கோ, டாக்டருக்கோ ஆசிரியருக்கோ உரிமையில்லை. அப்பொழுதுதான தொழில் பிரிவினையால் நாட்டிற்கும் உலகிற்கும் நன்மை ஏற்படமுடியும். உண்மையான நாகரிகம் அல்லது மகிழ்ச்சிக்கு இதைவிட ராஜபாட்டை வேறு எதுவுமில்லை."

*[கா. நூ. தொ. 6; பக். 21)*

காந்தியடிகள் தருமகர்த்தா முறையின் மூலமே தனிவுடைமையின் கொடுமையிலிருந்து நாட்டை விடுவிக்க முடியுமென்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால், அது வெறும் நடைமுறை தான்; சித்தாந்தமன்று. சித்தாந்தம் சோசலிசமே. நடைமுறை, தருமகர்த்தாப் பொதுவுடைமை; சித்தாந்

தம் மாற முடியாது. நடைமுறை—அதாவது, செயல் முறை கால மாறுதலுக்கேற்ப மாறக்கூடியதாகும்.

அடிகள், தருமகர்த்தாப் பொதுவுடைமையைத் தனி வுடைமையாளர் ஏற்கவில்லையானால், அகிம்சை ரீதியான ஒரு போராட்டத்தின் மூலம் சோசலிச சமுதாயம் படைப் பதற்கும் தயாராகி வந்தார். அந்த நேரத்தில்தான் கோட்சே தோன்றி, அவரது உயிரைக் குடித்தான்!

"தருமகர்த்தா ஏற்பாட்டை எப்படிச் செய்யப் போகிறீர்கள்? மனமாற்றத்தின் மூலமா?" என்ற வினுவுக்கு அடிகள் தந்த விடை வருமாறு :

> "வாய் மொழியாகக் கேட்டுக் கொள்ளுவதன் மூலமாக மட்டுமல்ல; அதற்கான என்னுடைய முறைகளிலேயே நான் அதிகக் கவனஞ் செலுத்து வேன்.
>
> "இந்த யுகத்தின் மிகப் பெரிய புரட்சிக்காரன் என்று சிலர் என்னை வருணித்திருக்கிறார்கள். இது தவறாயிருக்கலாம். ஆனால், என்னை ஒரு புரட்சிக் காரன் என்றே நான் நினைக்கிறேன். சாத்வீகப் புரட்சிக்காரன். ஒத்துழையாமையே என்னுடைய வேலை முறை."
>
> *[கா. நூ. தொ. 6; பக். 159]*

"பொருளாதார, சமூக விடுதலைக்காகத் தொழிலா ளர்களும் விவசாயிகளும் வர்க்கப் போராட்டத்தை நடத்துவது நியாயமானதுதான் என்று நீங்கள் நினைக்க வில்லையா?" என்று இளங் கம்யூனிஸ்டுகள் சிலர் கேட் டார்கள். அதற்கு அவர், "இல்லை. அவர்கள் சார்பாக நானே ஒரு புரட்சியை நடத்திக் கொண்டிருக்கிறேன். ஆனால், அது சாத்வீகப்புரட்சி!" (கா. நூ. தொ. 6; பக். 158) என்று பதிலளித்தார்.

## சுதந்தரோதயத்தின்போது...

1947ல் நாடு பெற்ற அரசியல் விடுதலையை மட்டுமே கொண்டு, பொருளாதார விடுதலைக்கெனத் தனியாக



SENTAMIL COLLEGE
4659
MADURAI

ஒரு கிளர்ச்சியோ, புரட்சியோ இன்றிச் சோசலிச சமுதாயம்—அதாவது, அடிகள் விரும்பிய ராமராஜ்யம் படைப்பது சாத்தியமில்லை யென்பதனை அவர் தெள்ளத் தெளிய உணர்ந்திருந்தார். இதனை முன்பே அறிந்தோம் மீண்டு மொருமுறை பார்ப்போம்:

"நடக்கப் போவது இதுதான்; அடிமைத்தனம் ஒழிந்து, சுதந்தரம் உதயமாகும்போது, சமுதாயத்திலுள்ள பலவீனங்க ளெல்லாம் வெளிக்கிளம்பி மேலே வந்துவிடும்.

"அந்தச் சமயத்தில் நாம் நிதானமாக செயல்பட்டால் எல்லாச் சிக்கல்களும் தீர்ந்துவிடும்.

"பொருளாதாரப் பிரச்னையைப் பற்றிய வரையில் எப்படியும் அதைத் தீர்த்துத்தான் ஆக வேண்டும்.

"இன்று நாட்டில் மிகப் பெரிய அளவில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. பொருளாதார சமத்துவம்தான் சோசலிசத்தின் அடிப்படை.

"இன்றைய நேர்மையற்ற அமைப்பில் சிலர் செல்வத்தில் புரள்கிறார்கள். பொது மக்களுக்குப் போதுமான உணவுகூடக் கிடைப்பதில்லை. இந்த நிலையில் ராமராஜ்யம் சாத்தியமில்லை."

['அரிசன்', 1-6-47]

'சுயராஜ்யம் யாருக்கு?' என்ற வினவுக்கு 'மக்களுக்குத்தான்' என்று விடையளிக்கின்றது காந்தியம். சுதந்தர இந்தியாவில் மக்கள் நலனுக்கு எதிராகவுள்ள எல்லா நலன்களும் மனமாற்றத்தின் மூலம் மாற்றப்பட வேண்டும். இல்லையேல், போராட்டத்தின் மூலம் அழிக்கப்படவேண்டும் என்பதே காந்தியம். இதனை அடிகள் வாக்காலேயே அறிவோம் :

"சுதந்தரம் பெறவேண்டியவர்கள் மக்கள். இது முற்றிலும் பணக்காரர்கள் அல்லது படித்த

வர்கள் பொறுப்பல்ல. எந்தச் சுயராஜ்ய அமைப்பிலும் பணக்காரர்களும் படித்தவர்களும் தங்கள் நலன்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.''

''ஆகையால், நோக்கம் என்ன என்பதைச் சொல்லுகிறேன்: எந்தவிதமான அன்னிய ஆதிக்கமும் இல்லாத முழுச் சுதந்தரம்; அதுவும் வாயில்லாப் பூச்சிகளின் நன்மைக்கான சுதந்தரமே குறிக்கோள். ஆகவே, அவர்களுடைய நலன்களுக்கு விரோதமாக உள்ள ஒவ்வொரு நலனும் மாற்றப்பட வேண்டும். அப்படி மாற்ற முடியாதென்றால், அழிந்துவிடவேண்டும்.''

[கா. நூ. தொ. 6; பக். 134]

''சுயராஜ்யம் என்பது தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு நன்மை பயப்பதாயில்லை யென்றால், அந்த சுயராஜ்யத்திற்குப் பொருள் இல்லை.''

[கா. நூ. தொ. 6; பக். 163]

காந்தியடிகள், பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராகக் கையாண்ட அதே 'ஒத்துழையாமை'யைக் கொண்டே உள்நாட்டு ஆதிக்க வர்க்கங்களையும் வெற்றி காண விரும்பினார்.

''பணக்காரர்கள் தாங்களாகவே தருமகர்த்தாக்கள் ஆகாவிட்டால், விபரீதத்தைத் தவிர்க்க வேண்டுமென்ற ஆசை அவர்களுக்கு இல்லாதிருந்தாலொழிய, சந்தர்ப்பங்களின் பலத்தின் காரணமாக அவர்கள் அந்த ஏற்பாட்டிற்கு உடன்பட்டாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

''அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட ராஜ்யத்தில், பலாத்காரத்தின் மூலம் செய்ய முடியாததையும் பொதுஜன அபிப்பிராயத்தின் மூலம் செய்துவிட முடியும்.

''உழைப்பவர்களேதான் உற்பத்தி செய்வதன் சொந்தக்காரர்கள். புத்திசாலித்தனமான சேர்க்கை

யின் மூலம் தமக்குக் கிடைக்கும் ஆற்றலை அவர்கள் உணர்ந்தால், சுரண்டும் வர்க்கத்தின் அநீதிகள் நின்றுவிடும்.

"ஏழைகளை அமுக்கிவைக்கும் முறையின் தீமைகளுடன் மக்கள் ஒத்துழையாமை செய்தால், அது கவனிப்பாரற்றுச் செத்துவிடும். வர்க்கப் போராட்டத்தைத் தவிர்ப்பதற்கு இது ஒன்றுதான் சரியான வழியாகும்."

[கா. நூ. தொ. 6; பக். 39—40]

## அடுத்த புரட்சி

நாடு விடுதலை பெற்ற நாளிலே, காந்தியடிகளுக்கு வயது 77. அந்த முதுமைப் பருவத்திலேயும் தளர்ச்சி என்பதறியாமல், நாட்டிற்கு விடுதலை தேடிவிட்டதால் மனநிறைவு பெருமல் மற்ருெரு பெரும் புரட்சிக்கு அவர் தயாராகிக் கொண்டிருந்தார். அது, பொருளாதார சோசலிசப் புரட்சியாகும். அடிகள் பேசுகிருர் :

"அடுத்த புரட்சி, சமூக சம்பந்தமானதாகவே இருக்கும்; அதற்குப் பலாத்காரம் அவசியமானதோர் பகுதியாக இல்லாமலிருப்பதற்கான வகையில் அது தனக்குத்தானே வேலை செய்துகொண்டு, அப் புரட்சியை உண்டாக்கிக் கொள்ளுவதற்காக நல்லெண்ணம், நீதி ஆகியவற்றின் விதையை விதைப்பதையே என் கடமையாக்கிக் கொண்டிருக்கிறேன்."

அடிகளாரின் லட்சியமான தருமகர்த்தா முறை சமுதாயம் படைப்பதற்காக அவர் தொடங்க விரும்பிய ஒத்துழையாமை அல்லது சத்தியாக்கிரகப் போராட்டத்தால் பலன் கிடைக்காதென்று சாத்விகத்தில் நம்பிக்கையற்ற புரட்சிக்காரர்கள் அவரை எச்சரித்தனர். அவர்களுக்கு அடிகள் அளித்த பதில் வருமாறு :

"இப்போது பணம் வைத்துக் கொண்டிருப்பவர்கள், ஏழைகளின் சார்பாக அந்தச் செல்வத்

தைத் தரும சொத்தாக வைத்துக்கொண்டிருக்கும் படிக் கேட்கப்படுகிறார்கள்.

"தருமகர்த்தா முறை என்பது சட்டப்படி ஒரு கட்டுக்கதை என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், மக்கள் சதா அதைப்பற்றிச் சிந்தனை செய்து, அதைப்பற்றி நடக்க முயற்சித்தால், உலகத்தில் இப்போது இருப்பதைவிட அன்பின் ஆட்சி இன்னும் அதிகமாக இருக்கும். பரிபூரணமான தருமகர்த்தா முறை என்பது விண்டு காட்டக்கூடிய ஒன்றல்ல. அதை எய்துவதும் சுலபமல்ல. ஆனால், அதற்காக முயற்சி செய்தால் சமத்துவ நிலையை அடையும் பாதையில் இன்னும் அதிக தூரம் செல்ல முடியும். வேறெந்த வழியின் மூலமும் அவ்வளவு தூரம் போக முடியாது."

[கா. நூ. தொ. 6; பக். 225]

அரசாங்கம் உருவாக்கும் சட்டதிட்டங்களின் மூலம் சோசலிச சமுதாயத்தை உருவாக்குவ தென்பது அடிகளுக்கு விருப்பமளிப்பதன்று. அவரது லட்சிய சமுதாயம் அரசாங்கமே இல்லாத அராஜகமாகும்.

## குறைந்த அளவு பலாத்காரம்

சட்டதிட்டங்கள் மூலம் தொழில்களை அல்லது சொத்துக்களை அரசுடைமை யாக்குவதனைக் குறைந்த அளவு பலாத்காரமாகவே அடிகள் கருதினர். அவரது இந்தக் கருத்தையே தங்கள் கைக் கேடயமாகக் கொண்டு சோசலிச முயற்சிகளை எதிர்த்துப் போராடுகின்றனர் சிலர். ஆனால், அவர்களது போக்கு பிறவிக் குருடர் கண்ட யானை போன்றதாகும்.

"அரசு குறைந்த அளவு பலாத்காரத்தைப் பயன்படுத்துவதாயிருந்தால், அது நியாயமென்றே நம்புகின்றேன்.

"சம்பந்தப்பட்ட நபர்கள் தருமகர்த்தாக்களைப் போல் நடந்துகொள்ளுவார்களென்றால், எனக்குத்

திருப்தியாக இருக்கும். ஆனால், அவர்கள் அப்படிச் செய்யத்தவறினால், குறைந்த அளவு பலாத்காரப் பிரயோகத்துடன் அரசின் மூலம் அவர்களுடைய சொத்துக்களைப் பறிக்கத்தான் வேண்டியிருக்கும் என்று நம்புகிறேன். அதனால்தான் எல்லா சுயநல உரிமைகளையும் பரிசீலனை செய்து, தேவைப்படும் நேரங்களில், அந்தந்த நிலைமைக்கேற்றவாறு நஷ்டஈடு கொடுத்தோ, கொடுக்காமலோ, அவற்றைப் பறிமுதல் செய்யவேண்டும் என்று நான் லண்டன் வட்டமேஜை மகாநாட்டிலேயே கூறினேன்.

"என்னைப் பொறுத்தவரையில் எல்லா அதிகாரங்களும் அரசாங்கத்தினிடம் குவிந்திருப்பதை நான் விரும்பமாட்டேன்; தருமகர்த்தாக் கொள்கை விஸ்தரிக்கப்படுவதையே விரும்புகிறேன். ஏனெனில், அரசின் பலாத்காரத்தைவிட, தனிவுடைமையிலுள்ள பலாத்காரத்தின் தீமை குறைவானது என்று நான் கருதுகிறேன்.

"ஆயினும், தவிர்க்க முடியாதென்றால், குறைந்த அளவு அரசுடைமையாவதை நான் ஆதரிப்பேன்."

[கா. நூ. தொ. 6; பக். 226—22]

தனிவுடைமையாளர்கள் தருமகர்த்தா முறையை ஏற்கவில்லையானால், அவர்கள் வர்க்கப் போருக்குத் தயாராக வேண்டியதுதான். அதனைத் தவிர்க்க முடியாது—என்றார் அடிகள்.

"இன்றைய பணக்காரர் சம்பந்தப்பட்ட வரையில் அவர்களுக்கு இரண்டே வழிகள் இருக்கின்றன. ஒன்று, அவர்கள் தாமாகவே தம் செல்வத்திற்குத் தரும கர்த்தாக்களாக தம்மைத் தாமே மாற்றிக் கொள்ள வேண்டும். அல்லது, போராட்டத்தில் இறங்க வேண்டும்."

['அரிசன்', 31-3-46.]

இதனுல், இன்றைய நீதியற்ற தனிவுடைமைச் சமுதாயம் ஒருநாள் கூட நீடிப்பதை அடிகள் விரும்ப வில்லை யென்பது புலனுகின்றது. ஆம்; ஒன்று, தனி வுடைமையாளர் மனமாற்றமடைவதன் மூலம் தரும கர்த்தா முறை சமுதாயம் அமையவேண்டும். அதற்கு வாய்ப்பில்லையேல், சாத்வீகப் புரட்சியின் மூலம் தனி வுடைமை அழிக்கப்பட வேண்டும். இந்த இரண்டு மில்லை யென்ருல், இரத்தப் புரட்சி தவிர்க்க முடியாத தாகும்.

## சோசலிச விரோதிகள்

சோசலிச விரோதிகள் வாயளவில் அடிகளாரின் தருமகர்த்தா முறையை ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆம்; உருவாகிவரும் சோசலிசப் புரட்சியைத் தவிர்க் கும் தந்திரமாக! தனிவுடைமையாளர்கள் தாங்க ளாகவே மனமாற்றம் அடையும்வரை பாட்டாளி வர்க்கம் காத்திருக்க வேண்டுமென்பது அவர்கள் கருத் தாகும். அடிகள் இதனை ஏற்கவில்லை.

> "முதலாளிக்கு மனமாற்றம் ஏற்படும் வரை யில் தொழிலாளி காத்திருக்க வேண்டியதில்லை. மூலதனம் எப்படி ஒரு சக்தியோ, அதே மாதிரி உழைப்பும் ஒருவகைச் சக்தி.
>
> "முதலாளியின் மனத்தை மாற்ற முயல வேண்டும். அவருடன் ஒத்துழையாமை செய்தால் அவர் தனது பிழையை உணர்ந்து திருந்துவார். திருந்தா முதலாளிகளுக்குத் தாங்கள் உதவி செய்யக் கூடாதென்பதை மற்ற தொழிலாளர்கள் உணர்ந்து விடுவார்கள். இதுவே பலனளிக்கக் கூடிய வழி."
>
> *[கா. நூ. தொ. 6; பக். 149]*

காந்தியடிகள் போதிக்கும் சாத்விக ஒத்துழை யாமைப் போர்முறையின் வலிமையை இந்திய விடுதலைப் போரில் கண்கூடாகக் கண்டோம்.

அரசியல் விடுதலைக்குப் பயன்பட்ட அந்த அகிம்சை வழிப்பட்ட ஒத்துழையாமையே பொருளாதார விடுதலைக்கும் பயன்படுமென்று பாட்டாளி வர்க்கம் நம்ப வேண்டும்.

பாரதப் பெருநாடு 1947 ஆகஸ்டுப் பதினைந்திலே பெற்றது வெறும் அரசியல் விடுதலைதான். சரியாகச் சொன்னால், பாரதபூமி பரங்கியரிடமிருந்து விடுதலை பெற்றது-அவ்வளவுதான். ஆங்கிலேயர் நுழைவதற்கு முன்னும் நுழைந்த பின்னரும் இந்த நாட்டில் நிலவி வந்த ஆயிரமாயிரம் கொடுமைகள் ஆகஸ்டுப் பதினைந்துக்குப் பின்னரும் அப்படியே நீடித்துவருவதைப் பார்க்கிறோம்.

## இனம் இனத்தோடு...

இந்திய விடுதலைப் போர் அகிம்சை முறையிலே நடைபெற்றதால், சமுதாயத்தின் மேல்தளத்தில் உள்ள சுகஜீவிகளில் சிலரேனும் அந்தப் போராட்டத்தில் பங்கு பெற முடிந்தது. அதுமட்டுமல்ல; அவர்கள்தான் முன்னணித் தலைவர்களாகவும் தளபதிகளாகவும் திகழ்ந்தனர். அதனால் விடுதலை பெற்ற இந்தியாவிலும், அந்த மேட்டுக்குடிக் கனவான்களின் ஆதிக்கமே ஆளுங்கட்சியான காங்கிரசிலே மேலோங்கி விட்டது.

இனம் இனத்தோடு சேருமென்பது பழிமொழி. அதுபோல், சுதந்திரப் போராட்ட காலத்திலே ராசவிசுவாசிகளாக விளங்கிய கனவான்களும் தனவான்களும் சுதந்திர இந்தியாவிலே 'தேச பக்தர்களா'கிவிட்டனர்! காங்கிரசுக்குள்ளிருந்த கனதனவான்களும் அந்த மாஜி ராச விசுவாசிகளைத் தேசபக்தர்களாக மாற்றி காங்கிரசுக்குள்ளே கொண்டுவருவதில் அதிக ஆாவம் காட்டினர்.

நாடு விடுதலை பெறவிருந்த நேரத்திலே மத்தியில் நேருவின் தலைமையில் இடைக்கால அரசு ஏற்பட்டது. அதிலே, அன்றுவரை பிரிட்டிஷ் விசுவாசிகளாகவும் விடுதலைப் போராட்டப் பாசறையின் விரோதிகளாகவும்

விளங்கிய டாக்டர் ஆர். கே. சண்முகம், என். கோபால சாமி ஐயங்கார், டாக்டர் அம்பேத்கார் ஆகிய கனவான்களும் முதலிடம் பெற்றனர்.

இப்படி ஒரு நிகழ்ச்சி இந்திய விடுதலைக்கு முன்னும் பின்னும், விடுதலை பெற்ற எந்த ஒரு நாட்டிலும் ஏற்பட்டிருக்காது. இந்த நிகழ்ச்சியினுல், இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட தேசிய காங்கிரஸ் மகாசபை, மக்களிடமிருந்து ஒதுங்கி, மாளிகைச் சீமான்கள் காட்டும் வழியிலே நடைபோடத் தொடங்கியது.

பிற்போக்கான இந்த மாறுதல், காந்தியடிகள் உயிர்வாழ்ந்த போதே, அவருடைய அனுமதியோடு தான் நடைபெற்றது என்பதனை இங்கு நாம் நினைவில் கொள்ளவேண்டும். இந்தப் பிற்போக்குத் தனத்துக்கு- அதாவது, பிரிட்டிஷ் ராஜபக்தர்களும் இந்திய தேச பக்தர்களும் ஒன்று கலந்த நிகழ்ச்சிக்கு காந்தியடிகள் ஆதரவுதரக் காரணங்கள் பல உள்ளன.

முக்கிய காரணம், சமாதானமாக ஒரு சூழ்நிலையிலே பிரிட்டிஷ் அரசோடு உடன்படிக்கை செய்துகொண்டு அதிகார பீடத்திலே காங்கிரஸ் ஏறியதுதான்.

## கட்டுச் சோற்றுக்குள் எலி

பிரிட்டிஷ் மந்திரி சபைக்கும், காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கும் இடையே சமரசப் பேச்சு நடைபெற்ற போது, பிரிட்டிஷார் தங்கள் விசுவாசிகளை இடைக்கால அமைச்சரவையிலே திணிக்க முயன்றனர். அதைத் தவிர்க்க இயலாமல், அவ்வாறு தவிர்ப்பதால் வரக் கூடிய கேடுகளுக்கு அஞ்சியவராகி, அடிகளார் சம்மதம் தந்தார். நாடு விடுதலை பெற்றதுமே காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிட அடிகள் தமது மனத்துள் முடிவு செய்து வைத்திருந்தாராதலால், இடைக்கால அமைச்சரவையில் பிரிட்டிஷ் விசுவாசிகள் இடம்பெறுவதைப் பற்றி அவர் அதிகமாகக் கவலைப்படவில்லை போலும்!

அமெரிக்க விடுதலைப்போர், ஆயுத பலங்கொண்டு நடைபெற்றதால்தான் அந்தப் போராட்டத்தில் பங்கு கொண்ட வீரர்களேயன்றி, அவர்களுக்குத் தலைமை தாங்கிய தளபதிகளும் மேட்டுக்குடி மக்களிலிருந்து வந்தவர்களாக இருக்கவில்லை. உழவர் தொழிலாளர் வர்க்கங்களிலிருந்து வந்தவர்களாகவே இருந்தனர்.

மற்றும், அடிமைப்பட்ட அமெரிக்கர்களுக்கும் அடிமைப்படுத்திய பிரிட்டிஷாருக்கும் ஆங்கிலமே பொது மொழியாக இருந்ததால், அமெரிக்க விடுதலைப் போரில் தலைமை தாங்கிய 'படித்தவர்கள்' என்போரும் சாதாரணக் குடிமக்களிலிருந்து வந்தவர்களாகவே இருந்தனர்.

இந்தியாவின் நிலை இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். ஏற்கனவே சொன்னபடி இங்கு விடுதலைப் போரானது அகிம்சை முறையில் நடைபெற்றதால், உழவர்—தொழிலாளர் வர்க்கத்தினரைச் சுரண்டுகின்ற நிலப் பிரபுக்கள்—தொழிலதிபர்கள் குடும்பங்களைச் சார்ந்தவர்களும் தலைவர்களாக வர முடிந்தது. நடுத்தரக் குடும்பங்களிலிருந்து வந்த படித்தவர்களும் அந்நியமொழியான ஆங்கிலத்தின் மூலம் படித்துப் பட்டம் பெற்றவர்களாக இருந்தனராதலால், சாதாரண மக்களிலிருந்து வேறுபட்ட ஒரு உயர் சாதியினராக அவர்கள் தங்களைக் கருதிக்கொண்டனர். இந்த வேற்றுமை அல்லது உயர்வு மனப்பான்மை விடுதலைப் போராட்ட காலத்திலே அவ்வளவு கொடுமையாக வெளிப்படவில்லை. அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைக் கொடுமைகளும் சிறைவாசமுமே அன்றைய தேசபக்தர்கள் பெறும் பரிசுப் பொருள்களாக இருந்தனவாதலால், படித்தவர்களின் மனத்துள் வளர்ந்திருந்த உயர்வு மனப்பான்மை சாதாரணக் குடும்பங்களைச் சார்ந்த தேசியத் தொண்டர்கள் புரிந்துகொள்ளக் கூடிய நிலையில் வெளிப்படவில்லை. தேசம் விடுதலை பெற்ற பிறகே அது வெளிப்பட்டது.

காங்கிரஸ்காரர்களிலே பணக்காரர்களும் பட்ட தாரிகளிலே மிகப் பெரும்பாலோரும் ஆகஸ்டுப் பதினைந்தோடு விடுதலைப்போர் முடிந்துவிட்டதாகக் கருதினர். அவர்கள் பார்வையிலே 'விடுதலை' என்பது அன்னியர்களை வெளியேற்றி ஆட்சி யந்திரத்தைக் கைப்பற்றுவதுதான்! அந்த விடுதலை ஆகஸ்டுப் பதினைந்திலே அவர்களுக்குக் கிடைத்துவிட்டது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே உயர்பதவிகள் எல்லாம் ஆங்கிலேயருக்கே உரிமையாக்கப்பட்டிருந்தன. பிரிட்டிஷார் வெளியேறியபின் அந்த உயர்பதவிகள் எல்லாம் இந்தியர் மயமாக்கப்பட்டு விட்டமையால், படித்துப் பட்டம் பெற்றிருந்த கனவான்களுக்கு—அவர்கள் பிரிட்டிஷ் விசுவாசிகளாக இருந்தாலும்—சுதந்தரத்தின் பலனை அனுபவிக்கும் வாய்ப்பு முழு அளவில் கிடைத்து விட்டது.

அப்படியே, தொழில் துறையிலிருந்தும் வாணிபத் துறையிலிருந்தும் பிரிட்டிஷார் விடுதலையை அடுத்து ஒரு குறுகிய காலகட்டத்திற்குள் வெளியேறிச் சென்று விட்டார்கள். ஆதலால், இந்திய மக்களைச் சுரண்டுகின்ற உரிமை இந்திய முதலாளிகளுக்கும் வணிகர்களுக்கும் பாங்கர்களுக்கும் ஏகபோகமாகிவிட்டது. ஆகவே, அவர்களும் ஆகஸ்டுப் பதினைந்துக்குப் பின் சுதந்தரத்தின் பலனை முழு அளவில் அனுபவிக்க வாய்ப்புப் பெற்றுவிட்டனர்.

இத்தனைக்கும் நடுவே சுதந்தரப் போராட்ட காலத்திலே தலைமை தாங்கிய அகில இந்தியத் தலைவர்களும் மாநிலத் தலைவர்களும் மாவட்ட மட்டத்தில் வளர்ந்தவர்களும் மத்திய ஆட்சியிலும் மாநில ஆட்சிகளிலுமாக அவரவர் சக்திக்கும் சாமர்த்தியத்திற்கும் ஏற்பப் பதவிகள் பெற்றுவிட்டனர். அதனால், அவர்களும் சுதந்திரத்தின் பலனை அனுபவிக்கும் வாய்ப்பினைப் பெற்றுவிட்டனர்.

இப்படி, எங்கும் காரிருள் சூழ்ந்திருந்த நேரத்திலே காந்தியடிகள் ஒருவர் மாத்திரம் ஆகஸ்டுப் பதினைந்திலே இந்தியா பெற்றது முழு சுதந்தரம் அல்ல என்பதனைத் தெள்ளத் தெளிய உணர்ந்திருந்தார். அவருடைய தலைமையிலே அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்த வினோபாஜி போன்ற பலரும் அவரைப் போன்றே கருதினர்.

ஆகஸ்டுப் பதினைந்தில் பெற்ற அரசியல் விடுதலையைப் பயன்படுத்தி கடையருக்கும் கதிமோட்சம் தரும் பொருளாதார சுதந்தரத்தை அடைவதற்கான போராட்டத்திலே ஈடுபடத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார் காந்தியடிகள். அந்தத் தயாரிப்பிலே, காங்கிரசைக் கலைப்பதனை முதல் வேலையாகக் கருதியிருந்தார். அந்த நேரத்திலேதான் கொடியவன் கோட்சே தோன்றி அடிகளாரைக் கொலை செய்துவிட்டான்.

அதனால், காந்திய சகாப்தத்தின் முதல் கட்டம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. ஆம்; காந்தியம் என்பது, தத்துவியை இழந்த தத்துவமாகி விட்டது! எதிர்காலம் எப்படியோ ?

## முடிவுரை

இதுகாறும் கூறியவற்றின் சாராம்சத்தை இந்த முடிவுரையில் சுருக்கிக் கூறவேண்டுவது அவசியமாகிறது. ஆகவே, 'கூறியது கூறல்' என்று வாசகர்கள் கருதக் கூடாது.

காந்தியடிகள் மறைந்த பின்னர், 'காந்தியம்' என்பது, தத்துவியை இழந்த தத்துவம்போல் ஆகிவிட்டது. ஆம்; காந்தியடிகள் விரும்பிய முறையில் அகிம்சாவழியில் சுதந்தர இந்தியாவை சோசலிச இந்தியாவாக மாற்றவேண்டுமானால், அதற்குப் போராட்டம் நடத்த, இன்னொரு காந்தி தேவை. 'அரசியல் கட்சி' என்ற நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொண்டு, ஆட்சிபீடத்திலேறிவிட்ட, அங்கும் கோஷ்டிச் சண்டைகளை நடத்தி பிளவுபட்டுக்கிடக்கின்ற காங்கிரசால், காந்திய முறையில் சோசலிசப் போராட்டத்தை நடத்த முடியாது. அதுபற்றிய சிந்தனையும் இன்றைய பிளவுபட்டுள்ள காங்கிரஸ் கட்சிகளுக்குக் கிடையாது.

பாரதப் பெருநாட்டிலே சோசலிசத்திற்காக வர்க்கப் புரட்சி நடைபெறப் போவது உறுதி. அது, அடிகள் விரும்பியபடி, சாத்வீக முறையில்—வர்க்கத் துவேஷமின்றி நடைபெறப் போகின்றதா? வர்க்கத் துவேஷ அடிப்படையில் வன்முறையில் நடைபெறப் போகின்றதா?—என்பதுதான் பிரச்னை.

காந்தியடிகள், ஆகஸ்டுப் பதினைந்தில் நாடு பெற்றதைப் பரிபூரண சுதந்தரமாகக் கருதவில்லை. பொருளாதார சமத்துவ மில்லாத ஒன்றை அடிகள் சுதந்தரமாகவும் கருதவில்லை. ஆகவே, அவரது சித்தாந்தப்படி, இனித்தான் பொருளாதாரச் சுதந்தரப்போர் தோன்ற வேண்டும். அந்தப் போராட்டம் வன்முறை வழியிலல்லாமல், சாத்வீக நெறிப்படி நடைபெறுவதையே நாம் விரும்பவேண்டும்.

இன்றைய சமுதாயத்தில் வர்க்க வேற்றுமை இருக்கின்றது. முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தைச் சுரண்டுகின்றது; அதனுல், வர்க்கப்போர் இப்போதே இருந்துகொண்டுதான் இருக்கின்றது. ஆனுல், பொருளாதாரச் சுதந்தரத்திற்கான போராட்டம் வர்க்கத் துவேஷமின்றி நடைபெறவேண்டும். வர்க்கத் துவேஷம் வன்முறைக்கே அழைத்துச் செல்லுமாதலால், அதனுல், நாடு சோஷலிச மயமாகும் நாள் தள்ளிப் போகவும் கூடும். ஆகவே, வர்க்க பேதமற்ற சமுதாயம் படைக்கும் குறிக்கோளுடன் பொருளாதாரப் போராட்டம் சாத்வீக முறையில் நடத்த நாட்டு மக்கள் தயாராக வேண்டும்.

பொருளாதாரப் புரட்சி கிராமங்களிலே பிறந்து, கிராம வாசிகளாலேயே நடத்தப்பட வேண்டும். இது நடைபெறவேண்டுமானுல், மக்களுடைய புரட்சிக்குத் தடையாக இருக்கும் ஆங்கில ஆதிக்கத்தை அழித்தொழிக்க வேண்டும். தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெறவேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில மொழியே மக்கள் வாழ்க்கையில் முதலிடம் பெறவேண்டும். பொருளாதாரப் புரட்சி தோன்றுவதற்கு இதுவே முன்னேடி நிகழ்ச்சி என்பதனை சோசலிஸ்டுகள் உணரவேண்டும்.

சோசலிசப் புரட்சிக்கோ, சமதர்ம சமுதாயத்திற்கோ மதமும் தெய்வ பக்தியும் தடையானவையல்ல. ஆனுல், போலிச் சடங்குகளை வற்புறுத்தும் புரோகித மதமும், தெய்வம் பல பேசும் மூடநம்பிக்கையும் ஒழிக்கப்பட வேண்டியவை. ''சமயங்களிடையே சமத்துவம்—சமரசம்'' என்பதே காந்தியம். இது ஆன்மிக நெறியுமாகும். இந்த ஆன்ம சுதந்தரத்தை இழந்து பொருளாதாரச் சுதந்தரம் பெற முயல்வது தடம்புரண்ட செயலாகும்.

நிலவுடைமைப் பிரச்சினையிலே, அடிகள் தரும கர்த்தாப் பொதுவுடைமையை வற்புறுத்தவில்லை. 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்பதே காந்தியம்.

நிலவுடைமை நீங்கிய தனிவுடைமைப் பிரச்சினையிலே, தருமகர்த்தாப் பொதுவுடைமையை காந்தியம் வற்புறுத்துகின்றது. ஆனால், உடைமையாளர் மன மாற்றம் அடையத் தவறினால், குறைந்தபட்ச பலாத்காரத்தினால்—அதாவது, சட்டங்களினால் சோசலிச சமுதாயம் படைக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. தனிவுடைமையாளர் மனமாற்றம் அடையும்வரை காத்திருக்க வேண்டுமென்பது காந்தியமன்று.

இந்தியாவின் ஒருமைப்பாடு காக்கப்படவேண்டுமென்பது காந்தியத்தின் உயிர்க்கொள்கை. ஆனால், கிராம ராஜ்ய அடிப்படையில், அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும். 'அரசாங்கம்' என்பது கோயில் கோபுரம்போல, அடிப்புறம் அகன்று நுனிப்புரம் குறுகியிருக்க வேண்டும். ஆம்; கீழேயிருந்து மேலே போக வேண்டும். மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்களை மாநிலங்களுக்கும், மாநிலங்களில் குவிந்துள்ள அதிகாரங்களை கிராமங்களுக்கும் பரவல் முறையில் பங்கிட வேண்டும். அதிகாரங்களை ஒரே இடத்தில் குவிப்பது சோசலிசத்திற்கு விரோதமான தென்பதனை காந்தியம் தெள்ளத் தெளிய உணர்த்துகின்றது.

கல்வி, தாய்மொழியிலே போதிக்கப்படவேண்டும். அத்துடன், உழைப்பு அம்சம் கல்வியிலே கலந்திருக்க வேண்டும். அன்னிய மொழி எதுவாயினும் அது விருப்பப் பாடமாகவே அமைய வேண்டும்.

பட்டதாரிகளுக்கும் சாமான்யர்களுக்கு மிடையில் அதிக இடைவெளி ஏற்படாத வகையில் கல்விமுறை அமையவேண்டும். அது, தாய்மொழியின் வாயிலாகக் கல்வி கற்பதனாற்றான் சாத்தியமாகும்.

பொதுவாக, காந்தியடிகள் சோசலிசத்தை விரும்பினார். சுதந்தரத்திலே சோசலிசம் கலந்திருக்க வேண்டுமென்றும் கூறினார். விஞ்ஞான சோசலிசத்தை எதிர்ப்போர், காந்தியவாதிகளாக மாட்டார்கள். காந்தியமே சோசலிசம்! சோசலிசமே காந்திசம்! வாழ்க, காந்திஸம்!